இரண்டாம் பதிப்பு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 20
பக்கங்கள் - 32

சுடர் 32 | கதிர் 81 | வள்ளுவர் ஆண்டு 2048 | மாசி 03, புதன்கிழமை 15.02.2017

கம நலம்
Govisetha
அதிக கோடீஸ்வரர்களை உருவாக்கும் கம நலம் இப்போது புதன்கிழமைகளிலும்..
கம நலம்
NATIONAL LOTTERIES BOARD

## யாழ்ப்பாணத்திலும் ஒருவருக்கு பன்றிக் காய்ச்சல்

யாழ்ப்பாணம், பெப். 15
பன்றிக் காய்ச்சல் யாழ்ப்பாணத்துக்கும் பரவியுள்ளது. இதனால் பாதிக்கப்பட்ட ஒருவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அடையாளம் காணப்பட்டுள்ளார். » 28

## காணாமல் ஆக்கப்படுதலை குற்றவியல் சட்டமாக்க அமைச்சரவை ஒப்புதல்

கொழும்பு, பெப். 15
பலவந்தமாக காணாமல் ஆக்கப்படுதலைக் குற்றச்செயலாக அறிவிக்கும் சட்டவரைவுக்கு அமைச் சரவை ஒப்புதல் வழங்கியுள்ளதாக, அயலுறவுத்துறை அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார்.
இலங்கை அரசின் அரசமைப்பில், பலவந்தமாகக் காணாமல் ஆக்கப்படுதல் குற்றமாக அறிவிக்கப்பட்டிருக்கவில்லை. » 28

## ஜெனிவாவில் இம்முறை
# இலங்கை குறித்த தீர்மானத்தை பிரிட்டனே கொண்டு வருகிறது

ஜெனிவா, பெப். 15
ஜெனிவா ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை தொடர்பான தீர்மா னத்தை பிரிட்டனே முன் வைக்கவுள்ளதாக அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.
ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 34ஆவது கூட் டத்தொடருக்கான ஒழுங்கமைப்புக் கூட்டம் ஜெனிவாவில் இரண்டு தினங்களுக்கு முன்னர் இடம் பெற்றது. இதன்போதே இந்தத் தக வல் மனித உரிமைகள் சபைக்கு அறிவிக்கப்பட்டது.
பொறுப்புக்கூறல் » 28

## வடக்கு முழுவதும் ஆதரவுப் போராட்டம் நடத்த முழு முயற்சி

முல்லைத்தீவு, பெப். 15
முல்லைத்தீவு மாவட்டத்தில் நிலமீட்புக்காகப் போராடிக் கொண்டிருக்கும் மக்களுக்கு ஆதரவாக, வடக்கு மாகாணம் முழுவதிலும் எல்லாத் தரப்புக்களையும் ஒன்றிணைத்து தொடர்ச்சியாகப் போராட்டம் - முற்றுகை » 28

## சலுகை விலையில் அரிசி விற்பனைக்கு மைத்திரி பணிப்பு

கொழும்பு, பெப். 15
சந்தையில் ஒருபோதும் அரிசிக்குத் தட்டுப்பாடு ஏற்படாத வகையில் மக்களுக்குச் சலுகை விலையில் அரிசியைப் பெற்றுக் கொடுப்பதற்கான முறைமை உடனடியாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். » 28

## விரைவில் பிலக்குடியிருப்பு காணிகள் விடுவிக்கப்படும் என்ற
# வாக்குறுதியை ஏற்பதற்கு மக்கள் மறுப்பு

### அமைச்சர் - அரச தலைவர் சந்திப்பு பயனற்றுப்போனது

பிலக்குடியிருப்பு, பெப்ரவரி 15
காணிகளை விரைவில் விடுவிப்போம்என இராணுவத் தளபதி வழங்கிய உறுதிமொழியை ஏற்பதற்கு பிலக்குடியிருப்பு மக்கள் நேற்று மறுத்துவிட்டனர். அமைச்சர் எம்.சுவாமிநாதனின் அறிவுறுத்தலின் பேரில் இந்த வாக்குறுதி குறித்து முல்லைத்தீவு மாவட்ட செயலாளர் ரூபவதி கேதீஸ்வரன் » 28

# சின்னம்மா சிறையில்!



சென்னை, பெப். 15
சொத்துக் குவிப்பு வழக்கில் அ.தி.மு.க பொதுச் செயலாளர் சசிகலா குற்றவாளி என்று உறுதி செய்து இந்திய உச்சநீதிமன்றம் நேற்றுக் காலை அதிரடித் தீர்ப்பு வழங்கியது. இதையடுத்து அவர் இன்று சிறையில் அடைக்கப்படுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பெங்களூர் சிறப்பு நீதிமன்றம் வழங்கிய சசிகலா உள்ளிட்ட 3 பேர் மீதான 4 ஆண்டுகள் சிறைத் தண்டனைத் தீர்ப்பை புதுடில்லி உச்ச நீதிமன்றம் நேற்று உறுதி செய்தது. முன்னாள் தமிழக முதல்வர் மறைந்த ஜெயலலிதா இந்த வழக்கி லிருந்து விடுவிக்கப்பட்டார்.
சசிகலா உள்ளிட்ட மூவரையும் பெங்க ளூர் நீதிமன்றில் சரணடையுமாறு நீதிமன்றப் பதிவாளரினால் நேற்று மாலை அறிவிக்கப்பட்டது. இந்த நிலையில் அவர்கள் இன்று சிறை யில் அடைக்கப்படுவார்கள்.
வருமானத்துக்கு அதிகமாக சொத்துக்களைக் குவித்தனர் என்ற அடிப்படையில் முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா, அ.தி.மு. கழகத்தின் தற்போதைய பொதுச் செயலாளர் சசிகலா, அவரது உறவினர்களான இளவரசி, சுதாகரன் ஆகியோர் குற்றவாளிகள் எனத் தீர்ப்பிடப்பட்டது. சசிகலா, இளவரசி, சுதாகரன் மூவருக்கும் தலா 4 வருடங்கள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. 10 கோடி தண்டம் செலுத்த வேண்டும் எனவும் உத்தரவிடப்பட்டது. சசிகலா » 28

## புலிகள் பாவித்த ஆட்லறி குண்டுகள் 4 காட்டுக்குள் மீட்பு



முல்லைத்தீவு, பெப்.15
வான் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள முல்லைத்தீவு, அம்பகாமம் காட்டுக்குள் விடுதலைப் » 28

## புலம்பெயர்ந்தோர் நிதி ஆதரவில்
# வடக்கு மாகாணத்தில் தனியார் மருத்துவக் கல்லூரி நிறுவப்படும்

### உயர் கல்வி அமைச்சர் தகவல்

கொழும்பு,பெப்.15
பெரும்பாலும் புலம்பெயர் சமூகங்களின் நிதி ஆதாரங்களோடு தனியார் மருத்துவக்கல்லூரி ஒன்றை வடக்கு மாகாணத்தில் நிறுவுவதுபற்றி அரசு ஆலோசித்து வருகின்றது. இந்தத் தகவலை வெளியிட்டுள்ள உயர் கல்வி அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல, தகுதிகள் பெற்றிருந்தும் அரச பல்கலைக்கழகங்களுக்குச் செல்ல அனுமதி கிடைக்காமல் இருக்கும் மாணவர்களின் மேம்பாட்டுக்கு உதவும் அரசின் கொள்கைக்கு ஏற்ப இது மேற்கொள்ளப்படவிருப்பதாகக் » 28

## போராட்டத்தை பைனாக்குலரில் கண்காணிக்கும் வான் படையினர்

முல்லைத்தீவு, பெப். 15
பிலக்குடியிருப்பு போராட்டக் களத்துக்கு வந்து » 27

## கூட்டாட்சிக்குப் பதிலாக
# அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வு குறித்துப் பேசக் கூட்டமைப்புத் தயார்

### சுமந்திரன் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, பெப்.
கூட்டாட்சிக்குப் பதிலாக அர்த்தமுள்ள வகையில் அதிகாரப் பகிர்வு தொடர்பாகக் கலந்துரையாடுவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தயாராக உள்ளது.
இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.
பி.பி.சி. செய்திச் » 04

## தி.மு.க. என்ற கட்சி இருக்கக் கூடாது

### சிறைக்குச் செல்ல முன் நடந்த கட்சிக் கூட்டத்தில் சசிகலா ஆவேசம்

சென்னை, பெப். 15
அ.தி.மு.க.வை அழிக்க நினைக்கும் தி.மு.க. என்ற ஒரு கட்சி இருக்கவே கூடாது. இவ்வாறு சிறைக்குள் செல்வதற்கு முன் கூவத்தூரில் இடம்பெற்ற கட்சிக் கூட்டத்தில் சசிகலா ஆவேசமாகப் பேசினார்.
கூவத்தூர் சொகுசு விடுதியில் சட்டமன்ற உறுப்பினர்கள் கூட்டம் சசிகலா தலைமையில் நேற்றிரவு இடம் பெற்றது. அவர் மேலும் தெரிவித்ததாவது: » 04

## ஆஸி. அரச தலைவரை இன்று சந்திக்கிறார் ரணில்

மெல்பேர்ன், பெப். 15
ஆஸ்திரேலியாவுக்கான உத்தியோகபூர்வ பயணத்தை மேற்கொண்டுள்ள தலைமை அமைச்சர் ரணில் » 28

## புதுக்குடியிருப்பு மக்களின்
## சுழற்சி முறை உணவு ஒறுப்பு போராட்டம் நேற்று ஆரம்பம்

முல்லைத்தீவு, பெப். 15
காணிகளை விடுவிக்கக் கோரி புதுக்குடியிருப்பு மக்கள் நேற்றுத் தொடக்கம் நீராகாரம் எதுவுமின்றி உணவு ஒறுப்புப் போராட்டத்தை திட்டமிட்டவாறு ஆரம்பித்தனர். » 28



# வடக்கு ஆசிரியர்கள் சிலரின் போராட்டம் தொடர்கிறது

யாழ்ப்பாணம், பெப்.15

வடக்கு மாகாண கல்வித்திணைக்களத்தால் ஆசிரியர்கள் சிலருக்கு விதிக்கப்பட்ட பணித்தடையை நீக்குமாறு வலியுறுத்தி, வடக்கு மாகாணக் கல்வியமைச்சின் அலுவலகத்துக்கு முன்பாக ஆசிரியர்கள் சிலர் முன்னெடுத்து வரும் போராட்டம் நேற்று இரண்டாவது நாளாகவும் தொடர்ந்தது.

நேற்று முன்தினம் இரவு குடா நாட்டில் கடும் மழை கொட்டிய போதும் போராட்டத்தில் கலந்து கொண்டுள்ளவர்கள் இடைவிடாது தமது தொடர்ச்சியான போராட்டத்தை மேற்கொண்டனர்.

இந்தப் போராட்டத்தின் தீர்வுக்குத் தென்னிலங்கை அரசியல்வாதிகளை நாடுவது எமக்கு இலகுவான காரியம். நாம் அவ்வாறு செல்ல விரும்பவில்லை. இலங்கை ஆசிரியர் சங்கம் தமிழர்களுடைய சுயநிர்ணய உரிமையையும், வடக்கு, கிழக்கு இணைப்பினையும், மாகாண சபை அதிகாரங்களையும் ஏற்றுக் கொள்கிற அமைப்பாகும். வடக்கு மாகாண சபையை மதித்து நியாயமான முறையில் எமது கோரிக்கைகளை முன்வைத்துள்ளோம். எனினும் எந்தவொரு அரசியல் தலைமையும் போராட்டத்தில் ஈடுபட்டிருப்பவர்களை இதுவரை சந்தித்துக் கலந்துரையாடவில்லை. எமது போராட்டம் உக்கிரமடையும் நிலை ஏற்பட்டுள்ளது என்று போராட்டத்தில் கலந்து கொண்டுள்ள இலங்கை ஆசிரியர் சங்கத்தின் உப தலைவர் தீபன் திலீசன் தெரிவித்தார்.

ஆசிரியர்களின் போராட்டத்துக்கு யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் மற்றும் ஊழியர் சங்கம், வடக்கு மாகாண ஆசிரியர் சேவை சங்கம், புதிய ஜனநாயக மார்க்சி லெனினிஸக் கட்சி, சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பு உள்ளிட்ட அமைப்புக்களும் தமது ஆதரவினைத் தெரிவித்துள்ளன.

***பின்னணி***

பின்தங்கிய பிரதேசப் பாடசாலைகளில், 5 ஆண்டுகளுக்கு மேலாக கடமையாற்றிய ஆசிரியர்கள் தமக்கு இடமாற்றம் வழங்க வேண்டும் என்று வலியுறுத்தி கடந்த மாதம் கல்வி அமைச்சின் முன்பாக ஆர்ப்பாட்டம் ஒன்றில் ஈடுபட்டனர். இதன்போது வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ரவீந்திரனுக்கும் ஆசிரியர்கள் சிலருக்கும் முரண்பாடு ஏற்பட்டது. இதனால் 3 ஆசிரியர்கள் ஒழுக்காற்று நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டனர். அவர்களுக்கு பணித்தடை விதிக்கப்பட்டது. (வ-21)

# கொழும்பு நோக்கி வாகனப் பேரணி

## சைட்டமுக்கு எதிர்ப்புத் தெரிவித்து பல்கலை. மாணவர்களால் ஏற்பாடு

கொழும்பு, பெப். 15

மாலபே சைட்டம் தனியார் மருத்துவக் கல்லூரிக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் இன்று முதல் நாட்டின் பல பாகங்களிலும் இருந்து கொழும்பை நோக்கி வாகனப் பேரணிகளை மேற்கொள்வதாக அறிவித்துள்ளது.

மருதானை சீ.எஸ்.ஆர் மண்டபத்தில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் உரையாற்றிய அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் லகிரு வீரசேகர மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கண்டி, கராப்பிட்டி, குளியாப்பிட்டி, அநுராதபுரம் மற்றும் இரத்தினபுரி ஆகிய நகரங்களிலிருந்து ஆரம்பமாகும் வாகனப் பேரணிகள் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை கொழும்பை வந்தடையும்.

இலவசக் கல்வியைப் பதுகாப்பதற்காகப் போராடும் சகல தரப்பினரதும் கோரிக்கை சைட்டம் தனியார் மருத்துவக் கல்லூரியை முற்றாக தடை செய்ய வேண்டும் என்பதே. அந்தக் கோரிக்கையை அரசு தட்டிக்கழித்து வருகின்றது. அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் வகையிலேயே மேற்படி போராட்டம் நடத்தப்படவுள்ளது - என்றார். (வ-5)

# வெற்றிகளை அடைவதாயின் தோல்விகளைச் சந்தியுங்கள்

## ஆஸி. பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவில் தலைமை அமைச்சர் தெரிவிப்பு

**(மெல்பேர்னில் இருந்து இ.அ.தேவறாஜன்)**

மெல்பேர்ன், பெப் 15

தோல்விகளின் மூலமே வெற்றியை அடைய முடிகின்றது. ஆகவே வாழ்க்கையில் ஏற்படும் தோல்விகளுக்குச் சளைக்காமல் முகம்கொடுங்கள்.

இவ்வாறு தெரிவித்தார் இலங்கை தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க.



ஆஸ்திரேலியாவின் மெல்பேர்ன் நகரில் அமைந்துள்ள டீகின் பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு வைபவம் நேற்று நடைபெற்றது. இந்தப் பட்டமளிப்பு விழாவில் தலைமை அமைச்சருக்குக் கௌரவ கலாநிதிப்பட்டம் வழங்கிக் கௌரவிக்கப் பட்டது. அரசியல் மற்றும் பொருளாதார, கல்வி மற்றும் மனித உரிமைகள் போன்ற துறைகளை மேம்படுத்த ஆற்றிய பணிகளுக்காக இந்தக் கௌரவ கலாநிதிப் பட்டம் வழங்கப் பட்டது.

இந்த வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே தலைமை அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வாழ்க்கைப் பயணத்தில் முயற்சிக்க வேண்டியது விழாமல் இருப்பதற்கன்றி, விழும் போதெல்லாம் மீண்டும் மீண்டும் எழுந்து நிற்கும் பலத்தை ஏற்படுத்திக் கொள்வதற்கே.

டீகின் பல்கலைக்கழகத்துக்கும் இலங்கைக்குமிடையே சிறப்புத் தொடர்புகள் காணப்படுகின்றமையால், நான் அது தொடர்பாக மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். ஆஸ்திரேலியாவின் முன்னாள் அரச தலைவர் அல்பிரட் டீகினை நினை கூரும் நோக்கிலேயே இந்தப் பல்கலைக் கழகத்துக்குப் பெயரிடப்பட்டது.

அல்பிரட் டீகின் 1893 ஆம் ஆண்டு இலங்கைக்கு வருகை தந்தார். 1000 வருடங்களை விடவும் பழமை வாய்ந்த இலங்கையின் நீர்ப்பாசனத் தொழில்நுட்பம் தொடர்பான ஓர் ஆய்வில் ஈடுபடவே அவர் வருகை தந்தார். இது தொடர்பான விடயங்கள் அதிகமானோருக்குத் தெரியாது. அதே போன்று டீகின் பல்கலைக்கழகத்தின் சட்ட பீடத்தின் கீழ் இலங்கையின் தொழில்சார் சட்டவியலாளர்கள் பயிற்சி பெறு கின்றனர். பல இலங்கை மாணவ மாணவியர் இந்தப் பல்கலைக்கழ கத்தில் கல்வி கற்கின்றனர். அவர்களில் சிலர் இன்று பட்டத்தைப் பெற்றுக் கொள்கின்றனர்.

நானும் எனது வாழ்வுக்குப் பல்கலைக் கழகத்தின் மூலமே ஒளியைப் பெற்றுக் கொண்டேன். பட்டமொன்றைப் பெற்றுக் கொள்வதென்பது எந்தவித எல்லைகளுமற்ற பூமியில் நீண்ட மரதன் போட்டியில் ஈடுபடுவதைப் போன்ற செயன்முறையாகும்.

நீங்கள் இன்று டீகின் பல்கலைக் கழகத்திலிருந்து வாழ்க்கைப் பல்கலைக்கழகத்துக்கு வெளியேறிச் செல்கிறீர்கள். அந்தப் பல்கலைக் கழகத்தில் தாழ்மையாக நடந்து கொள்ளுங்கள். பிறரிடமிருந்து கற்றுக் கொள்ளுங்கள்.

நாம் வெற்றி கொள்ளும் இலக்கு பெரும்பாலும் எமது எதிர்பார்ப்புக்களை விடவும் வித்தியாசமானதாக இருக்கலாம். இது எனக்கும், எனது சகாக்கள் பலருக்கும் பொதுவான ஒரு விடயம்.

நாம் சட்டத்தைக் கற்கும் காலத்தில் மனித உரிமைகள், புலமைச் சொத்துக்கள், சமுத்திரச் சட்டம் போன்றன தொடர்பாக எதுவும் காணப்படவில்லை. உலக வர்த்தக அமைப்பு உருவாக வில்லை. மருத்துவ விஞ்ஞானத்தை எடுத்துக் கொண்டாலும், இருதய சத்திர சிகிச்சை, உடற் பாகங்களைப் பொருத்துதல் போன்றன தொடர்பாக எதுவும் அறிந்திருக்கவில்லை. எமது காலத்தில் கணினி என்ற ஒன்று இருக்கவில்லை.

இன்று உலகம் மாற்றமடைந்துள்ளது. அதனோடு சேர்ந்து நாமும் மாற்றமடைந்துள்ளோம். அதன் காரணமாகப் பல வாய்ப்புக்கள் புதிதாக உருவாகியுள்ளன. 4 ஆம் கைத்தொழிற் புரட்சி, இணையத் தளம், மருத்துவ விஞ்ஞானத்தின் புதிய கண்டுபிடிப்புக்கள், இலத் திரனியல் நிதிக் கொடுக்கல் வாங்கல்கள் இன்று நம் முன்பே யதார்த்தமானவையாக மாறியுள்ளன. இந்த மாற்றம் தொடர்ந்து எதிர்காலத்திலும் இடம் பெறும். மேலும் பல புரட்சிகரமான மாற்றங்களை எதிர்காலத்தில் கண்டுகொள்ளலாம். அதன் காரணமாக புதிய தொழில் வாய்ப்புக்களைப் போன்றே புதிய முதலீட்டு வாய்ப்புக்களும் உருவாகின்றன. இந்த வாய்ப்புக்களைப் பயன்படுத்திக் கொள்ள ஒருபோதும் பின்னிற்கவேண்டாம் - என்றார். (த)

# எல்லை நிர்ணய அறிக்கை வெள்ளியன்று வர்த்தமானிக்கு

கொழும்பு, பெப். 15

உள்ளூராட்சி சபைக்களுக்கான எல்லை நிர்ணய அறிக்கை வர்த்தமானியில் வெளியிடுவதற்காக நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை அரசஅச்சகத்துக்குஒப்படைக்கப்படும் என்று மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகள் அமைச்சின் செயலாளர் கமல் பத்மசிறி தெரிவித்தார். (வ)

# பன்னாட்டுத் தரத்துக்கு ஏற்ப வடக்கில் உணவு வகைகள்

## *விழிப்புணர்வு செயற்றிட்டம் ஆரம்பம்*

யாழ்ப்பாணம், பெப். 15

பன்னாட்டுத் தரத்துக்கு ஏற்ற வகையில் வடக்கு மாகாணத்தில் உணவு வகைகளைத் தயாரிக்கும் முறைமையைக் கொண்டுவருவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப் படுகின்றன என்று யாழ்ப்பாண வர்த்தகத் தொழிற்றுறை மன்றத்தின் தலைவர் கே.விக்னேஷ் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் பொது நூலகத்தில் நேற்றையதினம் மன்றத்தால் நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கின் உணவு வகைகளின் தரத்தை உயர்த்தும் வகையில் விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. எமது பிரதேச உணவின் தரத்தை உயர்த்த ஜேர்மனி பிரிபி என்ற நிறுவனம் முக்கிய பங்கு வகிக்கின்றது. இந்த நிகழ்ச்சித் திட்டத்தில் யாழ்ப்பாண வர்த்தக தொழிற்றுறை மன்றம் மற்றும் வடக்கு மாகாண சுகாதாரத் திணைக்களமும் முக்கிய பங்குதாரர்களாக உள்ளன. வடக்கு மாகாணத்தின் உணவு வகைகளைப் பன்னாட்டுத் தரத்துக்குக் கொண்டு வரவேண்டும் என்பதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும்.எமது பிரதேசங்களில் அதிகளாவான நோய்கள் வருவதற்கு முக்கிய காரணியாக அமைவது எம்மிடம் இருக்கின்ற சீரற்ற உணவுகளாகும். எனவே அவற்றை சீர் செய்வதற்கு இந்த நிகழ்ச்சித் திட்டம் வழிவகுக்கும். மேலும் உணவுப் பண்டங்களைப் பராமரிப்பதில் நாங்கள் இன்னும் பல விடயங்களை அறிந்து கொள்ளவேண்டிய நிலையில் உள்ளோம்.

பாரம்பரிய உணவுகளை மட்டும் நாங்கள் ஓரளவு கையாண்டு வருகின்றோம்.எனினும் தற்போதுள்ள உணவு வகைகளைக் கையாள்வதற்கு சிறந்த கையாள்வு முறைமை இல்லாமை இருக்கின்றது. இலங் கையில் சுற்றுலாத்துறையில் முன்னேற்றத்தைக் காண்பதற்கு உணவு முக்கிய பங்கு வகிக்கின்றது. இந்தத் திட்டம் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் உத்தியோக பூர்வமாக ஆரம்பிக்கப்பட்டது.அத்துடன் எதிர்வரும் 2019ஆம் ஆண்டு வரை திட்டம் முன்னெடுக்கப்படும். இந்தத் திட்டத்தில் முதற்கட்டமாகத் தெரிவு செய்யப்படவுள்ள 300 பேருக்கும் பயிற்சிகள் வழங்கப்பட்டு அவர்களில் சிறப்பாகச் செயற்படுபவர்களுக்குச் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன - என்றார். (வ-8)

# கூட்டு அரசு மீதான மக்களின் நம்பிக்கை சிதைந்துவிட்டது

## இப்படிக் கூறுகிறது மகிந்த அணி

கொழும்பு, பெப். 15

நிதி முகாமைத்தும் மற்றும் தேசிய பொருளாதாரக் கொள்கைகளில் வினைத்திறனற்ற போக்கை தற் போதைய அரசு கடைப்பிடித்து வருகின்றது. பன்னாட்டின் நம்பகத் தன்மை பாதிக்கப்பட்டுள்ளது. அரசின் மீதான மக்களின் நம்பிக்கையும் சிதைந்துவிட்டது என்று மகிந்த அணி குற்றம் சாட்டியுள்ளது.

பொரளையில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

100 நாள் செயற்றிட்டத்தின் கீழ் ஆட்சிபீடமேறிய இடைக்கால அரசு, பட்டப்பகலில் மத்திய வங்கியைக் கொள்ளையிட்டு, அதன் நம் பிக்கைத்தன்மைக்குப் பாதிப்பை ஏற்படுத்தியது. இந்தக் கொள்ளையால் இலங்கையில் முதலீடு செய்திருந்த வெளிநாட்டு நிறுவனங்கள் தங்கள் முதலீட்டை மீளப்பெற்றுக் கொண்டுள்ளன. இலங்கைக்கு 2 மில்லியன் அமெரிக்க டொலருக்கு மேற்பட்ட அளவு நட்டம் ஏற்பட்டது.

அரச தலைவருக்கான தேர்தல் காலப்பகுதியில் மத்திய வங்கியி லிருந்து 5 ஆயிரம் ரூபாய் நோட்டுகள் எடுக்கப்பட்டு அவை தேர்தலுக்காகப் பகிர்ந்தளிக்கப்பட்டன என்று நிதி அமைச்சர் அண்மையில் தெரிவித்தார். அவ்வாறான பொய்யொன்றைக் கூறி இலங்கையின் நாணயத்தின் மீதான நம்பிக்கையையும் அமைச்சர் பாதிப்புக் குள்ளாக்கினார்.

கடன் புள்ளிவிவரங்களை மாற்றி மக்களைத் திசை திருப்பியதால் இலங்கை அரசு கடன் தொடர்பில் தெளிவில்லை என்ற அவப்பெயர் வந்துள்ளது. இந்த அவப்பெயரை இந்த அரசே ஏற்படுத்தியது. அரசின் இது போன்ற தவறான செயற்பாடுகளால் இந்த அரசு மீது மக்கள் கொண்டுள்ள நம்பிக்கை சிதைந்துவிட்டது - என்றார். (வ-5)

# அரச பணியாளர் விடயங்களை கையாள்வதற்கு மூன்று குழுக்கள்

யாழ்ப்பாணம், பெப். 15
அரச தலைவருடைய பணிப்புக்கு அமைய அரச திணைக்களங்களில் பணியாற்றும் பணியாளர்களுடைய பதவி உயர்வு, இடமாற்றம், வேதனம், கொடுப்பனவுகள் மற்றும் ஏனைய விடயங்களைக் கையாள்வதற்கு மூன்று குழுக்கள் நியமிக்கப்படவுள்ளன.

இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

அரச நிறுவனங்களில் ஊழியர்களுக்கான தினம் பிரகடனப்படுத்துதல், நடைமுறைப்படுத்தல் தொடர்பான நிகழ்வு நேற்று நடைபெற்றது. பண்ணை உதவி உள்ளூராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

இந்த நிகழ்வு சற்று மாறுபட்ட ஒரு விடயத்தை உள்ளடக்கியதாகும். இதுவரை திணைக்களங்களில், அலுவலகங்களில் அந்தந்தத் திணைக்கள மற்றும் அலுவலக தலைவர்கள் மேற்கொள்ளும் கட்டளைகளுக்கு அமையவே ஊழியர்கள், உத்தியோகத்தர்கள்தமது கடமைகளை ஆற்ற வேண்டிய நிலைப்பாடு காணப்பட்டது.

அவர்களின் இடமாற்றங்கள், நியமனங்கள், பதவி உயர்வுகள், வேதன உயர்வுகள் என்பன அதிகாரிகளின் கைகளிலேயே தங்கியிருந்தன. அவர்களின் தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்களும் எல்லா நேரங்களில் இல்லாவிடினும் சில சந்தர்ப்பங்களில் செல்வாக்குச் செலுத்தியிருக்கக்கூடும். இவற்றை எல்லாம் கருத்திற் கொண்டு அரச தலைவர் ஒரு வித்தியாசமான கோணத்தில் இந்தப் பிரச்சினைகளை அணுக விரும்பினார்.

அதற்கான ஒரு மேடையை சாதாரண அடிமட்ட உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களுக்கு அமைத்துக் கொடுக்க வேண்டும் என்ற நோக்கில் இந்த நிகழ்வை இலங்கையிலுள்ள அனைத்து திணைக்களங்களிலும் சகல அரச நிறுவனங்களிலும்நடத்துமாறு பணிப்புரை வழங்கியுள்ளார்.

பதவி உயர்வு, இடமாற்றம் போன்றவிடயங்களைக்கையாள்வதற்கு மாகாண பொதுச் சேவை ஆணைக் குழுவின் தலைமை ஆணையாளர், பிரதிப் பிரதம செயலாளர் (நிர்வாகம்), மற்றும் அவர்களின் அலுவலக நிர்வாக உத்தியோகத்தர் ஆகியோரைக் கொண்ட ஒரு சபையையும், வேதனம் மற்றும் கொடுப்பனவுகள் தொடர்பான விடயங்களுக்கு பிரதிப் பிரதம செயலாளர் (நிதி) மற்றும் உதவி பிரதிப் பிரதம செயலாளர் (நிதி) ஆகியோரைக் கொண்ட ஒரு குழுவும், ஏனைய விடயங்களுக்கு மூன்று பிரதிச் செயலாளர்களைக் கொண்ட ஒரு குழுவுமாகச் சேர்ந்து மூன்று குழுக்கள் அமர்த்தப்படவுள்ளன.

ஜனாதிபதியின் தீர்மானம் நல்லதே என்றபோதும், அதை நடைமுறைப்படுத்தும் விதம் சிக்கல் மிகுந்து காணப்படும் என்றே நம்புகின்றேன். ஒவ்வொரு திணைக்களத்துக்கும் சுதந்திரமான குறைகேள் அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தால் நன்மை பயந்திருக்கும். இந்த முறை ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் அரச திணைக்களங்களில் கடமையாற்றிய அரச உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட சில சலுகைகளை ஒத்ததாக அமைந்துள்ளது.

இன்று தொடங்கப்படும் இந்த நடைமுறை சிறிது காலத்தில் கைவிடப்படலாம்.

நியமனம், பதவி உயர்வு, இடமாற்றம், வேதனம், கொடுப்பனவுகள் இன்னோரன்ன விடயங்களைக் கவனிக்கும் அலுவலர்களிடமே உத்தியோகத்தர்கள் தமது குறைகளைக் கூறுங்கள் என்று கூறுகின்றோம். இது எந்தளவுக்குப் பயன் அளிக்கும் என்று கூறமுடியாது. இந்தப் பொறிமுறை வரவேற்கப்பட வேண்டியதொன்று. நல்லாட்சியைப் பேண எடுத்த ஒரு நடவடிக்கையாகவே இதைக் காண்கின்றேன்.

வெளிப்படைத் தன்மை, பொறுப்புக் கூறல், நியாயமான நீதியான தீர்மானங்கள் எடுத்தல் போன்ற பலவும் நல்லாட்சியின் அம்சங்கள். அவை நடை முறைப்படுத்தப்பட வேண்டும். இந்த குறைகேள் மையமானது உங்களுடைய குறைகளில் நிவர்த்தி செய்யப்படக்கூடிய, நிவர்த்தி செய்யப்படவேண்டிய குறைகள் பற்றிக் கவனமாக ஆராய வேண்டும். நீங்கள் முன்வைக்கின்ற அனைத்துக் கோரிக்கைகளும் உங்களுக்குச் சாதகமாகப் பரிசீலிக்கப்படும் என நீங்கள் எதிர்பார்க்க முடியாது. குழுக்களின் அதிகாரங்கள் ஊழியர்களின் மனோ நிலைகளைப் புரிந்துகொண்டு அவர்களுக்கு முறையாக வழிகாட்டி அவர்களை வல்லவர்களாக, சிறந்த உத்தியோகத்தர்களாக, ஊழியர்களாக, திணைக்களத்தின் மீது விசுவாசம் கொண்டவர்களாக மாற்றப்பாடுபடலாம் - என்றார். (ற-21,10)



# கிளிநொச்சி பேருந்து நிலையம் குறித்து நேற்று கலந்துரையாடல்

கிளிநொச்சி, பெப்.15
கிளிநொச்சி மாவட்டத்துக்கான பேருந்து நிலையம் அமைப்பது தொடர்பான கலந்துரையாடல் நேற்றுக் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது. கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில் பேருந்து நிலையம் அமைப்பதற்கான திட்ட முன் மொழிவுகள் மற்றும் அமைவிடம் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

கிளிநொச்சி டிப்போ சந்திக்கு அருகாமையில் பேருந்து நிலையம் அமைப்பதற்கு ஒதுக்கப்பட்ட இடத்தையும் கலந்துரையாடலில் கலந்து கொண்டவர்கள் நேரில் சென்று பார்த்தனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், வடமாகாண நகர அபிவிருத்திப் பணிப்பாளர், வடமாகாண தனியார் போக்குவரத்து சபைத் தலைவர்,தேசிய போக்குவரத்து ஆணைக் குழு உத்தியோகத்தர்கள், மாவட்ட வீதி அதிகார சபை உத்தியோகத்தர்கள், கரைச்சி பிரதேச செயலாளர், கிளிநொச்சி பொலிஸ் உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்துரையாடலில் கலந்து கொண்டனர். (ற-21)

# பொலிஸ் அத்தியட்சகருக்கு பதவி உயர்வு

கொழும்பு பெப்.15
பொலிஸ் குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் பொறுப்பதிகாரியான பொலிஸ் அத்தியட்சகர் ஜீ.ஷானி அபேசேகரவுக்கு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகராக பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

பொலிஸ் மா அதிபரின் பரிந்துரைக்கு அமைய தேசிய பொலிஸ் ஆணைக் குழு இந்த நியமனத்துக்கான அனுமதியை வழங்கியுள்ளது.

2016 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 25 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்தது.

ஷானி அபேசேகர தலைமையிலான குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகள் பல முக்கிய சம்பவங்கள் தொடர்பான விசாரணைகளை திறம்பட நடத்தி வருபவர்கள் என பொலிஸ் திணைக்களத்தின் தகவல்கள் தெரிவித்தன. (ற)

# பெண்ணை தள்ளி வீழ்த்தி கைப்பை கொள்ளை

யாழ்ப்பாணம், பெப்.15
பட்டப் பகலில் முகமூடி அணிந்த இரு இளைஞர்கள் வீதியில் சென்ற பெண்ணைத் தள்ளி விழுத்தி அவரது கைப் பையைக் கொள்ளையடித்துச் சென்றனர்.

இந்தச் சம்பவம் நேற்று யாழ்ப்பாணம் இராசாவின் தோட்டத்தில் நடந்துள்ளது. அந்தப் பகுதியை சேர்ந்த 40 வயது மதிக்கத்தக்க பெண் ஒருவர் தனது துவிச் சக்கரவண்டியில் பயணித்துள்ளார். அப்போது பின்புறமாக வந்த இளைஞர்கள் பெண்ணைத் தள்ளி விழுத்தி விட்டு அவரது சைக்கிளில் இருந்த கைப்பையைக் கொள்ளையடித்துத் தப்பினர்.கைப்பைக்குள் கடனுக்கான வட்டியை செலுத்துவதற்காகப் பெண் வங்கியில் பெற்றுக்கொண்ட 3 ஆயிரத்துக்கும் அதிகமான பணமும், கையடக்கத் தொலைபேசியும், அடையாள அட்டைகள் உள்ளிட்ட பல்வேறு ஆவணங்களும் இருந்தன என்று தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.(ற-106)

# தாராபுரத்தில் சட்டவிரோதமாக கட்டடம் கட்டும் அரசியல்வாதி

## பிரதேச மக்கள் குற்றச்சாட்டு

மன்னார், பெப்.15
மன்னார், தாராபுரம்கடலுடன் இணைந்த பிரதேசத்தில் அனுமதி இன்றி 4 கட்டடங்கள் கட்டப்படுகின்றன என்று பிரதேச மக்கள் குற்றஞ்சாட்டினர். அந்தக் கட்டடங்களை வடக்கு மாகாண சபை உறுப்பினர் ஒருவரே அமைக்கின்றார் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

இந்தக் கட்டடங்களை அமைக்க எந்த சட் அனுமதியும் பெறப்படவில்லை. அவற்றின் கட்டுமானம் நிறைவுறும் நிலையில் உள்ளது. கடற்கரையில் அமைக்கப்படும் கட்டடங்களுக்கு கரையோர சுற்றுச் சூழல் திணைக்கத்தின் அனுமதியோ அல்லது பிரதேச சபையினது அனுமதியோ பெறப்பட வேண்டும். அவ்வாறு அனுமதி பெறப்படவில்லை.

கட்டடங்கள் தென்னிலங்கை ஒப்பந்த நிறுவனம் மூலம் அமைக்கப்படுகின்றன. அரசியல்வாதிகள் அடாத்தாக நடக்கும்போது உறக்கத்தில் இருக்கும் அதிகாரிகள், பாமர மக்கள் வதிவிடம் அமைக்கும்போதே விழித்துக் கொள்கின்றனர்- என்று பிரதேச மக்கள் விசனம் தெரிவித்தனர்.

அந்தப் பகுதியில் கட்டடம் அமைக்கப்படும் விடயம் கடந்த 6 நாள்களுக்கு முன்னரே தெரியவந்தது. இதுவரை அந்தக் கட்டடங்களுக்கு எந்த அனுமதியும் பெறப்படவில்லை. அங்கு பணிபுரிபவர்கள் கட்டடத்தின் உரிமையாளரின் பெயரைக் கூற மறுக்கின்றனர். முதற்கட்டமாக கட்டுமானப் பணிகளுக்குத் தடை விதித்துள்ளோம்.

கட்டடத்தின் உரிமையாளர் இனங்காணப்பட்டு அவர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்- என்று மன்னார் பிரதேசசபையினர் தெரிவித்தனர். (ற-101)



# நிதி மோசடி பிரிவினருக்கு பயப்படத் தேவையில்லை

## அமைச்சர் ராஜித தெரிவிப்பு

கொழும்பு பெப்.15
சுகாதார சேவையின் நன்மைக்காக கடமைகளைச் செய்யும் போது பொலிஸ் நிதி மோசடி விசாரணைப் பிரிவுக்குப் பயந்து செயற்படத் தேவையில்லை.


இவ்வாறு சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

நேற்று நடைபெற்ற அம்பாந் தோட்டை மாவட்ட சுகாதார நிறுவனங்களின் தலைவர்களின் கூட்டத்தில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது;

சில அரச அதிகாரிகள் பொலிஸ் நிதி மோசடி விசாரணைப் பிரிவுக்கு அஞ்சி தமது கடமைகளை மந்தமான நிலைக்குக் கொண்டு சென்றுள்ளனர்.

நிதி மோசடி விசாரணைப் பிரிவுக்குப் பயந்து கடமைகளை செய்ய வேண்டாம். பிரச்சினைகள் ஏற்பட்டால் அதற்கான பொறுப்பை நான் ஏற்றுக்கொள்கிறேன்- என்றார். (ற)



ஆஸ்திரேலியாவுக்குப் பயணம் மேற்கொண்டுள்ள இலங்கைத் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுக் காலை விக்டோரியா மாநில ஆளுநர் லிண்டா திசோவை ஆளுநர் இல்லத்தில் சந்தித்துப் பேசினார். (த)

# ஓ.பன்னீர்செல்வத்துடன் நேற்று இணைந்தார் தீபா

சென்னை, பெப். 15

எனது அரசியல் பிரவேசம் இன்று (நேற்று) தொடங்குகின்றது. நானும் முதல்வர் பன்னீர்செல்வமும் அ.தி.மு.கவின் இரு கரங்களாக செயல்படுவோம்.

இவ்வாறு ஜெயலலிதாவின் அண்ணன் மகள் தீபா கூறினார்.

முதல்வர் பன்னீர் செல்வம் தனது ஆதரவு சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களுடன், ஜெயலலிதாவின் நினைவுத் தூபிக்கு நேற்று இரவு சென்றார். அங்கு தீபாவும் வந்தார். இருவரும் அஞ்சலி செலுத்தினர். இதன் பின்னர் கருத்துத் தெரிவித்த தீபா, எனது அரசியல் பிரவேசம் இன்று (நேற்று) தொடங்குகின்றது. நானும் முதல்வர் பன்னீர்செல்வமும் அ.தி.மு.கவின் இரு கரங்களாக செயல்படுவோம். ஜெயலலிதா விட்டுச் சென்ற பணிகளை இருவரும் இணைந்து தொடர்வோம். சசிகலா செல்ல வேண்டிய இடத்துக்குச் சென்றுள்ளார் - என்றார்.



இதன் பின்னர், தீபா முதல்வர் ஓ.பன்னீர்ச்செல்வத்தின் இல்லத்துக்குச் சென்றார். அங்கு தீபாவுக்கு ஆரத்தி எடுத்து வரவேற்பு கொடுக்கப்பட்டது. (வ-5)

# நாடக அரங்கியல் கற்கை நெறிக்கு விண்ணப்பங்கோரல்

யாழ்ப்பாணம், பெப். 15

திருமறைக் கலாமன்றத்தின் நாடக அரங்கியலுக்கான சான்றிதழ் கற்கைநெறியின் 2017ஆம் ஆண்டுக்கான புதிய பிரிவுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

நாடகக் கலையின் மேம்பாடு கருதி, செயன்முறை சார்ந்த தேர்ச்சியை மேம்படுத்தும் நோக்கோடு திருமறைக் கலாமன்றத்தின் நாடகப்பயிலகம் கடந்த 25 வருடங் களாக கற்கை நெறியை நடத்தி வருகின்றது.

இந்தப் பயிற்சிநெறியில் நாடகக் கலையில் ஆர்வம் உள்ளவர் களும், நாடகமும் அரங்கியலும் பாடத்தை தரம் 11,12,13 இல் பயிலும் ஆர்வமுள்ள மாணவர்களும் இணைந்து கொள்ள முடியும். ஆறு மாதங்களைக் கொண்ட இந்தப் பயிற்சிநெறிக்கான வகுப்புக்கள் சனி, ஞாயிறு தினங்களில் பி.ப 3.30 மணி தொடக்கம் 5.30 மணி வரை நடைபெறவுள்ளதுடன் போயா தினங்களில் முழுநாள் நாடகப் பட்டறையாகவும் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 25ஆம் திகதி சனிக் கிழமை மாலை 4 மணிக்கு ஆரம்பித்து வைக்கப்படவுள்ள இந்தப் பயிற்சிநெறியில் இணைந்து கொள்ள விரும்புவோர் விண்ணப்பப்படிவங்களை திருமறைக் கலா மன்றத்தின் அலுவலகத்தில் பெற்று முழுமைப்படுத்தி எதிர்வரும் 21ஆம் திகதி செவ்வாய்க்கிழமைக்கு முன்பாக மீள ஒப்படைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (வ-10)

# அடாவடி செய்த இளைஞன் ஊரவர்களால் நையப்புடைப்பு

## அளவெட்டியில் நேற்றிரவு சம்பவம்

யாழ்ப்பாணம், பெப். 15

அளவெட்டிப் பகுதியில் ஊரவர்களுடன் தகராறு செய்த இளைஞனை கிராமத்தவர்கள் ஒன்றிணைந்து மின்கம்பத்தில் கட்டி வைத்துப் பின்னர் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். இந்த இளைஞன் போதைப் பொருள் பாவனைக்கு அடிமையானவர் என்று ஊர்மக்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

அளவெட்டிப் பகுதியில் நேற்று இரவு 8 மணியளவில் இளைஞர் ஒருவர் ஊரவர்களுடன் தகராறில் ஈடுபட்டுள்ளார். அவரைக் கட்டுப்படுத்துவதற்கு மக்கள் முயற்சித்தனர். அந்த முயற்சி பயனற்றுப் போகவே, இளைஞர்கள் சிலர் ஒன்று சேர்ந்து தகராற்றில் ஈடுபட்ட இளைஞரை மடக்கி மின்கம்பத்தில் கட்டினர்.

இது தொடர்பில் தெல்லிப்பழைப் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்று இளைஞனை மீட்டு, தெல்லிப்பழை வைத்தியசாலையில் சேர்ப்பித்தனர்.

மல்லாகம் நீதிமன்றில் குறித்த இளைஞன் இன்று முற்படுத்தப்படுவார் என்று பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. (வ-5-101)




முல்லைத்தீவு மாவட்டத்தில் கேப்பாப்பிலவு -பிலக்குடியிருப்பு கிராம மக்களும், புதுக் குடியிருப்பு மக்களும் நடத்திவரும் தன்னெழுச்சி நிலமீட்புப் போராட்டங்களுக்கு, தமிழர் தாயகத்தில் கையளிக்கப்பட்டு கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடிக் கண்டறியும் குடும்பங்களின் சங்கத்தினரும் நேற்று ஆதரவு வழங்கினர். (வ)

# சாவகச்சேரியில் மகளிருக்கு போட்டிகள்

சாவகச்சேரி, பெப். 15

பன்னாட்டு மகளிர் தினத்தை முன்னிட்டு சாவகச்சேரி நகர் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினால் சங்க அங்கத்தவர்களுக்கிடையிலான பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகள் எதிர்வரும் சனிக்கிழமையும் ஞாயிற்றுக்கிழமையும் சாவகச்சேரி புவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலையத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

விளையாட்டுப் போட்டிகள் 30 வயதுக்கு கீழ் 30 வயதுக்கு மேல் என இரு பிரிவுகளாக நடத்தப்படவுள்ளன. போட்டிகளில் கலந்து கொள்ள பதிவு செய்தவர்கள் அன்றைய தினங்களில் பங்குபற்ற நேரத்துடன் வருகை தருமாறு சங்கத் தலைவி திருமதி ம.கீர்த்திநாதன் தெரிவித்தார்

தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டுக்களான பூமாலை கட்டுதல், கோலம் போடுதல், தேங்காய் துருவுதல், கிடுகு பின்னுதல், பலூன் உடைத்தல், 100 மீற்றர் ஓட்டம், தடை தாண்டல் ஓட்டம் உள்ளிட்ட பல்வேறு போட்டிகள் நடத்தப்படவுள்ளன என்றும் அவர் தெரிவித்தார். போட்டிகளில் வெற்றி பெறுவோருக்கான பரிசில்கள் எதிர்வரும் மார்ச் எட்டாம் திகதி சங்கத்தால் நடத்தப்படும் பன்னாட்டு மகளிர் தின விழாவில் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (வ- 9)

# முகநூல் தொடர்பில் புதிய கொள்கை

## அரசு திட்டம்

கொழும்பு, பெப். 15

முகநூல் தொடர்பில் ஓர் கொள்கைத்தீர்மானத்தைஎடுக்கவுள்ளதாக, ஊடகத்துறை அமைச்சின் செயலாளர் நிமல் போப்பகே தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து வெளியிடுகையிலேயே நிமல் போப்பகே இவ்வாறு தெரிவித்தார்.

இது குறித்த கலந்துரையாடல்கள் தற்போது இடம்பெற்று வருகின்றன. இது முகநூலுக்குத் தடை விதிக்கும் செயற்பாடு அல்ல, ஒழுங்குபடுத்தல் நடவடிக்கையாகும். முகநூல் வலைத்தளம் குறித்த பல்வேறு முறைப்பாடுகள் நாளாந்தம் கிடைக்கப்பெறுகின்றன என்று அவர் மேலும் தெரிவித்தார். (வ)



# கிம் ஜோங் உன்னின் சகோதரர் படுகொலை

பியாங்யாங், பெப். 15

வடகொரிய அதிபர் கிம் ஜோங் உன்னின் சகோதரர் மலேசியாவில் படுகொலை செய்யப்பட்டார் என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

கிம் ஜோங் உன்னின் ஒன்றுவிட்ட சகோதரரான (உன்னின் தந்தையின் சகோதரரின் மகன்) கிம் யோங் நாம் என்பவரே படுகொலை செய்யப்பட்டார். (ம)

## [தொடர்ச்சிகள்]

### திமுக...

என்னைத்தான் சிறையில் அடைக்க முடியும். எனது மனதை யாரும் சிறையில் அடைக்க முடியாது. கட்சியின் மீதுள்ள பாசத்தையோ, அக்கறையையோ சிறையில் அடைக்க முடியாது. நான் எந்த மாநிலத்தில் இருந்தாலும் என் மன ஓட்டம் கட்சியின் மீதே இருக்கும். கட்சிக்காக அனைவரும் ஒற்றுமையுடன் செயற்படவேண்டும்.

எனக்கு வந்துள்ளது தற்காலிக பிரச்சினைதான். அதை சமாளிக்க முடியும். நான் எங்கு இருந்தாலும் அ.தி.மு.க. மீதான சிந்தனை எப்போதும் எனக்கு இருக்கும். அ.தி.மு.க.வை என்னிடம் இருந்து எந்த சக்தியாலும் பிரிக்க முடியாது.

சட்டமன்ற உறுப்பினர்களின் ஆதரவு எமக்கு உள்ளது. கூடிய விரைவில் ஆட்சி அமைப்போம். சட்டசபையில் ஜெயலலிதாவின் படத்தை வைப்போம் - என்றார்.

இதேவேளை, நேற்றிரவு போயஸ் இல்லத்துக்கு திரும்பிய சசிகலா செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது: அ.தி.மு.க.வே தமிழகத்தை என்றும் ஆள வேண்டும். நான் எதற்கும் பயப்பட வில்லை. அனைவரும் தைரியமாக இருங்கள். நம்மை யாரும் எதுவும் செய்து விட முடியாது. எதையும் தாங்கும் இதயம் வேண்டும் என்று அண்ணா சொல்லி உள்ளார். அதன்படி, சிங்கம் போல் நம் ஜெயலலிதா இருந்தார். அவரை போல் நாமும் சிங்கங்களாக இருப்போம். நான் எங்கிருந்தாலும் அ.தி.மு.க., நினைவுடன் இருப் பேன்-என்றார். (வ-5)

### அர்த்தமுள்ள...

சேவைக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

புதிய அரசமைப்பை நிறைவேற்றும் போது அதற்காக பொது வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும். பொதுமக்களின் அனுமதியுடனேயே அதனை நிறைவேற்ற வேண்டும்.

நாடாளுமன்ற அதிகாரம், ஆட்சி அதிகாரம், நிறைவேற்று அதிகாரம் மற்றும் தேர்தல் முறைமை என்பவற்றில் முக்கிய மாற்றங்கள் மேற்கொள்ளப்படுமாயின் பொதுமக்களின் அனுமதியின்றி மேற்கொள்ள முடியாது என்பதே தமிழ் தேசிய கூட்டமைப்பின் நிலைப்பாடு. புதிய அரசமைப்பு திருத்தத்துக்கு பொது மக்கள் அனுமதி வழங்குவார்கள். அத்துடன், கூட்டாட்சி முறையிலான தீர்வு தொடர்பில் தற்போது பிழையான கருத்துக்கள் தெரிவிக்கப்படுகின்றன. அவை சரி செய்யப்படவேண்டும் - என்றார். (வ-5)

## கொக்குவில் இந்து மாணவர்களுக்கு

யாழ்ப்பாணம், பெப். 15
கொக்குவில் இந்துக் கல்லூரியில் ஜீ.சி.ஈ.சாதாரண தரப் பரீட்சையின் அழகியல் பாட செயன்முறைப் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் கிடைக்கப் பெற்றுள்ளன என்று பாடசாலை அதிபர் அறிவித்தார்.
மாணவர்கள் பாடசாலைச் சீருடை அணிந்து தேசிய அடையாள அட்டையுடன் வருகைதந்து அனுமதி அட்டைகளைப் பெற்றுக் கொள்ளுமாறு அவர் மேலும் தெரிவித்தார். (வ-10)

## பெண் சாரணிய வழிகாட்டுநர்களுக்கு

யாழ்ப்பாணம், பெப். 15
யாழ்ப்பாண மாவட்ட இலங்கை சாரணியர் மன்றத்தின் பெண் சாரணிய வழிகாட்டுநருக்கான கூட்டம் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பி.ப.1.30 மணிக்கு நடைபெறும் என்று யாழ்ப்பாண மாவட்ட ஆணையாளர் திருமதி நீ.தர்மகுலசிங்கம் அறிவித்தார்.
வேம்படி மகளிர் உயர்தர பாடசாலையில் நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்தில் யாழ்ப்பாணம், வடமராட்சி, தென்மராட்சி, தீவகம், வலிகாமம் ஆகிய கல்வி வலயங்களைச் சேர்ந்த பெண் சாரணிய வழிகாட்டுநர்களை தவறாது கலந்து கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார். (வ-10)

## கஞ்சா விற்பனை தொடர்பில் சிறுப்பிட்டி மக்கள் விசனம்

அச்சுவேலி,பெப்.15
சிறுப்பிட்டிப் பகுதிக்கு வருகை தரும் புதிய முகங்கள் சிலரால் இரவு வேளைகளில் கஞ்சா விற்பனை நடைபெறுவதாக பொதுமக்கள் தரப்பில் கவலை தெரிவிக்கப்பட்டது.
அண்மையில் நீர் இறைக்கும் மோட்டர் அறையில் பதுக்கிவைக்கப்பட்டிருந்த கஞ்சாப் பொதி பொதுமக்களால் கண்டெடுக்கப்பட்டு வீதியில் போட்டு எரிக்கப்பட்ட போதிலும் கஞ்சா வியாபாரத்தில் சிலர் ஈடுபட்டு வ்ருவதாகக் கூறப்பட்டது.
கஞ்சா விற்பனை மற்றும் கைமாற்றும் சம்பவம் மாலை வேளையிலும் இரவு நேரங்களிலும் சாதாரண பொதுமக்கள் கண்டு கொள்ளக் கூடியவகையில் நடைபெறுகின்றன. குறித்த இடங்களில் புதிய முகங்களின் நடமாட்டங்களும் உள்ளன என்று பொதுமக்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (வ-11)

## மெய்வன்மைப் போட்டி

யாழ்ப்பாணம், பெப். 15
யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியின் இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று புதன்கிழமை பி.ப.1 மணிக்கு கல்லூரி மைதானத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.
கல்லூரி அதிபர் மி.விமலநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் க.விஜிதரனும், சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாண இந்துக் கல்லூரியின் ஓய்வுநிலை பிரதி அதிபர் திருமதி பா.றோகினியும் கலந்து கொள்வர் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-10)

# ஆரியகுளத்தின் நீர் மாதிரி ஆய்வுக்கு அனுப்பிவைப்பு

யாழ்ப்பாணம், பெப். 15
யாழ்ப்பாண நகரில் அமைந்துள்ள ஆரிய குளத்தின் நீர் சிவப்பு நிறமானது தொடர்பில் அதன் நீர் மாதிரி பெறப்பட்டு யாழ்ப்பாண பல்கலைக்கழக தாவரவியல் ஆராய்ச்சி பிரிவினரிடம் அனுப்பி வைக்கப்பட்டது.
இவ்வாறு யாழ். மாநகர சபை ஆணையாளர் பொ.வாகீசன் தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
ஆரிய குளத்தின் நீர் நிறமாற்றம் தொடர்பில் எமக்கு அறியக் கிடைத்ததும் அது தொடர்பில் உடனடியாக யாழ்ப்பாண பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்துக்கு தகவல் வழங்கப்பட்டது. குளத்தின் நீர் மாதிரியும் விஞ்ஞான பீடத்தின் பேராசிரியரிடம் வழங்கப்பட்டது. அத்துடன் யாழ்ப்பாண பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்துக்கு இது தொடர்பான ஆவணக் கடிதமும் அனுப்பி வைத்தேன்.
கடந்த சில நாட்களாக யாழ்ப்பாணத்தில் மழை பெய்தாலும் அதற்கு முன்னரே யாழ்ப்பாண மாநகர சபையினால் குளத்து நீர் பெறப்பட்டு பரிசோதனைக்காக அனுப்பி வைத்துள்ளோம்.
மேலும் பரிசோதனை முடிவுகள் இன்னும் ஓரிரு நாட்களில் கிடைக்கப்பெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது - என்றார்.
கடந்த சில தினங்களுக்கு முன்னர் ஆரிய குளத்தின் நீர் திடீரென சிவப்பு நிறமாக மாற்றமடைந்தது. இதனால் அப்பகுதி மக்கள் மத்தியில் ஒருவித அச்ச நிலைமை காணப்பட்டது. (வ-8)

## நாடகமும் அரங்கியலும் செய்முறைப் பயிற்சி

ஜீ.சி.ஈ.சாதாரணதர மாணவர்களுக்கான நாடகமும் அரங்கியலும் செய்முறைப் பயிற்சிப்பட்டறை எதிர்வரும் 18ஆம், 19ஆம் திகதிகளில் திருமறைக் கலா மன்றத்தின் கலைத்தூது கலையகத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.
கடந்த டிசெம்பர் மாதம் நடைபெற்ற ஜீ.சி.ஈ.சாதாரணதர பரீட்சையில் நாடகமும் அரங்கியலும் பாடத்துக்கு தோற்றி விரைவில் செய்முறைப் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்கள் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமைக்கு முன்பாக திருமறைக்கலாமன்றத்தில் தமது பெயர்களை பதிவு செய்ய முடியும். (வ-10)

# விமல் வீரவன்சவை விடுவிக்குமாறு கோரி ஒன்றிணைந்த எதிர்க்கட்சியினர் போராட்டம்

நுவரெலியா,பெப்.15
கைது செய்து தடுத்து வைக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீர வன்சவை உடனடியாக விடு தலை செய்யவேண்டும் என்று கோரி ஒன்றிணைந்த எதிர்க் கட்சியினர் நேற்று நுவரெலியா நகர மத்தியில் அமைந்துள்ள பிரதான தபாற் கந்தோருக்கு முன்னால் போராட்டத்தில் ஈடுபட்டனர்.
இதன்போது ஆர்ப்பாட்டக்காரர்கள் ஒன்றிணைந்த எதிர்க் கட்சியின் அங்கத்தினர்களை அரசியல் ரீதியாக பழி வாங்க வேண்டாம் எனவும், அவர் களை வேட்டையாடு வதை அரசு உடனடியாக நிறுத்த வேண்டும் எனவும் கோசங்களை எழுப்பினர்.
இதில் முன்னாள அமைச்சரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சீ.பி.ரட் நாயக்க, மொன ராகலை மாவட்ட நாடாளுமன்ற உறுப் பினர் பத்ம உதயசாந்த குண சேகர, மத்திய மாகாண சபை உறுப்பினர் நிமால் பியதிஸ்ஸ, முன் னாள் நுவரெலியா மாநகர சபை உறுப்பினர் எச்.எம்.அபேசிங்ஹ உட்பட கட்சியின் ஆதரவாளர்களும் கலந்து கொண்டனர். (ஐ)



UNIVERSITY OF CAMBRIDGE
CAMBRIDGE ENGLISH

+ Around 4 million people a year take Cambridge English exams
+ 13000 universities and employers globally recognise their certificates
+ Cambridge have an international network of 2,700 authorised exam centres in 130 countries
+ 40,000 schools and intitutions prepare students for cambridge English exams
+ Cambridge have 100 years of experience and expertise in English language assessment

Cambridge ன் மூன்று பாடநெறிகள் 18.02.2017 ல் ஆரம்பிக்கின்றோம்

Cambridge - Prelimnary English Test (PET)

இது ஓர் Intermediate B1. Level பரீட்சையாகும். U.K இல் பல கல்லூரிகளும் பல்கலைக்கழகங்களும் இதனை பல்கலைக்கழக அனுமதிக்காக ஏற்றுக்கொள்கின்றன.
நீங்கள் IELTS பரீட்சை எடுப்பதற்கு விரும்புவீர்களானால், போதிய ஆங்கில அறிவு உங்களிடம் இல்லையேல் முதலில் PET பாடநெறியைப் பின்பற்றி பின் IELTS வகுப்பில் கற்க இலகுவாக இருக்கும்.

Exam Date : 19.05.2017
Centre - British Council Colombo.

FCE Cambridge First Certificate in English

இது ஒரு சர்வதேசப் பரீட்சையாகும் International Exam. 15000 ற்கு மேற்பட்ட கல்வி நிறுவனங்களும் Employers ம் FCE யை ஏற்றுக்கொள்கின்றன. உலகத்தின் எந்த ஒரு இடத்திலும் சிறந்த ஓர் வேலை வாய்ப்பினைப் பெற்றுக் கொள்ள அதியுயர்ந்த தகுதியாகும். இது ஒரு வாழ்நாள் முதலீடு.

Exam Date : 06.06.2017
Centre - British Council Colombo

Course Schedule
புதிய வகுப்புக்கள் ஆரம்பம் - 18.02.2017

| Monday, Tues, Wed, Thurs | Sat & Sunday |
|---|---|
| 10.30 - 1.00 pm | 3.00 pm - 6.00 pm |

Speciality of this course:
- B1 Level ல் இருந்து C 1 Level வரை எல்லா மாணவர்கட்கும் போதனை நடைபெறும்.
- ஒவ்வொரு நாளும் Listening Practice நடைபெறும்.
- வாழ்நாள் முழுவதும் ஆங்கிலத்தில் சரளமாகக் கதைப்பதற்கும் Complete Practice கொடுக்கப்படும்.

BRITISH COLLEGE OF ENGLISH
192, NAVALAR ROAD, JAFFNA. (பெருமாள் கோவிலடி 'தினக்குரல்' காரியாலயத்திற்கு முன்னால்.)

40 வருடங்களுக்கு மேலாக மக்களின் நன்மதிப்பை வென்ற
'றோயல் குளுக்கோஸ்'
இழந்த சக்தியை உடனடியாக மீண்டும் பெற்றிட பாவியுங்கள்
" றோயல் குளுக்கோஸ்"
தற்போது புதிய வடிவில்!!
Packed By:
Royal Industries, Colombo - 13.
077 727 7670




சிவா நறுமணப் பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
021 222 2567
(க/00348)(11.17)

## வங்கிக் கடனை மீளச் செலுத்தாதோர் மீது வழக்கு

சாவகச்சேரி, பெப் 15

சாவகச்சேரி மக்கள் வங்கிக் கிளையில் விவசாயம் மற்றும் சுயமுயற்சிக் கடன்களைப் பெற்று நீண்ட காலமாக கடன் தொகையை மீளச் செலுத்தாதவர்கள் மீது சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

இந்த வழக்குகள் நேற்று முன்தினம் தொடக்கம் நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டு வருகின்றன என்று தெரிவிக்கப்பட்டது. (வ 9)

## யாழ்ப்பாணம் வருகிறார் பாடலாசிரியர் பா. விஜய்



தென்மராட்சி, பெப்.15

தமிழ்த் திரையுலகப் பாடலாசிரியர் பா.விஜய் எதிர்வரும் 19ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலையில் நடைபெறும் 2 நிகழ்வுகளில் கலந்து கொள்வார் என்று தெரிவிக்கப்பட்டது.

கடந்த ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற வடக்கு மாகாண மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக அவர் கலந்து கொள்கிறார். இந்த நிகழ்வு காலையில் இடம்பெறுகிறது.

யாழ்.மாவட்டத்தின் பிரபல பேச்சாளர்கள் பங்குபற்றும்' இன்றைய இளம் தலை முறையினரின் ஆற்றல் விண்ணோக்கிச் செல்கிறதா? மண்ணில் வீழ்கிறதா ? என்னும் விவாத அரங்கு அன்றைய தினம் மாலை 3.30 மணிக்கு யாழ்ப்பாணம் வேம்படி பெண்கள் உயர்தர பாடசாலையில் இடம்பெறுகிறது. இந்த விவாத அரங்கில் நடுவராக பா.விஜய் கலந்து கொள்வார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (வ - 9)

# தந்தத்தைக் களவாட யானை சுட்டுக் கொலை

### நெடுங்கேணியில் படுபாதகச் செயல்

முல்லைத்தீவு,பெப்.15

காட்டுப்பகுதியில் உயிரிழந்த நிலையில் காணப்பட்ட யானை ஒன்றின் தந்தங்கள் இனந்தெரியாதோரால் களவாடப்பட்டுள்ளன. இது தொடர்பான விசாரணைகளை நெடுங்கேணிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

வவுனியா வடக்குப் பிரதேச செயலாளர் பிரிவில், நெடுங்கேணிக்கும் ஒலுமடுவுக்கும் இடைப்பட்ட காட்டுப்பகுதியில் கடந்த வாரம் சுட்டுக் கொல்லப்பட்ட யானையின் தந்தங்கள் களவாடப்பட்டுள்ளன.

கொல்லப்பட்ட யானையின் உருவத்துக்கு அமைய களவாடப்பட்டுள்ள இரு தந்தங்களும் அதிக பெறுமதி வாய்ந்தவை எனத் தெரிய வருகிறது. இந்த விடயம் கிராம அலுவலர் ஊடாக பிரதேச செயலரின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது.

பிரதேச செயலாளர் சம்பவ இடத்துக்கு உரியவர்களை அனுப்பி, அங்கு நிலமையை அவதானித்து, மாவட்ட பொலிஸ் அத்தியட்சகரின் கவனத்துக்குக் கொண்டு சென்றார்.

மாவட்ட பொலிஸ் அத்தியட்சகரின் உத்தரவுக்கு அமைய தற்போது விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன. யானையில் இருந்து தந்தங்கள் அகற்றப் பட்டதன் பின்னர், ரயர் போட்டுக் கொளுத்தவும் முயற்சிக்கப்பட்டதாக கூறப்படுகிறது. எனினும் தந்தங் களைக் களவாடியமை தொடர்பான விவரங்கள் இன்னும் அறியப் படவில்லை எனத் தெரிய வந்துள் ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஐ-21,10)

# மதுபோதையில் வாகனம் செலுத்திய 3 சாரதிகளுக்கு குடிவெறுப்புச் சிகிச்சை

### சாவகச்சேரி நீதிவான் உத்தரவு

சாவகச்சேரி, பெப். 15

மதுபோதையில் வாகனம் செலுத்திய மூன்று சாரதிகளுக்கு குடிவெறுப்பு நிலையத்தில் சிகிச்சையளிக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளுமாறு சாவகச்சேரி நீதிவான் பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

மதுபோதையில் வாகனம் செலுத்தினார்கள் என்ற குற்றச்சாட்டில் ஓட்டோ சாரதி உட்பட மூன்று சாரதிகளுக்கு எதிராக சாவகச்சேரி நீதிமன்றில் சாவகச்சேரிப் பொலிஸாரால் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன. இந்த வழக்குகள் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டன. இதன்போது ஒரு சாரதிக்கு 12 ஆயிரத்து 500 ரூபாவும் மற்ற இரு சாரதிகளுக்கு தலா 10 ஆயிரத்து 500 ரூபாவும் தண்டம் மன்றினால் விதிக்கப்பட்டது.

சாரதிகள் மூவரையும் ஒரு வருட காலத்துக்குள் 80 மணி நேரத்துக்கு சமூகப் பணியில் ஈடுபடுத்த நீதிமன்ற சமுதாயச் சீர்திருத்தப் பிரிவில் ஒப்படைக்க வேண்டும். இவர்களுக்கு குடிவெறுப்பு நிலையத்தில் அனுமதித்து சிகிச்சை வழங்கப்படவேண்டும். சாரதிகள் மூவரினதும் சாரதி அனுமதிப் பத்திரங்கள் ஒரு வருட காலத்துக்கு நீதிமன்றில் தடுத்து வைக்கப்படவேண்டும் என்று நீதிவான் கட்டளையிட்டார். (வ- 9)

# அவன்ட் கார்ட் வழக்கு மார்ச் 15இல் விசாரணை

கொழும்பு,பெப்.15

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச, அவன்ட் கார்ட் நிறுவனத்தின் முன்னாள் தலைவர் உட்பட எழுவருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்குத் தொடர்பான விசாரணை எதிர்வரும் மார்ச் 15ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

அவன்ட் கார்ட் மெரிடைம்ஸ் நிறுவனத்தினூடாக மிதக்கும் ஆயுதக் களஞ்சிய சாலையை அமைத்து, அரசுக்கு 11.4 பில்லியன் ரூபா நட்டத்தை ஏற்படுத்தினர் என்ற குற்றச்சாட்டு தொடர்பில், ஆணைக் குழுவால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு, நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

வழக்கு விசாரணையின் போது, பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் கோத்தபாய ராஜபக்சவும் நீதிமன்றத்தில் முன்னிலையாகியிருந்தார். (ஐ)

சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

**பதவி வெற்றிடம் - நிரந்தரம்**

**கிளை முகாமையாளர் :- 208/14**

13/2015 சு.நி.படி

மேற்படி பதவி வெற்றிடத்துக்கு வெளிவாரியாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1) அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்

அ) கூட்டுறவுப் பணியாளர் 15 ஆவது சம்பளத்திட்ட தொடர்பு பட்ட துறைப்பதவியொன்றில் இரண்டு (02) வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளர் 16 ஆவது சம்பளத்திட்ட தொடர்புபட்ட துறைப்பதவியொன்றில் நான்கு (04) வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

அல்லது

ஆ) கூட்டுறவுப் பணியாளர் (சாதாரண தரம்) சான்றிதழ் அல்லது க.பொ.த. (சாதாரண தரம்) கணிதம் அல்லது வர்த்தக எண் கணிதம் அல்லது எண் கணிதம் மற்றும் சிங்களம் அல்லது தமிழ் மொழி உட்பட இருதடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் 6 பாடங்கள் சித்தி.

2) வயதெல்லை 18 -45 (சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை கணிக்கப்பட மாட்டாது)

03) சம்பள அளவுத்திட்டம்

13875 -115x10 125x10 - 16250,
13/2015 சுற்று நிருபப்படி

04) விண்ணப்ப முடிவு திகதி :- 28.02.2017
நண்பகல் 12.00 மணி

குறிப்பு:- சங்க எல்லைப் பரப்பில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். சங்கப் பணியாளர்களாகின் குறித்த சங்கத்தின் ஊடாக விண்ணப்பிக்க வேண்டும். விண்ணப்பப் படிவம் சங்கத்தில் ரூபா. 10.00 செலுத்தி பெற்று விண்ணப்பிக்க வேண்டும். தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் குறிப் பிடப்படல் வேண்டும். விண்ணப்பங்கள் யாவும் 'தலைவர், சங்கானை ப.நோ.கூ.சங்கம், சங்கானை' என்னும் முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

சங்கானை ப.நோ.கூ.ச,
சங்கானை.

- பொது முகாமையாளர் -

## மரண அறிவித்தல்

## இளையான் நவரத்தினம்



பிறப்பு 1951.04.28 இறப்பு 2017.02.14

அம்பன் கொட்டோடையை பிறப்பிடமாகவும், தும்பளையை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட இளையான் நவரத்தினம் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற திரு. திருமதி இளையதம்பி - இலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும் திரு. திருமதி முருகேசு - இரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகனும் தவமணிதேவியின் அன்புக் கணவரும் சிவதர்சன், விஜிதரன், மயூரா, சிவதரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவசுப்பிரமணியம் (ஓய்வு நிலை மதுவரி உத்தியோகத்தர்) சதாசிவம் ( ஓய்வு நிலை ஆசிரியர்), சந்திரலிங்கம், காலஞ்சென்றவர்களான சரஸ்வதி, ஜெயக்கொடி ஆகியோரின் அன்புச் சகோதரரும் அச்சுதனின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற பொன்னுத்துரை மற்றும் தங்கத்துரை, மங்கையற்கரசி, செல்வராணி, குணரஞ்சிதம், ராதா, பிரேமளா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.02.2017) புதன் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பி.ப. ஒரு மணியளவில் தும்பளை கோரியடி இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தும்பளை கிழக்கு,
பருத்தித்துறை.

தகவல்:
குடும்பத்தினர்

**நாய்க்குட்டி விற்பனைக்கு**

ஜேர்மன் செப்பேட் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு.

077 967 2834

**விற்பனை**

ஊர்க்கோழிக்குஞ்சுகள் விற்பனைக்கு உண்டு. (3/8163) (22,17)

077 971 4491-கிளிநொச்சி, 077 349 7277

**பூக்கன்றுகள் விற்பனை**

நல்லின குரோட்டன்கள் மற்றும் 60 விதமான பூக்கன்றுகள் மலிவான விலையில் பெற்றுக் கொள்ளலாம். பூச்சாடிகள். மீன் தொட்டிகள். பறவைக் கூடுகளையும் மலிவான விலையில் பெறலாம்.

பூக்கன்று ஒவ்வொன்றும் 80/-
யாழ். அக்குவரியம்
917.K.K.S.றோட், யாழ்ப்பாணம்.

075 991 0060, 077 707 0711

**VACANCIES**

We have the Following Vacancies for Immediate Recruitment

✓ ACCOUNTS ASSISTANT
✓ AUDIT SUPERVISOR

CAB II of ICASL, Completed CIMA Part I Management Level / AAT Fully qualified / HNDA / Graduates (Accounting Special) or Similar qualifications with 2 years operating experience on Quick Book Accounting package & 2 years Audit firm experience.

W.S.Kiruparatnam & Co
Chartered Accountants,
96, Clocktower Road, Jaffna.
Email - wskjaff@yahoo.com
021 222 0127

**PHARMACIST தேவை**

யாழ் நகரில் இயங்கி வரும் பிரபல மருந்தகத்திற்கு பதிவு பெற்ற மருந்தாளர் உடன் தேவை. (A2A/1266) (22,17)

021 222 3188/ 077 732 3702

**பணிநிலை வேண்டுகை**

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள நிறுவகத்திற்கு.

01. Heavy Vehicle Driver. (Colombo - Jaffna
02. Marketing Sales & Executives for Distribution.
03. Accounting Staff (Ms office, Ms Excel, Quick Book).

தேவை. மேலதிக விவரங்களுக்கு (A2A/1266) (12,17)

KINGS ELECTRONICS(PVT) LTD
No.12, Pointpedro Road, Jaffna.
021 454 6699

# கிழக்கில் 5 மாவட்டங்களில் குப்பைகளை தரம் பிரிக்கும் வேலைத்திட்டம் ஆரம்பம்



மட்டக்களப்பு,பெப்.15

கிழக்கு மாகாண உள்ளூராட்சி மன்றத்துக்குட்பட்ட மட்டக்களப்பு மாவட்டத்தின் காத்தான்குடி, ஆரையம்பதி, மட்டக் களப்பு, ஏறாவூர் மற்றும் செங்கலடி போன்ற பிரதேச ம்ற்றும் நகர சபைப் பிரிவுகளில் சேகரிக்கப் படும்குப்பைகளைத்தரம்பிரித்து அவற்றைக் கொடுவாமடு பிரதேசத்தில் நிர்மாணிக்கப் பட்டுள்ள திண்மக் கழிவு முகாமைத்துவ நிலையத்துக்கு அனுப்பும் வேலைத் திட்டம் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கே.சித்திரவேல் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபீஸ் நசீர் அகமட் கலந்து கொண்டு குறித்த வேலைத்திட்டத்தை ஆரம்பித்து வைத்தார்.

உக்கும் குப்பை, உக்காத குப்பைகள், மீள் சுழற்சிக்கான குப்பை மற்றும் பசளைக் குப்பை என நான்கு வகையாக குப்பைகளைத்தரம்பிரித்து, அவற்றைமட்டக்களப்பு – செங்கலடி கொடுவாமடு பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள திண்மக்கழிவு முகாமைத்துவ நிலையத்துக்கு அனுப்புவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நிகழ்வில் கிழக்கு மாகாண விவசாய அமைச்சர் கே.துரைராஜசிங்கம், கிழக்கு மாகாண பிரதித் தவிசாளர் பிரசன்னா இந்திரகுமார், கிழக்கு மாகாண சபை உறுப் பினர்களான இரா.துரைரட்ணம், ஞா.கிருஸ்ணபிள்ளை, கிழக்கு மாகாண முதலமைச்சின் செயலாளர் எம். அஸீஸ் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (ஐ)

## மகிந்த மீண்டும் தலைதூக்க முயற்சி

அரசு செய்யும் வேலைகளால் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச மீண்டும் தலைதூக்க முயற்சித்து வருகிறார் என்று பிரதியமைச்சர் பாலித தெவரப்பெரும தெரிவித்தார்.

கடந்த அரசைக் கவிழ்த்து விட்டு ஆட்சிக்கு வந்த நாம் பொறுப்புடன் வேலை செய்யத் தெரிந்துகொள்ள வேண்டும். எனினும் அப்படி எதனையும் காணமுடியவில்லை. மகிந்த மீண்டும் தலைதூக்கும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கும் வகையிலேயே அரசு தற்போது பணியாற்றி வருகிறது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

## மரண அறிவித்தல்

### விஜயலச்சுமி சிவபாதசுந்தரம்

தும்பளை பருத்தித்துறையை பிறப்பிடமாகவும் Hampden Lane Wellawatte ஐ வசிப்பிடமாகவும் கொண்ட விஜயலச்சுமி சிவபாதசுந்தரம்

11.02.2017 சனிக்கிழமை காலமானார். அன்னார் காலஞ்சென்ற சிவப்பிரகாசம் நாகரத்தினம் தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை செல்லம்மா தம்பதியினரின் ஆசை மருமகளும், சிவபாதசுந்தரம் (ஓய்வு பெற்ற உப அதிபர்) அவர்களின் பாசமிகு மனைவியும், மீனா (காலஞ்சென்ற) மீரா, றமேஷ், சுரேஷ் ஆகியோரின் பாசமிகு தாயாரும், சுந்தரலிங்கம் (சமாதான நீதவான்) இராசநாயகம், காலஞ்சென்றவர்களான இராசேந்திரம் (S.P.H.I) இராசகுலசிங்கம் (Inland Revenue), சாரதாதேவி, சீவரத்தினம் ஆகியோரின் அன்பு சகோதரியும், சிறீஸ்கந்தராஜா, தரிசிகா ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 16.02.2017 வியாழக்கிழமை மு.ப 10 மணியளவில் பொரளை ஜயரத்ன மலர்ச் சாலையில் நடைபெற்று மு.ப 11.30 மணியளவில் பொரளை கனத்தை மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்

தகவல்
குடும்பத்தினர்

## கண்ணீர் அஞ்சலி



யாழ். மாவட்ட சி.க.கூ. சங்கங்களின் சமாசத்தின் நெறியாளர் குழு உறுப்பினர் திரு. கொ. குணசிங்கம் அவர்களின் அன்புத் தாயார்

### திருமதி கொழுந்தன் முத்து

அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

தலைவர், பணிப்பாளர்கள், பணியாளர்கள்
யாழ்.மாவ.சி.க.கூ.ச. சமாசம்

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



### க. ஜெயராசா

தோற்றம் 18.01.1950 — மறைவு 16.01.2017

கடந்த 16.01.2017 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவர் க.ஜெயராசா அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (15.02.2017) புதன் கிழமை முற்பகல் 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

செட்டிய குறிச்சி, பூநகரி.

குடும்பத்தினர். (ஜெ. விஜிதச்செல்வன்)
077 514 1238

## மரண அறிவித்தல்

பிறப்பு 05 . 01 . 1943



இறப்பு 13 . 02 . 2017

### விக்கிரமர் பராபரன் (பரான்)

சுழிபுரம் மேற்கைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட விக்கிரமர் பராபரன் (பரான்) அவர்கள் 13.02.2017 திங்கட்கிழமை சிவபதம் அடைந்துள்ளார். அன்னார் காலஞ்சென்றவர்களான விக்கிரமர் வேதவனம் தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வேதையா தெய்வானைப்பிள்ளை ஆகியோரின் அன்பு மருமகனும், புஷ்பராணியின் அன்புக் கணவரும், பராசக்தி, காலஞ்சென்ற பரமேஸ்வரி ஆகியோரின் சகோதரனும், சுகந்தினி, சுதர்சன் (நியூ சத்தியா ஸ்ரோர்ஸ் பம்பலப்பிட்டிய), சரளா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கணேசலிங்கம், விஜித்தா, அனந்தராஜா, நடனமைந்தன், பரமநாயகி, குருபாமா, சுருதியாம், பலபாகலாநிதி, ஆதாயராருகா ஆகியோரின் மாமனாரும், பவித்திரன், மிதுரன், துசாரன், வர்சிகா, தீபிகா, அபிசன் ஆகியோரின் பேரனும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரிகைகள் கல்கிசை மகிந்த மலர்ச் சாலையில் 15.02.2017 மு.ப 11.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் 1.00 மணிக்கு கல்கிசை இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்:- குடும்பத்தினர் தொடர்புக்கு: 0776408693, 0785163611

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

(15.02.2017)



### திருமதி கமில்ரன் கெலன்றொக்ஸ்

(சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்)

மண்ணில் 26.03.1948
விண்ணில் 16.01.2017

" உயிர்ப்பும் உயிரும் நானே
என்னில் விசுவாசம் கொள்பவன்
இறப்பிலும் வாழ்வான் "

அம்மா நீங்கள் எமைப்பிரிந்து
முப்பத்தொரு நாள்கள் சென்றதம்மா
மீளாத்துயரில் உம் பிள்ளைகள்
நாம் தவித்து நிற்கின்றோம்
எமைப் பிரிந்து தொலைதூரம் சென்றதேனோ
பாசமாய் பேசும் பரிவுள்ளம் கொண்ட தாயே
பதறி நிற்கின்றோம் உங்கள் நினைவுகளை எண்ணி
இறைவன் சந்நிதியில் உங்கள் ஆன்மா
இளைப்பாற்றிட இறைவனை இறைஞ்சுகின்றோம்

என்றும் உங்கள் பிரிவால் வாடும்
கணவர், பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்.

## நான்காவது ஆண்டு நினைவலைகள்

இன்புற வந்தது 02 . 10 . 1937



துன்புற சென்றது 15 . 02 . 2013

### அமரர் கிருஷ்ணர் இராஜதுரை

ஆண்டுகள் நான்கு போனதுவே ஐயா!
ஆறவில்லையே எம் துயரம் இன்னும்!
யாண்டும் இடும்பையுடன் வாழ்கிறோமே.
யாரறிவார் யாம்படும் பாடுதனையே!
மாண்டவர் மீண்டும் பிறந்து வந்தே
மறு பிறவி எடுத்து வருவராதலால்
வேண்டியே இறைவனிடம் முன்னிற்கின்றோம்.
வேதனை தீர்த்திட நீர் வருவீரென!
ஆத்மா சாந்தியடைய அன்னையிடம் வேண்டுகின்றோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

(J7940) (22.17.18)

அன்பு மனைவி,
பிள்ளைகள், மருமக்கள், பேரர்கள்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அன்னை மடியில் 10 . 10 . 1950



ஆண்டவன் அடியில் 17 . 01 . 2017

17.01.2017 அன்று சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வம்

### அமரர் ஆழ்வாப்பிள்ளை ஜெயரூபன்

அவர்களின் மறைவுச் செய்தி அறிந்து அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்ட அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன் இன்று (15.02.2017) புதன் கிழமை காலை 06மணியளவில் கீரிமலை புனிததீர்த்தக்கரையில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து நாளை (16.02.2017) வியாழக்கிழமை ஆஸ்பத்திரி வீதி, மருதங்கேணி இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியத்திலும், மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஆஸ்பத்திரி வீதி,
மருதங்கேணி.
(D/S காரியாலயம் அருகில்)

சரோஜினி தேவி (துணைவியார்)
சிற்றம்பலம் கமலாசனி (மாமி)

(N 256) (14.17.18)

# இலங்கைத் தூதரை சந்தித்துட்ரம்ப்பேச்சு

அமெரிக்காவின் புதிய அரசதலைவர் டொனால்ட் ட்ரம்ப் இலங்கைத் தூதுவர் பிரசாத் காரியவாசத்தை திங்களன்று சந்தித்தார். முன்னர் ஆட்சியில் இருந்த ஒபாமா இலங்கையின் மனித உரிமைகள் விடயத்தில் அதிக அழுத்தம் கொடுக்கும் கொள்கையைக் கடைப்பிடித்து வந்தார். இதனால் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் அமெரிக்காவினதும் ஆதரவுடன் இலங்கை தொடர்பில் தொடர்ச்சியாக 3 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அமெரிக்காவில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டதைத் தொடர்ந்து இந்த நிலையை மாற்ற முடியும் என்று கொழும்பில் உள்ள இராஜதந்திரிகள் சிலர் கருத்துத் தெரிவித்திருந்தனர். அதற்கேற்ற வகையில் இலங்கைமீதான மனித உரிமைகள் விவகார அழுத்தத்தை அமெரிக்கா கைவிடவேண்டும் என்று அரசதலைவர் மைத்திரிபால சிறிசேனவும் வலியுறுத்தியிருந்தார். இந்தப் பின்னணியிலேயே இலங்கைத் தூதுவரை ட்ரம்ப் சந்தித்தார். இலங்கையின் தற்போதைய அரசியல் களநில வரம் குறித்து ட்ரம்ப் சந்திப்பின்போது கேட்டறிந்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ)

# ஆறு மாத காலத்துக்கு ஆள்சேர்ப்பை நிறுத்தி வைக்க சைட்டத்துக்கு பணிப்பு

*படித்து வெளியேறிய மாணவர்களுக்கு மேலும் 5 மாதங்களுக்குப் பயிற்சி வழங்கவும் முடிவு*

அறிவியல் மற்றும் மருத்துவத்துக்கான தெற்காசிய கல்வி நிறுவகம் (சைட்டம்-தனியார் பல்கலைக்கழகம்) தனது மருத்துவக் கற்கை நெறிக்கான ஆள்சேர்ப்பை 6 மாத காலத்திற்கு நிறுத்த உத்தரவிடுவதற்கு உயர் கல்வி அமைச்சு முடிவு செய்துள்ளது. இந்தக் காலப்பகுதிக்குள் தனியார் பல்கலைக்கழகங்களின் மருத்துவக் கற்கை நெறி தொடர்பான மீளாய்வு ஒன்றை அமைச்சு மேற்கொள்ளவுள்ளது.

இது தொடர்பான முடிவு நேற்று முன்தினம் நடந்த உயர் மட்டக் கூட்டத்தில் எடுக்கப்பட்டது. நாட்டின் எட்டு அரச பல்கலைக்கழங்களினது பீடாதிபதிகளுடனும் உயர் கல்வி அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல இந்தக் கூட்டத்தை நடத்தினார். உயர் கல்வி அமைச்சுக்கான இராஜாங்க அமைச்சர் மொகான் லால் யெரோ, அமைச்சின் செயலாளர் டி.எஸ்.திசநாயக்க, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் மொகான் டி சில்வா மற்றும் பேராசிரியர் பி.எஸ்.எம். குணரத்னே ஆகியோரும் கூட்டத்தில் பங்கேற்றனர்.

சைட்டம் மருத்துவக் கல்லூரியில் கற்று வெளியேறிய மாணவர்களுக்கு அரச மருத்துவமனைகளில் மீண்டும் சிகிச்சை நிலையப் பயிற்சிகளை வழங்குவது என்றும் இந்தக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. அறுவைச் சிகிச்சை, மருத்துவம், பெண் நோயியல், மகப்பேறியல், குழந்தை மருத்துவம் ஆகிய துறைகளில் தலா ஒவ்வொரு மாதம் அவர்களுக்குப் பயிற்சிகளை வழங்குவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

"இந்தப் பயிற்சிகளை எல்லாம் முடித்த பின்னர் மாணவர்கள், இலங்கை மருத்துவச் சபை வைக்கும் அனுமதிப் பத்திரத்துக்கான சோதனையில் தேறவேண்டும்" என்று உயர் கல்வி அமைச்சின் செயலாளர் டி.சி.திசநாயக்க தெரிவித்தார்.

இந்த 6 மாத கால அவகாசத்திற்குள், உயர் கல்வி அமைச்சும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவும் இலங்கை மருத்துவச் சபையும் இணைந்து இதனோடு தொடர்புபட்ட ஏனைய பங்காளிகளையும் இணைத்துக்கொண்டு அரசு சாராத மருத்துவக் கல்லூரிகளில் நடைமுறைப்படுத்துவதற்கான செயல்முறைமை ஒன்றை உருவாக்க முயற்சி எடுக்கப்படும்.

"இந்த முன்மொழிவுகள் தொடர்பில் இலங்கை மருத்துவச் சபையுடன் கலந்துரையாடுவதற்கு மருத்துவப் பீடாதிபதிகள் இணங்கியிருக்கின் றனர்" என்று அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

சைட்டம் மருத்துவ மாணவர்களின் கல்வித் தகுதி தொடர்பில் கேள்வி எழுப்பி கடுமையாக எதிர்ப்பைப் பதிவு செய்து வருகிறது இலங்கை மருத்துவச் சபை. சைட்டம் மருத்துவக் கல்வியை முடித்துக் கொண்ட மாணவர்களைத் தனது அங்கத்தவர்களாகப் பதிவு செய்து கொள்வதற்கும் அது மறுப்புத் தெரிவித்திருந்தது. அதனை எதிர்த்துத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில், அவர்களைப் பதிவு செய்யுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது. (உ)

## ரத்ன தேரர் தொடர்பில் கலந்துரையாடல்

கொழும்பு, பெப்.15

நாடாளுமன்ற உறுப்பினரான அத்துரலிய ரத்ன தேரருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதா?, இல்லையா? என்பது குறித்து கலந்துரையாடல் நடைபெறவுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

தேரர் தொடர்பிலான கலந்துரையாடலுக்காக ஜாதிக ஹெல உறுமயவின் மத்திய குழு, எதிர்வரும் வெள்ளிக்கிழமை கூடவுள்ளது.

அன்று ரத்ன தேரரின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவி தொடர்பிலும், முக்கியமாக கவனம் செலுத்தப்படும் என அந்த கட்சி தெரிவித்துள்ளது. (ற)

## மரண அறிவித்தல்கள்

### சண்முகம் முத்துலிங்கம்

(இளைப்பாறிய ஆங்கில ஆசிரியர், சென் ஜோன்ஸ் கல்லூரி, மாலைதீவு)



பிறப்பு: 21.10.1939
இறப்பு: 14.02.2017

திருநெல்வேலியை பிறப்பிடமாகக் கொண்ட சண்முகம் முத்துலிங்கம் 14.02.2017 செவ்வாய்க் கிழமை இறைவனடி சேர்ந்தார்

அன்னார் காலஞ்சென்ற சண்முகம் - தங்கச்சியம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ் சென்ற கனகசபை - அன்னபூரணம் தம்பதியரின் மருமகனும் இந்தி ராவதியின் (யோகா ஆசிரியை) அன்புக் கண வரும் மயூரன், துளசி, வித்தியா ஆகியோரின் தந்தையும் அமண்டாவின் அன்பு மாமனாரும் லலித்தா, பாலகுமார், சண்டிபதி ஆகியோரின் அப்பப்பாவும் காலஞ்சென்ற சண்முகம் தணிகாசலம் J.P அவர்களின் சகோதரனும் தணிக்காசலம் சாந்தநாயகி, இராமதாசன் கருஷனாவதி ஆகியோரின் மைத்துனரும் இராமதாசனின் சகலனும் பாலகுமாரன், ஞானகுமாரன், ஞானசக்தி, செல்வக்குமாரன், ஆனந்தசக்தி ஆகியோரின் சித்தப்பாவும் தேவமாறன், ஜெயமாறன் ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.02.2017) புதன்கிழமை காலை அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக முற்பகல் 11.00 மணிக்கு கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்து செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

யா/ பரமேஸ்வரா வித்தியாலய வீதி, திருநெல்வேலி.

தகவல்: குடும்பத்தினர்



### கோணாமலை சங்கரப்பிள்ளை

(ஓய்வு நிலை விமானப்படை அதிகாரி)

புலோலி மேற்கு வாணக்குடியிருப்பை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கோணாமலை சங்கரப்பிள்ளை 12.02.2017 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கோணாமலை - முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சின்னப்பு - அபிராமி தம்பதியரின் அன்பு மருமக னும் சந்திரமணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான கந்தசாமி, செல்வராசா, துரைராஜா மற்றும் இராஜரட்ணம், வள்ளிப்பிள்ளை ஆகியோரின் அன்புச்சகோதரரும் தெய்வானைப்பிள்ளை காலஞ்சென்றவர்களான பரிபூரணம், அன்னம்மா, ருக்மணி, கந்தசாமி(ஓய்வுநிலைக்கணக்காளர்), கனகசபாபதி, சந்திரன் மற்றும் ஞானமணி, ஜெயமணி, இராசமணி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.02.2017) வியாழக்கிழமை மு.ப 11.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுப்பர் மடம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மணி இல்லம்
வாணக்குடியிருப்பு, புலோலி மேற்கு, பருத்தித்துறை.


தகவல்: குடும்பத்தினர்.

**077 616 4150**

## மரண அறிவித்தல்கள்

### தம்பு யோகராசா

(சாணைக்கடை உரிமையாளர்- நவீன சந்தை அருகில், யாழ்ப்பாணம் )



அல்லாரையைப் பிறப்பிடமாகவும், எழுதுமட்டுவாளை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பு யோகராசா 13.02.2017 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பு - சின்னமணி தம்பதிகளின் அன்பு புதல்வனும், காலஞ்சென்றவர்களான தம்பு - வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் மருமகனும், மகேஸ்வரியின் அன்புக் கணவரும், ஜெயராஜ் (பிரான்ஸ்), றஜீவன் (பிரான்ஸ்), சயூனா (பிரான்ஸ்), மயூரா ஆகியோரின் அன்புத் தந்தையும், பிரபாகரன் (பிரான்ஸ்),நிரோசி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் அக்ஷராவின் பேரனும், பரஞ்சோதி, யோகமலர், கலாராணி ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.02.2017) வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் எழுதுமட்டுவாள் இராமியன் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

எழுதுமட்டுவாள் தெற்கு, எழுதுமட்டுவாள்.

தகவல்: குடும்பத்தினர்.

(I/8178) (11,17) **077 335 1388**

### திருமதி நளாயினி (கண்ணகை) செல்லையா



யாழ். வயாவிளானைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில் கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட திருமதி நளாயினி செல்லையா 12.02.2017 ஞாயிற்றுக் கிழமை அகலாமரணமடைந்தார்.

அன்னார் நாகலிங்கம் - சின்னம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரியும் ஆறுமுகம் - இளையாச்சி தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற ஆறுமுகம் செல்லையாவின் அன்பு மனைவியும் ரேணுகா (சுவிஸ்), மதன் (கனடா),ஜெகன் (பிரசன்னா - பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் இராசதுரை, கஜந்தினி, பிரியா ஆகியோரின் அன்பு மாமியாரும் கல்கி, விஷ்ணு, சித்தாத் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் மகாலிங்கம், சிவலிங்கம்,காலஞ்சென்ற தர்மலிங்கம், சோதிதரன், அருந்தவமூர்த்தி ஆகியோரின் அன்பு மைத்துனியும் தர்மபாலன், குணபாலன், நந்தினி, நளினி, காலஞ்சென்ற தனபாலன் மற்றும் மாலினி, குமுதினி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.02.2017) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று கோண்டாவில் கட்டையாலடி மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

280/1, இருபாலை வீதி, கோண்டாவில் கிழக்கு.

தகவல்: குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

### ஐயாத்துரை பத்மலிங்கம்

(கிளி அண்ணை)



தோற்றம்: 19.03.1938
மறைவு: 13.02.2017

யாழ். உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் குரும்பசிட்டி மேற்கில் வசித்து வந்த வருமான ஐயாத்துரை பத்மலிங்கம் 13.02.2017 திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னாரின் பூதவுடல் யாழ்ப்பாணம் இல. 180, பிரதான வீதியில் அமைந்துள்ள வைற் ஹவுஸ் மண்டபத்தில் இன்று (15.02.2017) புதன் கிழமை காலை 9.00 மணி முதல் அஞ்சலிக்கு வைக்கபட்டு பிற்பகல் ஒரு மணிக்கு இறுதிக் கிரியைகள் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக யாழ். கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்



நேற்றுமுன்தினம் இரவு பெய்த மழையால் நெற்செய்கையாளர்கள் பாதிப்படைந்தனர். அறுவடை செய்யப்பட்டிருந்த நெற்கதிர்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. அவற்றை வீதிகளில் பரப்பி விவசாயிகள் காய வைக்கும் முயற்சியில் இறங்கியுள்ளனர். வறட்சியான காலநிலையில் பல சிரமங்களின் மத்தியில் மேற்கொள்ளப்பட்ட நெற்செய்கை பாதிப்படைந்துள்ளதால் விவசாயிகள் பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ளனர்.
படம்- வடமராட்சி(ற-108)

# பதில் ஆசிரியர் சிக்கலால் இடமாற்றத்தில் இழுபறி

அச்சுவேலி,பெப்.15
மேல்மாகாணத்தில் இருந்து விடுவிப்பதானால் பதில் ஆசிரியர்கள் வேண்டும் என மேல்மாகாண பொதுச் சேவை ஆணைக் குழுவும், பதில் ஆசிரியர்களை வழங்கி வடக்கு மாகாண ஆசிரியர் சேவையில் இணைத்துக் கொள்ளமுடியாது என வடக்குமாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவும் அறிவித்துள்ளன. எமக்கு வழங்கிய ஐந்து வருட சேவை முடிந்த நிலையிலும் தங்களது சொந்த மாகாணத்துக்கு திரும்ப முடியாதுள்ளது.

இவ்வாறு சேவைக்கால நிபந்தனை அடிப்படையில் நியமனம் பெற்ற ஆசிரியர்கள் கவலை தெரிவித்தனர்.

மேல்மாகாண பாடசாலைகளில் ஐந்து வருடங்கள் கடமை புரியவேண்டும் என்ற நிபந்தனையுடன், 2011 ஆண்டு நியமனம் பெற்ற ஆசிரியர்கள் 14 பேர் வடக்கு மாகாணத்துக்கு விடுவிக்கப்பட்டனர். ஜனவரி 19 ஆம் திகதி மேல்மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு ஆசிரியர்களின் பெயர் விவரம் உள்ளடக்கிய பட்டியலை வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவுக்கு அனுப்பியது. விடுவிப்பு கட்டளையுடன் இந்த பட்டியலில் உள்ள 14 பேரையும் விடுவிப்பதற்கு வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக் குழு பதில் ஆசிரியர்கள் 14 பேரை வழங்க வேண்டும் என்ற குறிப்பும் உள்ளடக்கப்பட்டிருந்தது.

வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக் குழு 14 ஆசிரியர்களுக்கும் பதில் ஆசிரியர்களை வழங்கும் நிலையில் இல்லை என மேல்மாகாண பொதுச்சேவை ஆணைக் குழுவுக்கு பெப்ரவரி 9 ஆம் திகதி பதில் கடிதம் அனுப்பியது.

சேவைக்கால நிபந்தனையை முழுமை செய்த போதிலும் தங்கள் சொந்த மாகாணத்துக்கு திரும்ப முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் விசனம் தெரிவிக்கின்றனர். மேல் மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு விடுவித்த ஆசிரியர்களில் 90 வீதமானோர் பெண்கள் என்று தெரிவிக்கப்பட்டது. (ற-11)

# நெல் கொள்வனவுக்கு நிர்ணய விலை தேவை

## இரணைமடு விவசாயிகள் சம்மேளனம் கோரிக்கை



கிளிநொச்சி, பெப்.15
வடக்கில் கால போகச் செய்கை அறுவடை ஆரம்பமாகியுள்ளது. அதிலுள்ள நடைமுறைக் குழப்பங்கள் தொடர்பாக உரிய அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும். விவசாயிகளின் நலன்பேண முன்வர வேண்டும்.

இவ்வாறு இரணைமடு விவசாயிகள் சம்மேளனத் தலைவர் மு.சிவமோகன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவர் தெரிவித்ததாவது:
வடக்கில் 2016-2017 காலபோக விதைப்பு வறட்சியால் பாதிக்கப்பட்டது. தப்பிய பயிர்களை விவசாயிகள் தற்போது அறுவடை செய்கின்றனர். ஏக்கருக்கு 30 முதல் 35 வரையான மூடை அறுவடை கிடைக்கும். எமது மாவட்டத்தில் வறட்சியால் சுமார் 20 மூடைகளே கிடைக்கின்றன.

மானாவாரியை மட்டுமே நம்பி விதைத்த விவசாயிகள் ஏக்கருக்கு 5 முதல் உட்ச பட்சமாக10 மூடைகளே அறுவடை செய்கின்ற அவலமும் நடக்கின்றது.

விவசாயிகளின் பணத் தேவையைச் சாதகமாக்கி சில தனியார் வியாபாரிகள் 70 கிலோ நெல்லை 2 ஆயிரத்து 500 ரூபாவுக்குக் கொல்வனவு செய்கின்றனர். வெற்றுப் பைகள் கூட விவசாயிகளால் 28 ரூபா விலையிலேயே கொள்வனவு செய்யப்படுகின்றன.

சில வியாபாரிகள் தாம் அதிக பணம் வழங்குகின்றோம் என்று கூறுகின்றனர். 2 ஆயிரத்து 800 ரூபா வழங்குகின்றோம் என்று கூறினாலும், கூறுவிற்ற, கழிவு என்ற பெயரில் 80 கிலோ நெல்லே ஒரு மூட்டையாக கட்டப்படுகின்றது.

இயற்கையால் பாதிக் கப்பட்டுள்ள விவசாயி களின் அவலத்தைப் போக்க அரசு உடனடியாக நிர்ணய விலையில் நெல் கொள்வனவில் ஈடுபட வேண்டும்- என்றார். (ற-101)

# கிராம அலுவலர் பற்றாக்குறையால் மாந்தை கிழக்கு மக்கள் சிரமம்

முல்லைத்தீவு, பெப்.15
முல்லைத்தீவு, மாந்தை கிழக்கில் 15 கிராம அலுவலர் பிரிவுகள் உள்ள போதும், 5 கிராம அலுவலர்களே பணியில் உள்ளனர். சேவைகளைப் பெறுவதில் பெரும் நெருக்கடிகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

இவ்வாறு பிரதேச பொது அமைப்புக்கள் தெரிவித்தன.

ஒரு கிராம அலுவலர் மூன்று பிரிவுகளில் கடமையாற்ற வேண்டியுள்ளது. ஒரு கிராம சேவகர் சுகவீனம் காரணமாகவோ அல்லது தேவையின் நிமித்தமோ விடுமுறையில் சென்றால் எமக்கான கிராம அலுவலர் யார் என்பதை அறிவதே பெரும் சிரமமாக இருக்கின்றது. அவர் யார் என்று அறிந்து நெடுந்தூரம் பயணித்து, அவரது கிராமத்துக்குச் சென்றால் அவர் அங்கு இருக்க மாட்டார். அவர் வேறொரு கிராமத்துக்குப் பதில் கடமைக்குச் சென்றிருப்பார். கிராம அலுவலர்களைச் சந்திப்பதற்குப் பல கிராமங்களுக்கு அலைய வேண்டியுள்ளது. அல்லது அடுத்து வரும் புதன் கிழமை வரை காத்திருந்து, பிரதேச செயலகத்திலேயே சந்திக்க வேண்டும். பணியாற்றும் கிராம அலுவலர்கள் பெரும் சிரமத்தின் மத்தியிலேயே எமக்குச் சேவைகளை வழங்குகின்றனர். பிரதேச செயலகத்தின் நிலைமையும் மோசமாக உள்ளது.

பிரதேச செயலர் எமது பகுதிக்கு நியமிக்கப்படாததால் உதவிப் பிரதேச செயலரே பணிகளை மேற்கொள்கின்றார். திட்டமிடல் அதிகாரி, பிரதம எழுதுநர், நிர்வாக உத்தியோகத்தர் என எவரும் இல்லை. முகாமைத்துவ உதவியாளர்களாகப் பணியாற்றும் எழுதுநர்கள் 20 பேர் பணியாற்ற வேண்டிய நிலையில், 5 பேர் மட்டுமே பணியாற்றுகின்றனர்.

மேலதிக பதிவாளர் இல்லை. பிரதேச செயலாளர் அலுவலகத்தில் உள்ள சமயமே பிறப்பு, இறப்புச் சான்றிதழ், திருமணச் சான்றிதழ்களைப் பெற முடியும். அவர் பணி நிமித்தமோ, கூட்டங்களுக்கோ சென்றுவிட்டால் அன்றைய தினம் சான்றிதழ்களைப் பெற முடியாது.

பணி வெற்றிடங்களை நிரப்புவதற்கு மாவட்டச் செயலகமும், உரிய அமைச்சும் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்- என்று பிரதேச பொது அமைப்புக்கள் கோரிக்கை விடுத்தன.

எமது பிரதேசத்தில் ஆளணிப் பற்றாக்குறை பெரும் பிரச்சினையாகவே உள்ளது. 160 பணியாளர்கள் இருக்க வேண்டிய நிலையில், 70 பணியாளர்களே அனைத்துப் பணிகளையும் செய்கின்றனர். கிராம அலுவலர்கள், முகாமைத்துவ உதவியாளர்கள், மேலதிக பதிவாளர்களை நியமிக்க வேண்டும் என்று உரிய அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தியுள்ளோம்- என்று மாந்தை கிழக்குப் உதவிப் பிரதேச செயலாளர் தெரிவித்தார். (ற-101)




# துயிலுமில்லத்தில் போடப்பட்ட வேலி அகற்றம்

கிளிநொச்சி, பெப்.15
கிளிநொச்சி-கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லம் அமைந்துள்ள காணியில் தனியார் ஒருவரால் போடப்பட்ட வேலி நேற்று கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலகத்தால் அகற்றப் பட்டது.

மாவீரர் துயிலும் இல்லம் காணியின் ஒரு பகுதி தனக்குச் சொந்தமானது எனத் தெரிவித்த தனி நபர் ஒருவர் நேற்றுக் காலை கூலியாள்களைக் கொண்டு கம்பி கட்டைகள் போட்டப்பட்டு வேலி அமைக்க முற்பட்டார்.

இந்த விடயம் பிரதேச செயலகத்துக்கு தெரியப்படுத்தப்பட்டதை அடுத்து, அங்கு சென்ற பிரதேச செயலகத்தின் பணியாளர்கள் வேலியை அகற்றினர் என்று தெரிவிக்கப்பட்டது.

மாவீரர் துயிலும் இல்லம் அமைந்துள்ள காணி அரச காணி, தனியார் உரிமை கோர முடியாது. காணி அவருக்கானது என்பதற்கு அவரிடம் எந்த ஆதாரமும் இல்லை- என பிரதேச செயலகத்தினர் தெரிவித்தனர். (ற-35,6)

## காணவில்லை



படத்தில் உள்ள எனது மகள் (D.K. கித்மி திவ்யாஞ்சலி), மனைவி (அபிதாயித் பாத்திமா முமினா - 868180960V) ஆகிய இருவரையும் கடைசியாக நாவலப்பிடியா ஜெயசுந்தர வீதி என்ற இடத்தில் 28.11.2016 ஆம் திகதியிலிருந்து காணவில்லை. இவர்களைப் பற்றிய விவரம் ஏதேனும் தெரிந்தவர்கள் தயவு செய்து தொடர்பு கொள்ளவும்.

076 380 2880 -தமிழில்
075 865 4748 - சிங்களத்தில்

தகவல்:
தகப்பன்

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை
## இராமநாதன் நுண்கலைக்கழகம்
## பல்கலைக்கழக அனுமதி –2016/2017

**உளச்சார்புப் பரீட்சை (Aptitude Test)**

**நுண்கலைமாணி - இசை, நடனம், சித்திரமும் வடிவமைப்பும்**

மேற்படி நான்கு வருடபட்டப் படிப்புக்கற்கைநெறிகளுக்கு அனுமதி பெறவிரும்பும் தகுதியான விண்ணப்பதாரிகளிடமிருந்து 28.02.2017ஆம் திகதி வரை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

**அனுமதிக்கான பொது நிபந்தனைகளும் தகைமைகளும்**

**அனுமதிக்கான தகைமைகள்**

சங்கீதம், நடனம், சித்திரமும் வடிவமைப்பும் கற்கைநெறிகளில் யாதேனுமொன்றைத் தெரிவு செய்வதற்கு விரும்பும் விண்ணப்பதாரிகள் 2016 ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த (உ.த)பரீட்சையில் சித்தியடைந்து இருப்பதுடன் தெரிவு செய்யவிரும்பும் பட்ட பாட நெறிக்குரிய பாடத்தில் அதாவது கர்நாடகசங்கீதம் அல்லது நடனம் - பரதம் அல்லது சித்திரக்கலையில் ஆகக் குறைந்தது திறமைச்சித்தியும் (C), மற்றைய இரண்டு பாடங்களிலும் ஆகக் குறைந்தது சாதாரணதரச் சித்தியும் (S) பெற்றிருத்தல் வேண்டும். (இலங்கை ப.மா.ஆணைக்குழு மாணவர் கைநூல் பக்கம்-36 பிரிவு-09)

**தகுதிகாண் பரீட்சைஆற்றுகை/ உளச்சார்பு பரீட்சை**

மேற்குறித்த கற்கைநெறி அனுமதிக்கான விண்ணப்பதாரிகள் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தால் நடத்தப்படும் ஆற்றுகைப் பரீட்சை./ உளச்சார்பு பரீட்சைக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் தோற்றுதல் வேண்டும்.

சங்கீதம், நடனம்-. ஆற்றுகை பரீட்சை

சித்திரமும் வடிவமைப்பும்- ஆற்றுகை மற்றும் உளச்சார்பு பரீட்சைகள்

**விண்ணப்பங்களை சமர்ப்பித்தல்**

விண்ணப்பதாரிகள் கீழேகொடுக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தை A4 தாளில் தயாரித்தோ அல்லது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அனுமதிகள் கிளையில் பெற்றோ அல்லது **www.jfn.ac.lk** என்ற யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இணையதளத்தில் இருந்து பிரதி செய்தோ தகுதிகாண் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள். மேற்படி தகுதிகாண் பரீட்சைக்கான விண்ணப்பத்துடன் ரூபா. 300 ஐ ஏதாவது ஒரு மக்கள் வங்கிக் கிளையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மக்கள் வங்கிக் கிளைக் கணக்கு இல. 162100160000880 இல் செலுத்திப் பெற்ற பற்றுச்சீட்டுடன் **பாடசாலை அதிபர் அல்லது சமாதான நீதவானால் உறுதிப்படுத்தப்பட்ட க.பொ.த (உ.த) பெறுபேற்றுப் பத்திரத்தினது போட்டோப் பிரதியும்** அனுப்பப்படல் வேண்டும். பரீட்சைப் பெறுபேற்றில் அல்லது பெயரில் மாற்றங்கள் ஏதும் இருப்பின் அதற்குரிய சத்தியக்கடதாசி சமர்ப்பிக்கப்பட்டு உறுதிசெய்யப்பட வேண்டும்.

பிரவேச அனுமதித் தகைமையைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகளுக்கு ஆற்றுகை/ நேர்முகப் பரீட்சைக்குரிய அனுமதி அட்டை அனுப்பி வைக்கப்படும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் யாவும் 28.02.2017 ஆம் திகதிக்கு முன்னதாக உதவிப்பதிவாளர், அனுமதிகள் கிளை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் கற்கை நெறியைக் குறிப்பிட்டு பதிவுத்தபால் மூலம் அல்லது நேரில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அனுமதிக்குரிய ஆகக்குறைந்த தகைமையை கொண்டிராததும், பணம் செலுத்திய பற்றுச்சீட்டு சமர்ப்பிக்கப்படாததும், பெறுபேற்று பத்திரங்களின் உறுதி செய்யப்பட்ட போட்டோ பிரதிகள் இணைக்கப்படாததும், விண்ணப்ப முடிவுதிகதிக்குள் கிடைக்கப்பெறாததுமான விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும். மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண் 021 222 6714.

பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
15.02.2017

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை
இராமநாதன் நுண்கலைக்கழகம்
பல்கலைக்கழக அனுமதி –2016/2017
நுண்கலைமாணி - இசை, நடனம், சித்திரமும் வடிவமைப்பும்
தகுதிகாண் பரீட்சைக்கான விண்ணப்பப்படிவம்(Aptitude Test)

விண்ணப்பதாரியின் முழுப் பெயர்:-
(தமிழிலும் ஆங்கிலத்திலும்)
முதல் எழுத்துக் குறிக்கும் பெயர்:-
தேசிய அடையாள அட்டையிலக்கம்:
நிரந்தர முகவரி (ஆங்கிலத்தில்):-
தொலைபேசி இலக்கம்:- மின்னஞ்சல் முகவரி:-
2. க.பொ.த (உ.த)பரீட்சைப் பெறுபேறு 2016:-
சுட்டிலக்கம்: Z புள்ளி: பொதுச்சாதாரண பரீட்சைப்புள்ளி:

| பாடம் | தரம் | மொழி மூலம் | மாவட்டம் |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |

3. பெற்றோர்/பாதுகாவலர் பெயர்:
முகவரி: (ஆங்கிலத்தில்):-
4. விண்ணப்பிக்கும் பாட நெறி: இசை நடனம் சித்திரமும் வடிவமைப்பும்
(தெரிவிற்கு √ இடுக)

சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்கள்:
1. பணம் செலுத்திய பற்றுச்சீட்டு
2. உறுதிப்படுத்திய 2016க.பொ.த (உ.த)பரீட்சைப் பெறுபேற்றுச்சான்றிதழ் (Z புள்ளி/மாவட்டம் உள்ளடங்கலாக)
3. பெயர் மாற்றம் செய்யின் அதனை உறுதிப்படுத்தக்கூடிய ஆவணம்

என்னால் தரப்பட்ட மேற்படி விபரங்கள்யாவும் சரியென உறுதிப்படுத்துகின்றேன்.

........................ ........................
திகதி விண்ணப்பதாரியின் கையொப்பம்.

என்முன்னிலையில் கையொப்பமிட்டார் என்பதைஉறுதிப்படுத்துகின்றேன்.

திகதி பதவி முத்திரை பாடசாலை அதிபர் / சமாதான நீதவான் கையொப்பம்.


# அரிசியை பதுக்கினால் கடுமையான நடவடிக்கை

## அமைச்சர் ரிசாட் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், பெப்.15

கட்டுப்பாட்டு விலைக்கே அரிசி விற்கப்பட வேண்டும். அரிசியைப் பதுக்கி வைத்து அதிக விலைக்கு விற்க முயற்சிக்கும் வர்த்தக நிலையங்கள் சீல் வைக்கப்பட்டு அரசுடைமையாக்கப்படும்.

இவ்வாறு அமைச்சர் ரிசாத் பதியுதீன் தெரிவித்தார்.

வவுனியா, செட்டிக்குளத்தில் நேற்றுமுன்தினம் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நடைபெற்றது. கூட்டம் முடிந்ததும் அவர் வவுனியா சதோச விற்பனை நிலையத்துக்கு திடீரெனச் சென்று பார்வையிட்டார். பின்னர் செய்தியாளர்களுக்கு அவர் கருத்துத் தெரிவித்தார்.


அரிசிக்குக் கடந்த வாரம் கட்டுப்பாட்டு விலை அறிவிக்கப்பட்டது. அந்த விலைக்கே அரிசி விற்கப்பட வேண்டும். அவ்வாறு விற்பனை செய்யாத வர்த்தகர் களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும். அதற்காக நாடு முழுவதும் பாவனையாளர் அதிகார சபையால் 200 உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் தமது கடமையை ஆரம்பித்துள்ளனர்.

ஒரு வாரத்துக்குள் நாடு முழுவதும் உள்ள வர்த்தக நிலையங்களைக் கண்காணிப்பது சாத்தியமற்றது. அதனால் சில தவறுகள் நடக்கின்றன. தவறு செய்பவர்கள் கண்டுபிடிக்கப்பட்டால் சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவர்.

நாட்டில் உள்ள பெரிய வியாபாரிகள், அரிசி ஆலை வைத்திருப்பவர்கள் நெல்லைப் பதுக்கி வைத்து அதிக விலைக்கு விற்கின்றனர் என்று எமக்குத் தகவல் கிடைத்துள்ளது. அவ்வாறு செயற்படுபவர்கள் அதை உடன் நிறுத்த வேண்டும்.

எம்மால் இனங்காணப்பட்டால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், வர்த்தக நிலையங்க ளுக்கு சீல் வைத்து அரசு டமையாக்கப்படும்.- என்று அவர் தெரிவித்தார். (ம-21,10)

# பெண்களுக்கு தனியிடத்தில் சிகிச்சையளிக்க கோரிக்கை



கிளிநொச்சி பெப். 15

கிளிநொச்சி பொது வைத்தியசாலை அவசர சிகிச்சை பிரிவில் ஆண்களுக்கும், பெண்களுக்கும் ஒரே இடத்தில் சிகிச்சையளிக்கப்படுகின்றது. அதனால் பெண்கள் அசௌகரியங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது என்று சுட்டிக் காட்டப்படுகின்றது.

ஆண்களையும் பெண்களை வேறுவேறாக வைத்து சிகிச்சை வழங்குவதற்கு வைத்தியசாலை நிர்வாகம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த விடையம் தொடர்பாக மாகாண சுகாதாரப்பணிப்பாளருடன் தொடர்பு கொண்டு கேட்டபோது

அவசர சிகிச்சை பிரிவு ஆண்களுக்கு வேறு, பெண்களுக்கு வேறு என அமைக்கப்படுவதில்லை. அங்கு மறைப்புக்கள் காணப்படும். கிளிநொச்சி வைத்தியசாலையில் மறைப்புக்கள் அற்ற நிலை காணப்படுமாயின் அது சீர் செய்யப்படும்.- என்று மாகாண சுகாதாரப் பணிப் பாளர் தெரிவித்தார். (ம-6)

# வீதியில் சிதறிக் கிடக்கும் மின் கட்டணச் சிட்டைகள்

கிளிநொச்சி, பெப்.15

கிளிநொச்சி மாவட்டத்தில் வீடுகளுக்கு வழங்கப்படாத மின் கட்டணச் சிட்டைகள் வீதியில் எறியப்பட்டுள்ளன. பரந்தன். பூநகரி வீதியில் பொறிக்கடவை சந்தி தொடக்கம் குடமுருட்டி பாலம் வரை மின்சார சபையின் மின் கட்டண சிட்டைகள் வீதியில் சிதறிக் காணப்படுகின்றன.



கடந்த வருடம் நவம்பர் மாதத்துக்குரியதும், தர்மபுரம், முரசுமோட்டை, ஊரியான், புன்னைநீராவி, மயில்வாகனபுரம், போன்ற கிராமங்களுக்குரியதுமான மின் கட்டண சிட்டைகளே வீதியில் எறிப்பட்டுள் ளன.

பிரதேச மக்களிடம் கேட்டபோது கடந்த வருடம் நவம்பர் மாத மின் கட்டண சிட்டைகள் தமக்கு வழங்கப்படவில்லை என்று தெரிவித்தனர். தமக்கு பல மாதங்களுக்குரிய மின்சாரக் கொடுப்பனவுகளை ஒரு சிட்டையில் இணைத்து வழங்குவது நெருக்கடிகளை ஏற்படுத்துகின்றது என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

இந்த விடயம் தொடர்பில் ஆராய்ந்த பின்னரே எதனையும் தெரிவிக்க முடியும் என்று கிளிநொச்சி பிராந்திய மின்சார சபை அலுவலகத்தினர் தெரிவித்தனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் பல கிராமங்களில் மின் இணைப்பு வழங்கப்பட்ட நாள் முதல் இதுவரை மின் கட்டணச் சிட்டைகள் வழங்கப்படவில்லை என்று மக்கள் சுட்டிக்காட்டினர். (ம-35)






நெல்லுக்கு நியாய விலை கோரி

# மட்டக்களப்பில் விவசாயிகள் ஆர்ப்பாட்டம்

செங்கலடி, பெப்.15
அரசு, நெல்லை உத்தர வாத விலைக்குக் கொள் வனவு செய்ய வேண்டும் என்று கோரி ஓட்டமாவடி விவசாயிகள் நேற்று போராட்டத்தில் ஈடுபட்டனர்.
அரசால் நெல்லுக்கு உத்த ரவாத விலை தீர்மானிக் கப்பட்டுள்ளது. உத்தர வாத விலைக்கே நெல் லைக் கொள்வனவு செய்ய வேண்டும். அதே போன்று தனியாரும் உத்தரவாத விலைக்குக் கொள்வனவு செய்ய வேண்டும் என்று போராட் டத்தில் ஈடுபட்டவர்கள் வலியுறுத்தினர்.
மட்டக்களப்பு ஓட்டமாவடி விவசாய எல்லைக்குப்பட்ட விவசாய அமைப்புக்க ளால் ஏற்பாடு செய்யப்பட் டது.
இந்தப் போராட்டம் விவசாயிகள் ஓட்டமாவடிப் பிரதேசசபைக்கு முன்பாக ஒன்றுகூடி, கோறளைப் பற்று மேற்கு ஓட்டமாவடி பிரதேச செயலகம் வரை உழவு இயந்திரத்தில் நெல் மூட்டைகளை ஏற் றிய வாறு பேரணியாகச் சென்றனர். பேரணியில் 20 இற்கும் மேற்பட்ட விவசாய அமைப்புகள் கலந்து கொண்டன.
"எமது பிரதேசத்தில் தற் போது பெரும்போக அறு வடை நடை பெற்றுக் கொண்டிருக்கிறது. விவ சாயிகள் பெரும் சிரமத் தின் மத்தியில் அறுவடை செய்யும் நெல்லை, குறைந்த் விலைக்குத் தனியார் கொள்வனவு செய்யும் நிலை காணப் படுகிறது. அரசால் நிர்ண யிக்கப்பட்ட உத்தரவாத விலைக்குக் கொள்வனவு செய்வதன் மூலமே நாங் கள் இலாபமடைய முடி யும்" என்று விவசாயிகள் தெரிவித்தனர்.
கல்குடாத் தொகுதியில் வெளி மாவட்ட நெற் கொள்வனவு வியாபாரங் களை நேரடியாக விவ சாயிகளிடம் கொள்வனவு செய்ய இடமளியுங்கள், ஏழை விவசாயிகளின் வயிற்றில் மில் உரிமை யாளர்களே குளிர் காய நினைக்காதீர்கள், வறட் சியால் பாதிக்கப்பட்ட விவ சாயிகளுக்கு நிவார ணம் வழங்குங்கள், ஏழை விவசாயிகளின் விளை பொருள்களுக்கு போதிய விலை கொடுங்கள், விவ சாயிகள் நல்லாட்சியில் வாழ்வதா அல்லது செத்து மடிவதா, விவசாயிகளை ஏமாற்றாதே விவசாயி களை ஏமாற்றாதே' போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறு அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.
விவசாயிகள் தமது கோரிக்கைகள் தொடர் பான மனு ஒன்றை பிர தேச செயலாளர் எம்.எம். நபௌபரிடம் கையளித் தனர். விவசாயிகளின் கோரிக்கை அடங்கிய மனு உடனடியாக மட்டக் களப்பு மாவட்ட செயல ருக்கும், உரிய அதிகாரிக ளுக்கும் அனுப்பி வைக் கப்படும் என்று பிரதேச செயலாளர் தெரிவித்தார்.
(ஐ-ய-46)

# தேங்காய் துருவுவதற்கு நாம் நாடாளுமன்றம் போகவில்லை

## இப்படிச் சொல்கிறார் மனோ



நுவரெலியா, பெப்.15
கடந்த காலங்களில் உள்ள தலைவர்களைப் போன்று, நாங்கள் தேங்காய் துருவுவ தற்கு நாடளுமன்றம் போக வில்லை. மக்களுக்கான பணிகளை முன்னெடுக்கவே நாடாளுமன்றம் செல் கின் றோம்.-
இவ்வாறு தேசிய சுக வாழ்வு மற்றும் அரசகருமமொழிகள் அமைச்சர் மனோகணேசன் தெரிவித்தார்.
இந்திய அரசின் நிதியுதவி யுடன் மலையக மக்களுக் காக நிர்மாணிக்கப்படவுள்ள 4ஆயிரம் தனி வீடமைப்பு வேலைத்திட்டம் பொகவந்த லாவ பொகவனா தோட்டத் தில் நேற்று ஆரம்பிக்கப் பட்டது. அந்த நிகழ் வில் கலந்துகொண்டு உரை யாற்றும் போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்த தாவது:
நாட்டில் அரச தலை வர் மற் றும் தலைமை அமைச்சர் ஆகியோர் எமது மலையக மக்களின் பிரச் சினைகளை நன்கு ஆராய்ந்து உதவி களைச் செய்கின்றனர்.
கடந்த காலங்களில் நாடா ளுமன்றம் சென்றவர்கள் மலையக மக்களின் உரி மைக்காகக் குரல் எழுப்புவது குறைவாகவே இருந்தது. இன்று ஒவ்வொரு சந்தர்ப் பத்திலும் தமிழ் முற்போக்குக் கூட்டணி மலையக மக்களு டைய உரிமைக்காக குரல் எழுப்புகின்றது.
இந்திய அரசின் ஊடாக இலங்கைக்கு பல்வேறு உதவிகள் செய்யப்பட்டு வரு கின்றன. இலங்கை நமக்குத் தாய் நாடாக இருக்கும் பொழுது இந்தியா தந்தை நாடாக இருக்கின்றது. இரு நாடுகளுக்கும் இடையி லான மக்களின் உறவை யாராலும் பிரிக்க முடியாது - என்றார். (ஐ-ய-43)

# கிழக்கு முதலமைச்சு அலுவலகத்தில் விபத்து

அம்பாறை, பெப்.15
கிழக்கு மாகாண முதல மைச்சு அலுவலக நிர்வாகப் பிரிவில் நேற்றுக் காலை 10.30 மணியள வில் மின்னொழுக்கு காரணமாகத் தீவிபத்து ஏற்பட்டது. எனினும் பெரியளவில் சேதங்கள் ஏற்படவில்லை என்று முதலமைச்சின் செயலாளர் யு.எல். ஏ.அஸீஸ் தெரிவித்தார்.
வழமைபோன்று காரியாலய வேலைகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கும் போது, நிர்வாகப் பிரிவில் மின்னொழுக்கு ஏற்பட்டு தீப்பிடித்துள்ளது. அங்கு கடமையிலிருந்த உத்தியோகத்தர்கள் தீயை அணைத்தனர்.
நிர்வாகப்பிரிவிலுள்ள சில ஆவணங்கள் தீப்பிடித் துள்ளன. ஆவணங்கள் சேகரித்து வைத்திருந்த அலுமாரி மற்றும் ஜன் னல்களும் தீக்கிரை யாகியுள்ளன எனவும் அவர் தெரிவித்தார்.
(ஐ-ய-48)


# கேள்விக்கான கோருதல்
# மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்

1. தலைவர் பெறுகைக்குழு மாவட்டச்செயலகம் சார்பாக அரசாங்க அதிபர்/ மாவட்டச் செயலாளரால் **கீரிமலையில் மீள் குடியேற்றத்துக்காக அமைக்கப்படவுள்ள 225 வீடுகளுக்கான (அண்ணளவாக 550 சதுர அடி) கட்டடப்பொருள் விநியோகத்திற்காக** தகைமையுடையோரிடம் இருந்து குறியீடு செய்யப்பட்ட விலைக்கேள்விகள் கோரப்படுகின்றன.
2. கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்வியின் மூலம் நடத்தப்படும்
3. பொதுநிதிச் சுற்றறிக்கை, 4/2016 இற்கு அமைவாக இவ்விலை மனுக் கோரலானது வடமாகாணத்திற்குள் தகுந்த வியாபார அல்லது கம்பனிப் பதிவுகளை கொண்டுள்ளதும் கறுப்புப் பட்டியலில் பெயர் இடப்படாததுமான கேள்வியாளருக்கு வழங்கப் படுவதற்கு உரித்துடையதாகமட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
4. கேள்வியை சமர்ப்பிக்க ஆர்வமுள்ள கேள்வியாளர்கள் மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கும், கேள்வி ஆவணங்களைப் பரிசோதிப்பதற்கும் மாவட்டச் செயலகத்தில் மேலதிக மாவட்டச் செயலாளர் (காணி) அலுவலகத்தில் அலுவலக நாள்களில் மு.ப 8.30 முதல் பி.ப4.00 மணிவரைதொடர்பு கொள்ளலாம்.
5. கேள்வியாளர்கள் ஆங்கில மொழியிலான கேள்வி ஆவணங்களின் பூரண தொகுதி ஒன்றினைப் பெற்றுக் கொள்வதற்குப் பதிவு செய்யப்பட்ட வியாபார பதிவுச்சான்றிதழ் அல்லது அனுமதிப் பத்திரத்தினையும், எழுத்து மூலமான விண்ணப்பமொன்றினையும், மீளளிக்கப்படாத தொகையான ரூ.1000 ஐ மாவட்டச் செயலக வங்கிக்கணக்கு இலக்கம் 7041946 செலுத்திய பற்றுச் சீட்டினையும் சமர்ப்பித்து கேள்வி ஆவணங்களினை 15.02.2017 முதல் 01.03.2017 வரை பெற்றுக் கொள்ளமுடியும்.
6. பூரணப்படுத்தப்பட்ட கேள்விகள் 02.03.2017 ஆம் திகதியன்று பி.ப 2.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக தலைவர், மாவட்டச் செயலக பெறுகைக்குழு, மாவட்டச் செயலகம், கண்டிவீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிட்டுப் பதிவுத்தபால் மூலமாகவோ அல்லது அரசாங்க அதிபர் அலுவலகத்திலுள்ள கேள்விப்பெட்டியில் சேர்ப்பிக்கவேண்டும். கேள்விகோரல் முடிவுற்ற உடனேயே திறக்கப்படும்
7. கேள்விகளை சமர்ப்பிக்கும் போது இடதுபக்கமேல் மூலையில் கேள்வி கோரலுக்கான மூலப்பொருட் தொகுதியின் வகையும், அதன் கேள்வி இலக்கமும் குறிப்பிடப்பட்டிருக்க வேண் டும். காலம் தாழ்த்தி கிடைக்கப்பெறும் கேள்விகள் நிராகரிக்கப்படும்.
8. கேள்விகள் திறக்கும்போது கேள்விகளை சமர்ப்பித்த கேள்விதாரர் அல்லது எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்கமுடியும்.
9. கேள்வி கோரப்பட்ட பொருள்களின் தரம், பொருள்களின் விநியோகம் தொடர்பான முற்கூட்டம் மாவட்டச் செயலகம் யாழ்ப்பாணத்தில் 27.02.2017 அன்று மு.ப 9.30மணிக்கு நடைபெறும்.

கேள்வி கோரலுக்கான மூலப்பொருள்களின் தொகுதி

1. கட்டடப்பொருள் 1- சீமெந்து,கம்பிகள்,
2. கட்டடப்பொருள் 2 -- மணல்,கல் (கருங்கல், சுண்ணாம்புக்கல், கண்டகல்)
3. கூரை வேலைக்கான பொருள்கள் - மரங்கள், ஓடு,ஆணி
4. கதவுமற்றும் யன்னல்களுக்கான மூலப்பொருள்கள்
5. வர்ணம் பூசுவதற்கான மூலப்பொருள்கள்
6. மலசலகூடம் அமைப்பதற்கான மூலப்பொருள்கள் மற்றும் நீர்த்தாங்கி, நீர்விநியோகப்பொருத்துக்கள்.
7. மின் இணைப்புச் செய்வதற்கான மூலப்பொருள்கள்

**நா.வேதநாயகன்,**
அரச அதிபர், மாவட்டச் செயலாளர், யாழ்.மாவட்டம்.

# மடுக்கரை— நானாட்டான் வீதி விரைவில் சீரமைப்பு

## வட மாகாண சபை நடவடிக்கை

மன்னார்,பெப்.15

மடுக்கரையில் இருந்து நானாட்டான் செல்லும் பிரதான வீதியில், தாரிடப்படாது காணப்படும் சுமார் 2 கிலோ மீற்றர் வீதியைச் சீரமைப்பதற்கு வடமாகாண சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

குறித்த வீதியானது சுமார் 8 கிலோ மீற்றர் நீளமானது. அதில் 2 கிலோ மீற்றர் வீதி தாரிடப்படாது குன்றும் குழியுமாக காணப்படுகிறது. இதனால் அங்கு சேவையில் ஈடுபட்டு வந்த இலங்கைப் போக்குவரத்துச் சபைப் பேருந்துகள் கடந்த ஒரு வாரத்துக்கும் மேலாக தமது சேவையை இடைநிறுத்தியிருந்தன.

இது தொடர்பில் வடமாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரனின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டது. இதனையடுத்து வடமாகாண போக்குவரத்து அமைச்சர், இலங்கைப் போக்குவரத்துச் சபை மன்னார் சாலை முகாமையாளர், வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் மன்னார் மாவட்ட நிறைவேற்றுப் பொறியியலாளர் உள்ளிட்ட குழுவினர் நேரடியாகச் சென்று வீதியின் நிலைமை தொடர்பில் ஆராய்ந்தனர்.

அதற்கமைவாக மன்னார் மாவட்ட வட மாகாண சபை உறுபினர்களான பிரிமூஸ் சிராய்வா மற்றும் குணசீலன் ஆகியோர் தலா 5 மில்லியன் ரூபாவை குறித்த வீதியைச் சீரமைப்பதற்கு வழங்கியுள்ளனர்.

இந்த நிதியூடாக குறித்த வீதியின் ஒருபகுதி தார் இட்டுச் செப்பனிடப்படவுள்ளது. மீதமுள்ள வீதியும் மிகவிரைவாக நிதிகிடைக்கும் போது முற்றுமுழுதாக செப்பனிடப்படும் என்று அமைச்சர் தெரிவித்தார்.

அத்துடன் இடைநிறுத்தப்பட்டிருந்த பேருந்துச் சேவையும் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ)

# பண்டிவிரிச்சான் பொலிஸாருக்கு மாற்றுக் காணி

யாழ்ப்பாணம், பெப்.15

பண்டிவிரிச்சான் துயிலுமில்லத்துக்கு அருகே உள்ள காணியை பொலிஸாருக்கு வழங்குவதற்கு எடுக்கப்பட்ட முயற்சி தடுக்கப்பட்டது. மாற்றீடாக அவர்களுக்கு வேறு காணி வழங்கப்பட்டு பிரச்சினைக்குத் தீர்வு எட்டப்பட் டது.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் இ.சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

மன்னார், மடு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பண்டிவிரிச் சானில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பால் துயிலும் இல்லம் உருவாக்கப்பட்டிருந்தது. அதன் அருகே உள்ள ஓர் ஏக்கர் காணியை பொலிஸ் நிலையம் அமைப்பதற்கு பிரதேச செயலரின் அனுமதியுடன் பொலிஸார் பெற்றிருந்தனர்.

அந்தக் காணியில் கடந்த ஒருவார காலமாகப் பொலிஸார் துப்புரவு நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தனர்.

துயிலுமில்லத்தில் விதைக்கப்பட்டவர்களின் உறவினர்கள் இது தொடர்பில் அதிருப்தி வெளிப்படுத்தினர். எனது கவனத்துக்கும் இந்த விடயத்தைக் கொண்டு வந்தனர்.

அந்தப் பிரதேசத்தை நேரில் சென்று பார்த்தேன். பிரதேச செயலர், பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆகியோருடன் கலந்துரையாடினேன்.

அதே அளவு பிறிதொரு காணியை வழங் கினால் அந்தக் காணியை விடுவிப்போம் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

200 மீற்றர் தூரத்தில் ஒரு காணி உடனடியாக வழங்கப்பட்டது. இந்தப் பிரச்சினை சுமுகமாகத் தீர்க்கப்பட்டது - என்றார். (ற-10)

# பயிரழிவுக் காப்புறுதிக்கு 9,425 பேர் விண்ணப்பம்

கிளிநொச்சி, பெப். 15

"வறட்சியால் பாதிக்கப்பட்ட கால போகச் செய்கைக்கான காப்புறுதிக்காக கிளிநொச்சி மாவட்டத்தில் இதுவரை 9 ஆயிரத்து 425 பேர் விண்ணப்பித்துள்ளனர்".

இவர்கள் கிளிநொச்சி மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் உதவி ஆணையாளர் வே.ஆயகுலன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கிளிநொச்சி மாவட்டத்தில் 15 ஆயிரத்துக்கும் அதிக விவசாயிகள் கால போகச் செய்கை மேற்கொண்டனர். நீர்ப்பாசனச் செய்கை தவிர்ந்த ஏனைய பயிர் நிலங்கள் வறட்சியால் பாதிப்படைந்தன. மாவட்ட ரீதியில் 30 ஆயிரம் ஏக்கர் நெற்செய்கை அழிவைச் சந்தித் துள்ளது.

அழிவடைந்த பயிர் நிலங்களுக்கு காப்புறுதியைப் பெறுவதற்கான படிவங்கள் மாவட்டத்தின் சகல கமநலத் திணைக்களங்களுக்கும் வழங்கப்பட்டன. பெறப்பட்ட விண்ணப்பப் படிவங்களை ஆராயும் நடவடிக்கை இப்போது நடைபெறுகின்றது.

பிரதேச செயலகங்கள் ஊடாக கிராம சேவகர், கமநல திணைக்கள உத்தியோகத்தர்கள் நேரடியாகச் சென்று பாதிப்புக்களின் தன்மை குறித்து ஆராய்வர். அவர்களின் அறிக்கை பிரதேச செயலரிடம் ஒப்படைக்கப்படும். எவ்வளவு காப்புறுதி வழங்கலாம் என்ற அறிக்கை ஒன்றை அவர் எமது திணைக்களத்துக்கு அனுப்புவார். அந்த அறிக்கை விவசாய அமைச்சுக்கு அனுப்பபடும். விவசாய அமைச்சு அதைக் காப் புறுதிச் சபைக்கு அனுப்பி காப்புறுதி இழுப்பீடுகளை வழங்கும். - என்றார். (ற-21,6)




# பாதசாரிகள் கடவையில் உறங்கியவர் விபத்தில் சாவு

தெமட்டகொட மேம்பாலத்தின் கீழ் பாதசாரிகள் கடவைப் பகுதியில் உறங்கிக் கொண்டிருந்த யாசகர் ஒருவர் மோட்டார் வாகனம் ஒன்றில் சிக்கி உயிரிழந்தார்.

நேற்றுமுன்தினம் இரவு இங்கம சந்தியில் இருந்து தெமட்ட கொடவை நோக்கி மேம்பாலத்தின் கீழ் பயணித்த மோட்டார் வாகனம் ஒன்றே யாசகரை மோதியது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் காயமடைந்த அவர் தேசிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மோட்டார் வாகனத்தின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற)

இணுவில் திருப்பதி

அருள்மிகு திருவேங்கடேஸ்வரர் ஆலய இலட்சார்ச்சனை விழா - 2017

15.02.2017 - 24.02.2017 வரை

கோவிந்த அடியார்களே!

வேண்டுவார்க்கு வேண்டுவன தந்தருளும் வண்ணம் கோயில் கொண்டிருக்கும் நித்திய கல்யாண மூர்த்தியாக அருள்பாலிக்கும் ஸ்ரீநிவாசப் பெருமானுக்கு நிகழும் துர்முகி வருடம் மாசித் திங்கள் மூன்றாம் நாள் (15.02.2017) தொடக்கம் மாசித் திங்கள் 12 ஆம் நாள் (24.02.2017) வரை இலட்சார்ச்சனை நடைபெற திருவருள் கூடியுள்ளது. தச அவதார மூர்த்தியான எம் பெருமானுக்கு பத்து ஆச்சாரியர்கள் ஒன்று கூடி இக் கைங்கரியம் நடைபெறவுள்ளதால் அடியார்கள் யாவரும் இவ்வாலயத்துக்கு வந்து, இந்த அர்ச்சனையிலும், தினமும் நடைபெறும் மகா யாகத்திலும் கலந்துகொள்ளும்படி வேண்டிக் கொள்கின்றோம்.

தினமும் மாலை 4.30 மணிக்கு ஆரம்பமாகி 7.30 மணிக்கு நிறைவடையும்.

சொற்பொழிவு நிகழ்ச்சி நிரல்

◆ முதலாம் நாள் (15.02.2017) மகா சுதர்ன சக்கர ஹோமம் -
வீரம் பெறவும் மற்றும் சகல வித தடை விலகவும்.
சைவப்புலவர் - சைவ சித்தாந்த பண்டிதர் நித்திய தசிதரன் அவர்கள்
விடயம் - 'கண்ணனும் வாழ்வும்'

◆ 2 ஆம் நாள் (16.02.2017) கயக்கிரீவ ஹோமம் / மேதாசூக்த ஹோமம் - சிறந்த கல்வி பெற.
சைவப் புலவர் - சைவசித்தாந்த பண்டிதர் நித்திய தசிதரன் அவர்கள்.
விடயம் - 'வாழ்வுக்கு வழிகாட்டும் நாராயணர்'

◆ 3ஆம் நாள் (17.02.2017) தன் வந்திரி ஹோமம் / ஆயுஷ்ய ஹோமம் - நோய், நொடி நீங்க
இறைபணிச் செல்வி கலாவித்தகி
திருமதி M. அனந்தலட்சுமி (இந்து அபிவிருத்தி உத்தியோகத்தர்- குருகுலம், ஆனைப்பந்தி) விடயம் - ' ஆலய வழிபாட்டு முறைகள்'

◆ 4ஆம் நாள் (18.02.2017) இலஷ்மி நரசிம்ம ஹோமம் -
தீய சக்திகளிலிருந்து விலகி லஷ்மி கடாட்சம் பெற.
சைவப்புலவர் - சைவநெறி சன்மார்க்கர் கா.கமலநாதன்.
விடயம் - 'அடியவருக்கு அடியவரானார்'

◆ 5ஆம் நாள் (19.02.2017) சந்தான கோபால ஹோமம் - பிள்ளைப் பாக்கியம் பெற
சைவப்புலவர் - சைவநெறி சன்மார்க்கர் பொ.சந்திரவேல்.
விடயம் - அவதார மகிமை

◆ 6ஆம் நாள் (20.02.2017) இலட்சுமி ஹோமம் - தன ஆகர்ன லக்குமி ஹோமம்
சை வநெறி சன்மார்க்கர் சிவ பிரியன் மு.நித்தியானந்தா.
விடயம் - லஷ்மி கடாட்சம்.

◆ 7ஆம் நாள் (21.02.2017) நாராயண சுத்த ஹோமம் - சுத்த புரு ஹோமம் சர்வ சித்தி
திரு.சந்திரவேல் அவர்கள். விடயம் - கிரியைகளும் வாழ்வும்.

◆ 08 ஆம் நாள் (22.02.2017) சம்பரண சுத்த ஹோமம் - நாட்டில் குழப்ப நிலைகள் நீங்க
சைவப்புலவர் - சைவநெறி சன்மார்க்கர் நித்திய தசிதரன்.
விடயம் - லஷ்மி நாராயணன்

◆ 9ஆம் நாள் (23.02.2017) விஷ்ணு சகஸ்ர நர்ம ஹோமம் - சர்வசித்தி
சைவப்புலவர் சைவநெறி காவலர் நித்திய தசிதரன் அவர்கள்
விடயம் - விஸ்வரூபம் - மகாவிஷ்ணு

◆ 10 ஆம் நாள் (24.02.2017) பகவத் கீதா ஹோமம் - சர்வசித்தி பெறல் , மகா பூர்ணாகுதி, தாரா ஹோமம். சைவப்புலவர் - சைவநெறி சன்மார்க்க காவலர் நித்திய தசிதரன்
விடயம் - கிருஷ்ணா உபதேசம்

சொற்பொழிவு ஒருங்கமைப்பு-
நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் மணி மண்டபம், நல்லூர்.

தலைப்பு
இணுவில் திருப்பதி வேங்கடேஸ்வரர் ஆலய இலட்சார்ச்சனை காலத்தில் நடைபெறும் விசேட சிறப்பு சொற்பொழிவு - 2017
இடம் - திருப்பதி ஆலய பிரதான மண்டபம்
காலம் - 15.02.2017 - 24.02.2017 வரை
மாலை நேரம் - 7.30 - 8.30 வரை

தலைவர் - திரு.சண்முகராஜா சனேசலிங்கம் , தர்மகர்த்தா.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
நிர்வாகம் .திருப்பதி ஆலயம், இணுவில்.

## எட்டி உதைத்த குழந்தையை செருப்பால் அடித்த மருத்துவர்

கொழும்பு,பெப்.15
தனது தாயின் மடியிலிருந்த குழந்தையொன்று, தனக்கு உடல் பரிசோதனை செய்த மருத்துவரை, இரண்டு முறை எட்டி உதைத்தது. ஆத்திரமடைந்த மருத்துவர், அந்தக் குழந்தையை தானும் எட்டி உதைத்தார். குழந்தையைச் செருப்பாலும் அடித்தார்.

இந்தச் சம்பவம் மொறட்டுவப் பிரதேசத்தில் உள்ள தனியார் மருத்துவ நிலையத்தில் இடம்பெற்றது. குறித்த மருத்துவ நிலையத்தை நடத்தும் மருத்துவர் ஒருவரே இவ்வாறு மிகமோசமான முறையில் நடந்து கொண்டார் என்று தெரிவிக்கப்பட்டது. சம்பவம் தொடர்பில் மொறட்டுவ பொலிஸ் நிலையத்தில் குழந்தையின் தாயாரால் முறைப்பாடு செய்யப்பட்டது.

களுத்துறைப் பிரதேசத்தைச் சேர்ந்த பெண்ணொருவரின் குழந்தை, திடீரென கீழே விழுந்துள்ளது. விழுந்த குழந்தை தொடர்ச்சியாக வாந்தியும் எடுத்துள்ளது. பதற்றமடைந்த குழந்தையின் தாயார், அந்தக் குழந்தையைத் தூக்கிக் கொண்டு, குறிப்பிட்ட தனியார் மருத்துவமனைக்குச் சென்றார். மருத்துவமனையில் இருந்த மருத்துவர். தாயின் மடியிலிருந்த குழந்தையைப் பரிசோதித்துள்ளார். குழந்தை, தன்னைப் பரிசோதித்த மருத்துவரை எட்டி உதைத்துள்ளது.

ஆத்திரமடைந்த மருத்துவர், தன்னுடைய கதிரையில் இருந்து எழுந்து, தாயின் மடியிலிருந்த குழந்தையைப் பதிலுக்கு தானும் எட்டி உதைத்தார். போதாக் குறைக்கு, தன்னுடைய செருப்பைக் கழற்றி குழந்தையை அடித்துள்ளார்.

சம்பவம் தொடர்பில், மொறட்டுவ பொலிஸ் நிலையத்தில் அந்தத் தாய் முறைப்பாடு செய்ததையடுத்து, குறித்த மருத்துவரையும் அழைத்துப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். குழந்தை தன்னை உதைத்ததால் தானும் உதைத்தார் என்று குறித்த மருத்துவர் விசாரணையில் தெரிவித்துள்ளார்.

தாயின் கோரிக்கைக்கு அமைவாக சம்பவம் பொலிஸ் நிலையத்திலேயே சமரசப்படுத்தப்பட்டதுடன், கடும் எச்சரிக்கை செய்து மருத்துவரை விடுவித்தோம் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

## பதவிகளை இழக்கும் அபாயத்தில் கூட்டு எதிர்க்கட்சி உறுப்பினர்கள்

கொழும்பு,பெப்.15
கூட்டு எதிர்க்கட்சியின் உறுப்பினர்கள் விரைவில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தொகுதி அமைப்பாளர் பதவிகளை இழக்க நேரிடும் என்று ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மறுசீரமைப்புப் பணிகள் நாடு முழுவதிலும் வெற்றிகரமாக முன்னெடுக்கப்படுகின்றன. கூட்டு எதிர்க்கட்சியின் உறுப்பினர்கள் தொகுதி அமைப்பாளர்களாக கடமையாற்றி வரும் பகுதிகளில் மறுசீரமைப்புப் பணிகளை மேற்கொள்ள முடியவில்லை. சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் தொகுதி அமைப்பாளர் களாக பதவி வகித்துக் கொண்டு, கட்சியின் மறுசீரமைப்புப் பணிகளுக்கு இடையூறாகத் திகழும் கூட்டு எதிர்க் கட்சியின் உறுப்பினர்கள் அந்தப் பதவிகளி லிருந்து நீக்கப் படவுள்ளனர்.

இவ்வாறான தொகுதிகளில் புதிதாக அமைப்பாளர்களை நியமித்து, கட்சியின் மறுசீரமைப்புப் பணிகள் துரிதப்படுத்தப் படும்.

இதற்காகத் தகுதியான தொகுதி அமைப்பாளர்களை தெரிவு செய்யும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. என்றார். (ஐ)

## சிங்கப்பூர் பறந்தார் மகிந்த

கொழும்பு,பெப்.15
முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச அவசரமாக நேற்று முன்தினம் இரவு சிங்கப்பூர் சென்றுள்



ளார். மருத்துவப் பரிசோதனைக்காகவே அவர் சிங்கப்பூர் சென்றுள்ளார் எனத் தெரியவருகிறது.

சிங்கப்பூர் மவுண்ட் எலிசபெத் மருத்துவமனையில் மகிந் த வுக்கு வைத்திய பரிசோதனை ஒன்று மேற்கொள் ளப்படவுள்ளது எனவும், மகிந்தவு டன், உதித லொக்கு பண்டார மற்றும் மகிந்த ராஜபக் சவின் கடைசி மகன் ரோகித ராஜபக்ச ஆகியோரும் சென்றுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (ஐ)

## வரலாறு காணாத பொருளாதார நெருக்கடியில் இலங்கை

### பொருளாதார நிபுணர்கள் எச்சரிக்கை

கொழும்பு,பெப்.15
இலங்கை அரசு வரலாறு காணாத பெரும் பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது. அது தொடர்பில் அரச தலைவரோ நிதியமைச்சரோ எந்தவித கருத்துக்களையும் இதுவரை வெளியிடவில்லை என்று பொருளாதார நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அரச தலைவர் பொருளாதார நிபுணர் அல்ல என்பதால், அவருக்கு நாட்டின் பொருளாதார நிலை தொடர்பான உண்மையான தகவல் மறைக்கப்பட்டிருக்கலாம். நிதி அமைச்சர் அல்லது நிதி அமைச் சின் செயலாளரும் இது தொடர் பில் அரச தலைவருக்கு தெரியப்படுத்தவில்லை. எதிர்க் கட்சித் தலைவரும் எந்தவித கருத்துக்களையும் வெளியிடாமல் உள்ளார்.

இலங்கை தற்போது எதிர்கொண்டுள்ள பொருளாதர நெருக்கடிக்கு அமைவாக பன்னாட்டு நிறுவனத்தால் வெகு விரைவில் இன்னும் கீழ் மட்டப் பொருளாதார தரப்படுத்தப்படுத்தலுக்குள் இணைக்கப்படும். கடன் வழங்குவதற்கு தகுதியான நாடு அல்ல எனவும் அறிவிக்கப்படும் நிலை உருவாகும்.

அத்துடன் எதிர்வரும் காலங்களில் இலங்கை வங்குரோத்து அடைந்த நாடாக பன்னாடுகள் அறிவிக்கும் நிலையும் காணப்படும்.

இவ்வாறான நிலையில் நாட்டு மக்கள் பெரிதும் பாதிக்கப்படுவதுடன், அதிகளவான விலையில் பொருள்களைக் கொள்வனவு செய்ய வேண்டிய அவல நிலையும் ஏற்படும்- என்று பொருளாதார நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். (ஐ)

### அம்பாந்தோட்டையில் அமைக்கப்பட்ட

## பன்னாட்டு தரத்திலான சிறைச்சாலை நாளை திறக்கிறார் அரச தலைவர்

கொழும்பு,பெப்.15
தங்காலை சிறைச்சாலைக்குப் பதிலாக, அம்பாந்தோட்டை அங்னுகொல பெலஸ்ஸவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள, புதிய வசதிகளைக் கொண்ட ஆடம்பரச் சிறைச்சாலை நாளை வியாழக்கிழமை அரச தலைவர் மைத்திபால சிறிசேனவால் திறக்கப்படவுள்ளது.



முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக்காலத்தின் போது, சுமார் 40 ஏக்கர் விசாலமான நிலப்பரப்பில் இந்தச் சிறைச்சாலை நிர்மாணிக்கப்பட்டது. சிறைச்சாலையின் நிர்மாணப் பணிகளுக்காக 4 ஆயிரத்து 500 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது. இந்தச் சிறையில் மட்டும் ஆயிரத்து 500 இற்கும் மேற்பட்ட கைதிகளைத் தடுத்து வைக்க முடியும் எனத் தெரியவருகிறது.

பன்னாட்டு தரம் மற்றும் மனித உரிமைகளை மதிக்கும் வகையில், இலங்கையில் நிர்மாணிக்கப்பட்ட முதலாவது சிறைச்சாலை இதுவாகும். இந்தச் சிறைச்சாலைக்குள் நீச்சல் தடாகம், முழுமையான விளையாட்டு ஆய்வரங்கம் மற்றும் விளையாட்டு மைதானம் ஆகியனவும் உள்ளன.

இந்தச் சிறைச்சாலையின் நிர்மாணப் பணிகள், 2014 ஆம் ஆண்டு மே மாதம் 16 ஆம் திகதியன்று ஆரம்பிக்கப்பட்டது. (ஐ)

நீங்கா நினைவில் ஐந்தாம் ஆண்டு
அமரர் கந்தையா சண்முகராசா
(உரிமையாளர் – அம்பாள் ஸ்ரோர்ஸ், வீரமாகாளி
அம்மன் கோயிலடி சன் சுப்பர் மாக்கற்)



மலர்வு
23 . 10 . 1952
உதிர்வு
15 . 02 . 2012

அன்பு காட்டி அறிவு ஊட்டி
இன்பமுடன் நாம் வாழ
இனிய வழி காட்டிய எம் தெய்வமே!
ஆண்டுகள் ஐந்து கடந்தாலும்
ஆறாது உங்கள் நினைவலைகள்......
கலையாத நினைவுகளுடன் உங்கள்
ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

34/1, இராமநாதன் வீதி,
கலட்டி, யாழ்ப்பாணம்.
என்றும் நினைவில்
குடும்பத்தினர்.




## அ.தி.மு.கவில் இருந்து ஓ.பி.எஸ். நீக்கம்

சென்னை, பெப். 15
சொத்து குவிப்பு வழக்கில் தனக்கு எதிராகத் தீர்ப்பு வந்ததை அடுத்து, சசிகலா அவசரமாக சட்டமன்ற உறுப்பினர்களின் கூட்டத்தைக் கூட்டினார். முதல்வர் ஓ.பன்னீர்செல்வத்தை அடிப்படை உறுப்பினர் பொறுப்பில் இருந்துவிடுவித்துஉத்தரவிட்டார். கடந்த 7 ஆம் திகதி கட்சித்தலைமைக்கு எதிரான கருத்தை முன்வைத்ததை அடுத்து, அ.தி.மு. கழகத்தின் பொருளாளர் பொறுப்பில் இருந்து ஓ.பி.எஸ். நீக்கப்பட்டார். எனினும் அடிப்படை உறுப்பினர் பொறுப்பு அவரிடம் இருந்து பறிக்கப்படவில்லை. எனினும், விரைவில் பறிக்கப்படும் என்று சசிகலா எச்சரித்திருந்தார். சொத்துக் குவிப்பு வழக்கில் தீர்ப்பு வெளியானதை அடுத்து, சசிகலா அவசரமாக சட்டமன்ற உறுப்பினர்களின் கூட்டத்தைக்கூட்டி முதல்வர் ஓ.பன்னீர்செல்வத்தை கட்சியில் இருந்து முழுவதுமாக நீக்கி உத்தரவிட்டார். (ம)



## முதல்வராக பழனிச்சாமி

சென்னை, பெப். 15
அ.தி.மு. கழகப் பொதுச் செயலாளர் சசிகலா சிறை செல்வதை அடுத்து, சட்டமன்ற உறுப்பினர்கள் அடுத்த முதல்வராக எடப்பாடி பழனிச்சாமியைத் தெரிவுசெய்தனர். சொத்து குவிப்பு மேன்முறையீட்டு வழக்கில் சசிகலா சிறை செல்வது உறுதியாகியுள்ளதால், அவருக்கு பதிலாக அ.தி.மு.க. சட்டமன்ற கட்சித் தலைவராக (முதல்வராக) எடப்பாடி பழனிச்சாமி தேர்வு செய்யப்பட்டார். கூவத்தூரில் நேற்று நடைபெற்ற அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் எடப்பாடி பழனிச்சாமி தேர்வு செய்யப்பட்டார். இதனையடுத்து எடப்பாடி பழனிச்சாமி சட்டமன்ற உறுப்பினர்களின் ஆதரவு கடிதத்தோடு ஆளுநரை சந்தித்து ஆட்சியமைக்க உரிமை கோரினார் என தகவல்கள் தெரிவிக்கின்றன. (ம)



# சசிகலா குற்றவாளி!

## 4 ஆண்டுகள் சிறை

## 10 கோடி அபராதம்

## கலைந்தது கனவு


சசிகலா


இளவரசி


சுதாகரன்

சென்னை, பெப். 15
சொத்துக் குவிப்பு வழக்கில் சசிகலா குற்றவாளி என்று இந்திய உச்சநீதிமன்றம் நேற்றுக் காலை அதிரடித் தீர்ப்பு வழங்கியது.
வருமானத்துக்கு அதிகமாக சொத்துக்களைக் குவித்தனர் எனத் தெரிவித்து, முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா, அ.தி.மு. கழகத்தின் தற்போதைய பொதுச் செயலாளர் சசிகலா, இளவரசி, சுதாகரன் ஆகியோருக்கு 4 ஆண்டு சிறைத்தண்டனை விதித்து, பெங்களூர் சிறப்பு நீதிமன்றம் தீர்ப்பளித்தது. மேலும், ஜெயலலிதாவுக்கு 100 கோடி ரூபாவும், ஏனையவர்களுக்கு 10 கோடி ரூபாவும் அபராதமாக விதித்தது.
இதனை எதிர்த்து தொடரப்பட்ட மேன்முறையீட்டு வழக்கை விசாரித்த கர்நாடக உயர்நீதிமன்றம், ஜெயலலிதாஉள்ளிட்டஅனைவரையும் விடுதலை செய்தது. இந்த தீர்ப்பை எதிர்த்து கர்நாடக அரசு சார்பில் உச்ச நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்யப்பட்டது.
ஜெயலலிதா உள்ளிட்ட 4 பேரின் விடுதலைக்கு எதிரான மேன்முறையீட்டு மனுக்கள் மற்றும் ஆதாரங்கள் என்பன மன்றில் ஒப்படைக்கப்பட்டன. வழக்கின் விசாரணைகளும் அனைத்துத் தரப்பு வாதங்களும் கடந்த ஆண்டு ஜூன் மாதம் முதலாம் திகதி நிறைவடைந்தது. எனினும் தீர்ப்பு திகதி குறிப்பிடப்படாமல் ஒத்திவைக்கப்பட்டது. நேற்றுக் காலை தீர்ப்பு வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்ட நிலையில், இந்த வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட அத்தனைபேரும் குற்றவாளிகள் என்று உச்சநீதிமன்ற நீதிபதிகளான அமித்வராய், பினாக்கி கோஷ் இருவரும் உத்தரவிட்டனர்.

### 4 ஆண்டுகள் சிறை

சசிகலா, இளவரசி, சுதாகரன் மூவருக்கும் 4 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.
அனைவரும் பெங்களூர் சிறையில் அடைக்கப்படுவார்கள் என்றும் குறிப்பிடப்பட்டது. சிறைத்தண்டனையை விட தலா 10 கோடி (இந்திய மதிப்பில்) அபராதமும் விதிக்கப்பட்டது.

### கனவு கலைந்தது

சசிகலா தரப்பினரால் தான், வற்புறுத்தலின் அடிப்படையிலேயே பதவி விலகினேன் என்று முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் கடந்த 7 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இரவு குறிப்பிட்டார்.
புதிய ஆட்சியை அமைக்கும் முனைப்பில் சசிகலாவும், தனது ஆட்சியைத் தக்க வைக்கும் முனைப்பில் பன்னீர்செல்வமும் இருந்தனர்.
இருதரப்பு கருத்துக்களையும் கேட்டறிந்து, அது தொடர்பில் பரிசீலனை செய்து வருகிறார் ஆளுநர் வித்யாசாகர் ராவ். எனினும் அவர் இந்த விடயம் தொடர்பில் எந்தக் கருத்தையும் வெளியிடவில்லை. மன்றின் தீர்ப்பின் பின்னரே அவர் தனது நிலைப்பாட்டை வெளியிடுவார் என்று கருதப்பட்ட நிலையில், சசிகலாவின் முதல்வர் கனவு கலையும் விதமாக தீர்ப்பு வந்தமைந்தது. (ம)

### தீர்ப்பு வழங்கிய நீதிபதிகள்


அமித்வராய்


பினாக்கி கோஷ்

## தாய்வானில் விபத்து; 32 பேர் உயிரிழப்பு

சென்னை, பெப். 15
தாய்வானில் சுற்றுலா பேருந்து ஒன்று விபத்துக்குள்ளாகி தீப்பற்றி எரிந்ததில் 32 பேர் உடல்கருகிச் சாவடைந்தனர்.
தாய்வான் தலைநகர் தைபே அருகே சென்ற சுற்றுலாப் பயணிகள் பேருந்து ஒன்று விதியில் இருந்த தடுப்பு ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளாகி தீப்பற்றி எரிந்தது.
பேருந்தில் பயணித்த 44 பேரில் 32 பேர் சம்பவ இடத்திலேயே உடல்கருகிச் சாவடைந்தனர். சாவடைந்த அனைவரும் தாய்வனைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது.
ஏனைய 12 பேரும் காயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.
அவர்களில்பலரின்நிலைமை கவலைக்கிடமாக உள்ளதால் உயிரிழப்பு மேலும் அதிகரிக்கலாம் என்று அச்சம் வெளியிடப்பட்டது. (ம)





## அல் பக்தாதியை இலக்குவைத்து தாக்குதல் நடத்தி


### தப்பித்தார் என்றும் தகவல்

மோசூல், பெப். 15
ஐ.எஸ்.ஐ.எஸ். (ஈராக், சிரிய இஸ்லாமிக் ஸ்ரேட்) அமைப்பின் தலைவரான அல் பக்தாதியை இலக்கு வைத்து நேற்றுமுன்தினம் தாக்குதல் நடத்தப்பட்டது என்று ஈராக் அரசு தெரிவித்தது. எனினும் அவர் சாவடையவில்லை என்றும் குறிப்பிடப்பட்டது.
ஈராக், சிரிய நாடுகளின் சில பகுதிகளைக் கைப்பற்றி அவற்றை ஓர் தனிநாடாக அங்கீகரித்திருந்தது ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு.
அந்த அமைப்பின் தலைவரான அல் பக்தாதியை கொல்வதற்கு ஒவ்வொரு நாடுகளும் கங்கணம் கட்டி நிற்கின்றன.
குறிப்பாக அமெரிக்கா கடும் முனைப்புடன் செயற்படுகிறது. இந்த நிலையில் மோசூல் நகருக்கு அண்டிய பகுதியில் ஓர் வீட்டில் அல் பக்தாதி நேற்றுமுன்தினம் உயர்மட்டக்கூட்டத்தை நடத்திக்கொண்டிருந்த வேளை அவரை இலக்கு

# எனின், ஜெயாவும் குற்றவாளியே!



சென்னை, பெப். 15
சொத்துக் குவிப்பு வழக்கில் முன்னாள் முதல்வர் ஜெயலலிதா குற்றவாளி என்று அறிவிக்கப்பட்ட போதிலும், வழங்கில் இருந்து ஜெயலலிதா பெயர் நீக்கப்பட்டது. இந்த வழக்கின் அடிப்படையில் ஜெயலலிதாவும் குற்றவாளியே எனக் குறிப்பிடப்படுகின்ற போதிலும், அவர் சாவடைந்து விட்டதால் அவரது பெயர் நீக்கப்பட்டது. எனினும் ஜெயலலிதா வீட்டில் இருந்து பறிமுதல் செய்யப்பட்ட தங்க நகைகள் அரசுடைமையாக்கப்படும் என்று இந்திய ஊடகங்கள் குறிப்பிட்டன. (ம)



# வென்றது நீதி!

சென்னை, பெப். 15
சொத்துக் குவிப்பு வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட அத்தனைபேரும் குற்றவாளிகள் என்று வெளியான தீர்ப்பின் மூலம் நீதி நிலைநாட்டப்பட்டது என்று தமிழக சட்டசபை எதிர்க்கட்சித் தலைவரும், தி.மு. கழகத்தின் பொதுச் செயலாளருமான மு.க.ஸ்ராலின் தெரிவித்தார்.
தீர்ப்பு வெளியாகி சில நிமிடங்களின் பின்னர் இந்திய ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.
21வருடங்களுக்கு பின் நீதி நிலைநாட்டப்பட்டுள்ளது. ஊழல்செய்தவர்கள் தண்டனையிலிருந்து தப்ப முடியாது என்பதை இந்தத் தண்டனை உறுதி செய்துள்ளது.
தமிழகத்தில் நிலையான ஆட்சி ஏற்பட கவர்னர் நடவடிக்கை எடுக்க வேண்டும். மக்கள் பிரச்னைக்கு தீர்வு காண நிலையான ஆட்சி வேண்டும் என்று அவர் குறிப்பிட்டார்.
கர்நாடக அரசுதரப்பு வழக்கறிஞர் ஆச்சார்யாவும் இவ்வாறான ஓர் கருத்தையே பதிவு செய்தார். (ம)

# தப்பியது தமிழகம்



சென்னை, பெப். 15
சொத்துக்குவிப்பு வழக்கு மீதான தீர்ப்பின் மூலம் சசிகலா முதல்வராகக் கூடிய பேராபத்திலிருந்து தமிழகம் தப்பியிருக்கிறது என்று பா.ம.க. நிறுவுநர் ராமதாஸ் தெரிவித்தார்.
இதுதொடர்பாக இன்று(நேற்று) வெளியிட்ட அறிக்கையில், வருவாய்க்கு மீறி ரூபா 66.65 கோடி சொத்து குவித்த வழக்கில் சசிகலா உள்ளிட்ட மூவருக்கும் தலா 4 ஆண்டுகள் சிறைதண்டனையும், ரூ.10 கோடி அபராதமும் விதித்து, பெங்களூர் சிறப்பு நீதிமன்றம் அளித்த தீர்ப்பு செல்லும் என்று உச்ச நீதிமன்றம் அறிவித்திருக்கிறது.
இந்தத் தீர்ப்பின் மூலம் ஜெயலலிதா, சசிகலா உள்ளிட்டோர் நீதியை வளைத்துத்தான் இந்த வழக்கிலிருந்து விடுதலை ஆனார்கள் என்பது உறுதியாகிறது.
வழக்கிலிருந்து விடுதலை பெற்று அதனடிப்படையில் கடந்த சட்டப்பேரவைத் தேர்தலில் போட்டியிட்டு ஜெயலலிதாவும், அ.தி.மு.கவும் பெற்றவெற்றி தார்மீக ரீதியில் செல்லாது என்பதுதான் உண்மை. இந்த உண்மையை ஏற்று தமிழகத்தில் உள்ள அனைத்து அ.தி.மு.க.சட்டப் பேரவை உறுப்பினர்களும் உடனடியாக பதவிவிலகுவது தான் நீதிக்கு தலை வணங்கும் செயலாக அமையும் என்று குறிப்பிடப்பட்டது. (ம)

# மனக்கசப்பை மறந்து செயற்பட வாருங்கள்


## ஓ.பி.எஸ். அழைப்பு

சென்னை, பெப். 15
சொத்துக் குவிப்பு வழக்கின் அடிப்படையில் சசிகலா சிறை செல்வது உறுதியானதை அடுத்து, தன்னுடன் இணைந்து பணியாற்ற சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அழைப்பு விடுத்தார் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம்.
சட்டமன்ற உறுப்பினர்களுக்கு நேற்று வெளியிட்ட அறிக்கையில், எனது அன்புக்குரிய அ.தி.மு.க. அமைச்சர்களே! அ.தி.மு.க. சட்டப்பேரவை உறுப்பினர்களே! உங்கள் அனைவருக்கும் அன்பான வேண்டுகோள்!
நாம், எவரும் எதிர்பாராத வகையில் கடந்த சில நாள்களாக நடந்த ஒரு சில நிகழ்வுகளால் எமது ஆட்சிஙய மீதமுள்ள ஆண்டுகளுக்கு தொடர்வதில் தற்காலிக இடையூறு மட்டுமே ஏற்பட்டுள்ளது.
எனவே, தற்காலிகமாக ஏற்பட்டுள்ள இடையூறை நீக்கி, நாம் அனைவரும் ஒன்றுமையுடன் இருந்து கழகத்துக்கு எவ்வித ஊறும் ஏற்படாமல் காத்து ஜெயலலிதாவின் நல்லாட்சி தொடர தேவையானவற்றை எம் மனசாட்சியின்படி உடனடியாக மேற்கொள்ள வேண்டியது எமது அனைவரின் கடமையாகும். எதிரி, கடந்த சில நாள்களாக நாம் இரண்டாகப் பிரிவதை எதிர்பார்த்துக் காத்துள்ளான். எனவே அதற்கு இடம்கொடாமல் தற்காலிக மனக்கசப்புக்களை இல்லாமல்செய்து செயற்பட வாருங்கள் என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம)



# சொத்துக் குவிப்பு வழக்கு கடந்து வந்துள்ள பாதை

சென்னை, பெப். 15
முன்னாள் முதல்வர் ஜெயலலிதா, அ.தி.மு. கழகத்தின் தற்போதைய பொதுச் செயலாளர் சசிகலா, சசிகலாவின் உறவினர் இளவரசி, ஜெயாவின் வளர்ப்பு மகன் சுதாகரன் ஆகியோர் மீது தொடரப்பட்ட சொத்துக் குவிப்பு வழக்கு, கடந்து வந்த பாதை தொடர்பான அலசல்.
கடந்த 1991 ஆம் ஆண்டு தொடக்கம் 1996 ஆம் ஆண்டு வரையான காலகட்டத்தில் தமிழக முதல்வராக இருந்த ஜெயலலிதா தனது வருமானத்துக்கு அதிகமாக ரூபா 66.66 கோடி சொத்துக் குவித்தார் என்று சுப்பிரமணியன் சுவாமி சென்னை அமர்வு நீதிமன்றத்தில் முறைப்பாடு தெரிவித்தார். சென்னையில் நடைபெற்ற இந்த வழக்கு, தி.மு.க. பொதுச் செயலாளர் அன்பழகனின் கோரிக்கையை ஏற்று கடந்த 2004 ஆம் ஆண்டு பெங்களூருக்கு மாற்றி உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது.
இதையடுத்து சொத்துக்குவிப்பு வழக்கில், ஆவணங்கள் மொழிபெயர்ப்பு, சாட்சி விசாரணை, குறுக்கு விசாரணை, குற்றஞ்சாட்டப்பட்டவர்களின் வாக்கு மூலம், இறுதிவாதம் உள்ளிட்ட பணிகள் தீவிரப்படுத்தப்பட்டன.
இறுதியில் 2014 செப்ரெம்பர் 27 ஆம் திகதி பெங்களூர் சிறப்பு நீதிமன்ற நீதிபதி ஜோன் மைக்கல் டி குன்ஹா, ஜெயலலிதா, சசிகலா உள்ளிட்ட நால்வருக்கும் தலா 4 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்தார். ஜெயலலிதாவுக்கு ரூ.100 கோடியும், சசிகலா உள்ளிட்டோருக்கு ரூ.10 கோடியும் அபராதம் விதித்து தீர்ப்பை வழங்கினார்.



இதையடுத்து ஜெயலலிதா, சசிகலா உள்ளிட்ட நால்வரும் கர்நாடக உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தனர். இதை விசாரித்த நீதிபதி குமாரசாமி 2015, மே 11 ஆம் திகதி ஜெயலலிதா, சசிகலா உள்ளிட்ட நால்வரையும் நிரபராதி என விடுதலை செய்து உத்தரவிட்டார்.
இதை எதிர்த்து கர்நாடக அரசு, சுப்பிரமணியன் சுவாமி மற்றும் அன்பழகன் தரப்பில் உச்ச நீதிமன்றத்தில் மேன்முறையீட்டு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. உச்சநீதிமன்றம் தனது வழக்கின் அடிப்படையில் நால்வரும் குற்றவாளிகள் என நேற்றுத் தீர்ப்பிட்டது. (ம)

# கூவத்தூரில் பெரும் பரபரப்பு

சொத்துக் குவிப்பு வழக்கில் சசிகலா குற்றவாளி என்று வெளியான தீர்ப்பை அடுத்து அ.தி.மு. கழக உறுப்பினர்கள் தங்கவைக்கப்பட்டுள்ள கூவத்தூர் நட்சத்திர விடுதி வளாகத்தில் நேற்று மதியம் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.
ஓ.பி.எஸ். முதல்வராகத் தொடரவேண்டுமாயின் சட்டசபையில் தனது பெரும்பான்மையை நிலைநாட்ட வேண்டும். சசிகலா முதல்வராக வரவேண்டுமாயின் சட்டசபையில் தனது ஆதரவை நிலைநாட்ட வேண்டும் என்ற நிலைப்பாடு நேற்றுக் காலைவரை இருந்தது. இதனால் சட்டமன்ற உறுப்பினர்களை சசிகலா கூவத்தூரில் உள்ள ஓர் நட்சத்திர அந்தஸ்து பெற்ற விடுதியில் கடந்த ஒருவாரகாலமாகத் தங்க வைத்திருந்தார். அவர்கள் கடத்தப்பட்டுள்ளனர் என்றும் சில இந்திய ஊடகங்கள் குறிப்பிட்டன.
சொத்துக் குவிப்பு வழக்கில் சசிகலா குற்றவாளி என்று வெளியான தீர்ப்பை அடுத்து, அதிரடிப்படையினர் 200 பேர் நூற்றுக்கணக்கான பொலிஸார் இணைந்து விடுதியை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர். பொலிஸாருக்கும் சசிகலா ஆதரவாளர்களுக்கும் இடையில் கடும் வாக்குவாதங்களும் தள்ளுமுள்ளுகளும் ஏற்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது. தனக்கு எதிராக தீர்ப்பு வந்ததை அடுத்து, சசிகலா, சட்டமன்ற உறுப்பினர்களுடன் நேற்று அவசரக் கலந்துரையாடலை மேற்கொண்டார். முதல்வர் பன்னீர்செல்வத்தின் மீது கடும் விமர்சனங்களை முன்வைத்தார் என்று சில இந்திய ஊடகங்கள் குறிப்பிட்டன. (ம)



# பாகிஸ்தானில் தற்கொலைத் தாக்குதல்; 10 பேர் சாவு

இஸ்லாமபாத், பெப். 15
பாகிஸ்தானின் லாகூர் நகரில் நேற்று நடைபெற்ற போராட்டப் பேரணி ஒன்றுக்குள் நுழைந்த ஆயுததாரி நடத்திய தற் கொலைத் தாக்குதலில் 10 பேர் உடல் சிதைந்து சாவடைந்தனர் என்று பாகிஸ்தான் ஊடகங்கள் குறிப்பிட்டன.
மருந்துக்கடை உரிமையாளர்கள் நடத்திய போராட்டப் பேரணி மீதே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது.
எனினும் பேரணிக்கு பாதுகாப்புக்காக நின்ற பொலிஸாரை இலக்கு வைத்தே தாக்குதல் நடத்தப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது.
சாவடைந்த 10 பேரில் மூவர் பொலிஸ் உத்தியோகத்தர் என்பதால் இவ்வாறு தெரிவிக்கப்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகிறது. (ம)



# ...து ஈராக் படை

...வைத்து தாக்குதல் நடத்தப்பட்டது என்று ஈராக் தெரிவித்தது.
இந்தத் தாக்குதலில் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் ஆயுததாரிகள் 13 பேர் கொல்லப்பட்டனர். எனினும் பக்தாதி சாவடையவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. (ம)

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# வாக்குறுதிகளுக்கான காலமல்ல இது

பிலக்குடியிருப்பு மக்கள், வாக்குறுதிகளை நம்பித் தமது போராட்டத்தைக் கைவிடப்போவதில்லை என்பதில் உறுதியாக இருக்கிறார்கள். அவர்களின் காணிகளை விரைவில் விடுவிப்பதாக இராணுவத் தளபதி அரச தலைவருக்கு உறுதியளித்தார் என்னும் செய்தி மக்களுக்குத் தெரிவிக்கப்பட்டபோதிலும் தமது போராட்டத்தைக் கைவிடப் போவதில்லை என்பதில் அவர்கள் உறுதியாக இருக்கிறார்கள். காணிக்குப் போய்ச் சேரும் வரையில், எந்த வாக்குறுதியையும் நம்பித் தமது போராட்டத்தைக் கைவிடப்போவதில்லை என்பதுதான் அவர்களின் நிலைப்பாடு.

இத்தகைய பிடிவாதமான நிலைப்பாட்டுக்கு அவர்களைத் தள்ளிவிட்டது அரசினதும், அரச தலைவர்களதும், அரசியல்வாதிகளதும் செயற்பாடுகள்தான். மக்கள் போராட்டத்தில் ஈடுபடும்போதெல்லாம் வாக்குறுதிகளை வழங்கி அவற்றை முடித்து வைப்பது இலங்கை அரசியலின் வகை மாதிரி என்றாகிவிட்டது. பின்னர், வழங்கிய வாக்குறுதிகளை மறந்துவிட்டு, வேறு வேலை பார்க்கப் போய்விடுவது இவர்களின் பாணியாகியதால், வாக்குறுதிகளை நம்புவதற்கு மக்கள் இப்போது தயாராக இல்லை.

இது வாக்குறுதிகளை வழங்குவதற்கான காலமும் இல்லை. அதற்கான கால எல்லை எப்போதோ முடிந்துவிட்டது. தேர்தல் காலத்திலேயே இந்த மக்கள் உட்பட அனைத்துத் தமிழ்மக்களது காணிகளையும் மீள ஒப்படைப்போம் என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவும் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவும் முன்னாள் அரச தலைவர் சந்திரிகா குமாரதுங்கவும் தெளிவான வாக்குறுதிகளை வழங்கியிருந்தார்கள். அதற்குப் பின்னர் 2 வருடங்கள் காத்திருந்துவிட்டே மக்கள் போராட ஆரம்பித்திருக்கிறார்கள்.

இந்த 2 வருட காலத்திற்குள்கூட பிலக்குடியிருப்பு மக்களுக்குப் பல தடவைகள் மேலும் பல வாக்குறுதிகள் வழங்கப்பட்டிருக்கின்றன. அப்போதும் "விரைவில் காணிகளை விடுவிப்போம்" என்றே எல்லோரும் வாக்குறுதி வழங்கினார்கள். ஆனால் எதுவும் நடக்கவில்லை. எனவேதான் இப்போதும் அதுபோன்ற வாக்குறுதிகளை நம்புவதற்கு அவர்கள் தயாராக இல்லை.

அவர்களின் நிலைப்பாடு தெளிவானது. 3 நாளோ 10 நாளோ, இல்லை அதைவிடவும் கூடுதலான நாள்களோ, எதுவாயிருந்தாலும் நாங்கள் இப்படியே அமர்ந்திருக்கத் தயார். நீங்கள் காணிகளை விடுவியுங்கள் என்பதுதான் அவர்களின் நிலைப்பாடு.

அவர்களது அந்த நிலைப்பாடு நியாயமானது. அவர்கள் மிகுந்த கட்டுக்கோப்போடு, அமைதியாகத்தான் போராடுகிறார்கள். படையினரை அச்சுறுத்தவில்லை. அவர்களுக்கு இடைஞ்சல்களை ஏற்படுத்தவில்லை. வன்முறையில் ஈடுபடவில்லை அல்லது பொது மக்களுக்கு இடைஞ்சல் செய்யவில்லை. அறப் போராட்டத்துக்கான நியாயத்தோடு நடந்துகொள்கிறார்கள். எனவே அவர்களின் கோரிக்கைக்கு மதிப்பளித்து காணிகளை உடனடியாக விடுவிப்பதுதான் அரசினதும் படைகளினதும் கடமை.

காணிகளை விரைவில் விடுவிக்க முடியும் என்று படைத்துறையினர் அரச தலைவருக்கு உறுதிமொழி வழங்க முடியுமெனில், அதனை ஏன் தாமதிக்க வேண்டும்? காலந்தாழ்த்திக் கொண்டிராமல் காணிகளை உடனடியாகவே மக்களுக்குத் திறந்து விடவேண்டும்! பாதுகாப்புத் தேவைக்குரிய காணியானால்தான் அதனை விடுவிப்பது குறித்து யோசிக்கவேண்டும். பிலக்குடியிருப்பு மக்களின் காணிகள் விடயத்தில் அந்தப் பிரச்சினையே இல்லை என்ற நிலையில், நாளை விடுவதற்குப்பதில் இன்று விடுவித்துவிட்டால் பிரச்சினை தீர்ந்துவிடும். எனவே காணிகளை இன்றோ, நாளையோ விடுவிப்பதற்கு அரச தலைவரும் படையினரும் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அதேவேளையில், மக்கள் தாமே கிளர்ந்து நடத்திவரும் போராட்டத்தை, வடிவத்தை மாற்றுகிறோம் என்ற பெயரில் புகும் அரசியல்வாதிகள் குழப்பியடித்துவிடவும்கூடாது. இன்று போராட்ட வடிவம் பற்றிப் பேசும் அரசியல்வாதிகளில் ஒருவர்கூட, இந்த மக்கள் நடத்தியதுபோன்ற நீண்ட நீடித்த போராட்டத்தை என்றும் நடத்தியதில்லை என்பது கவனத்துக்குரியது. மக்களின் போராட்டத்துக்கு ஆதரவளிப்பதுவேறு, அதில் தலையிட்டுக் குழப்புவது வேறு. மக்கள் வெற்றி பெறுவதற்கு உறுதுணையாக இருப்பது மட்டுமே இப்போது தமது பணி என்பதைத் தலையிடும் அரசியல்வாதிகளும் உணரவேண்டும்! உங்களாலும் முடியாதபோதுதான் மக்கள் வீதிக்கு இறங்கினார்கள் என்பது ஞாபகத்தில் இருக்கட்டும்.

# புலிகளின் மீள் எழுச்சி பற்றிய தகவல்களில் உண்மை உண்டா?

## பயங்கரவாத புலனாய்வுப்பிரிவின் அறிக்கை குறித்துப் பலத்த சந்தேகம்;

## 'சயிட்டம்' வளர்ச்சிக்குப் பணம் வழங்கிய ராஜபக்ச இன்று எதிர்ப்பது ஏன் - ஜனாதிபதி

■ சண்டேரைம்ஸ் கட்டுரையில் இருந்து ரெங்கன்



தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் மீண்டும் கிளர்ந்தெழுவதற்கான வாய்ப்புத் தென்படுவதாகப் பொலிஸ் திணைக்களத்தின் பயங்கரவாத புலனாய்வுப் பிரிவு (TID) நம்புவதாகத் தெரிகின்றது. குறித்த பிரிவின் பதில் தலைவர் நாலக்க டி சில்வாவினால், பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தரவுக்கு அனுப்பப்பட்டுள்ள அறிக்கையில் இந்தவிதம் அச்சம்கொள்ளும் விதமான தகவல்கள் இடம்பெற்றுள்ளன. ஆனால், இந்த விடயத்தில் பரிச்சயமுள்ள ஏனைய தரப்புக்கள் இந்தத் தகவல்களை மறுத்துக் கருத்து வெளியிட்டுள்ளன.

2017 ஜனவரி 13 ஆம் திகதி 3 நபர்கள் கிளிநொச்சியில் கைது செய்யப்பட்டனர். மாஸ்டர் என்றழைக்கப்படும் கிளிநொச்சியைச் சேர்ந்த காராளசிங்கம் குலேந்திரன், (இயக்கப் பெயர் சோலை) ஜனா என்று அழைக்கப்படும் செம்பியன்பற்றைச் சேர்ந்த புனர்வாழ்வு அளிக்கப்பட்ட லூயிஸ் மரியநாயகம் அஜந்தன், (இயக்கப்பெயர் கடலவன்), வேந்திரன் என்று அழைக்கப்படும் கிளிநொச்சியைச் சேர்ந்த முருகையா தவேந்திரன் (இயக்கப் பெயர் வெண்அரசன்) ஆகியவர்களே அந்த மூவரும் என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

### விடுதலைப்புலிகள் மீண்டும் கிளர்ந்தெழுவதற்கான வாய்ப்புக் குறித்த அறிக்கையில் தெளிவு இல்லை

தமிழீழ விடுதலை புலிகள் இயக்கத்தை மீளவும் செயற்படுத்தும் வேலைகளில் ஈடுபட்டிருந்ததோடு, பயங்கரவாதச் செயல்களில் ஈடுபடவிருந்த சமயத்தில் இவர்கள் கைதுசெய்யப்பட்டார்கள். கிளிநொச்சியில் உள்ள குலேந்திரனின் வீட்டில் இருந்து கிளைமோர் கண்ணி வெடி ஒன்றும் மீட்கப்பட்டுள்ளது. அஜந்தனின் கைகளில் இருந்து சி - 4 வெடிபொருள் ஒன்றும் மீட்கப்பட்டது. இந்தக் குண்டானது யாழ்ப்பாணத்திலிருந்து 30 கிலோ மீற்றர் தென் கிழக்கிலுள்ள மருதங்கேணியில் வைத்து ஒரு மிக முக்கிய பிரமுகர் மீது தாக்குதல் நடத்துவதற்கு பயன்படுத்தப்படவிருந்துள்ளது என்று அந்த அறிக்கை மேலும் கூறியபோதிலும், அந்த அதிமுக்கிய பிரமுகர் யார் என்பது தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. அத்தோடு, அந்தப் படுகொலை எவ்வாறு மேற்கொள்ளப்படவிருந்தது என்பதும் விளக்கப்பட்டிருக்கவில்லை.

இவர்களுடன் மேலும் கைது செய்யப்பட்ட இருவரையும் சேர்த்து, கிளிநொச்சி நீதிமன்றத்தில் போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்டவர்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் முன்னிலையாக்கப்பட்டனர். இந்த ஐவரும் த.தே.கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனையும் வெளிநாட்டுக் குழு ஒன்றுடன் இணைந்து கொலைசெய்யத்திட்டமிட்டார்கள் என்று இன்னொரு இரண்டாவது வழக்கும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. சுமந்திரன் தற்போதைய அரசை ஆதரிப்பதனால், அவரைக் கொலை செய்ய எத்தனிக்கப்படுவதாக இருக்கலாம் என்று பொலிஸ் புலனாய்வுப் பிரிவு கருதுவதாக அறிக்கையில் தெரிவிக் கப்பட்டுள்ளது.

இந்த நிலைமையில் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனின் தனிப்பட்ட பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டதுடன், சந்தேக நபர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். வழக்கு விசாரணை 13 ஆம் திகதி நடைபெறுவதாக இருந்தது.

கடந்த மூன்று மாதகாலமாக, முதலில் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் மூவரும் தமது நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு சுயேட்சையாகவே செயற்பட்டு வந்துள்ளார்கள். கடந்த நவம்பர் 27 ஆம் திகதி கிளிநொச்சியில் எங்கோ ஓர் இடத்தில் புலிக்கொடியை அவர்கள் பறக்க விட்டுள்ளார்கள். அதனை ஒளிப்படம் எடுத்து வெளிநாட்டில் தங்களுக்கு ஆதரவு அளித்துவரும் குழு வினருக்கு அனுப்பியுள்ளார்கள் என்று பொலிஸ் புலனாய்வு அறிக்கை கூறுகின்றது. கிளிநொச்சியில் கடமையில் ஈடுபட்டிருக்கும் பொலிஸார் மீது கடந்த ஒக்ரோபரிலும், நவம்பரிலும் தாக்குதல்களை நடத்த இந்த மூவரும் திட்டமிட்டிருந்துள்ளார்கள் என்று அறிக்கை கூறுகின்றது. இதன் நோக்கம் ஆயுதங்களைக் கைப்பற்று



வதாகும். அதேசமயம் இந்த மூவரும், புலிகள் ஆயுதங்கள் புதைத்து வைத்திருந்த இடங்களுக்கு இரவில் சென்று அந்த ஆயுதங் களைத் தோண்டி எடுக்கவும் திட்ட மிட்டிருந்தார்கள் என்று அறிக்கை கூறுவதானது, முன்னுக்குப்பின் முரணாகக் காணப்படுகின்றது.

இவர்கள் கைது செய்யப்படாமல் இருந்திருந்தால், அவர்கள் தாக்குதல்களை நடத்தியிருக்கக் கூடிய சாத்தியக்கூறுகள் பலமாகக் காணப்படுகின்றன. அவ்வாறு தாக்கப்படவிருந்த முக்கிய இடங்கள் பற்றித் தெரிவிக்கப்படவில்லை. பொலிஸார் தம்மைத் தாமே பாராட்டிக் கொள்வதான கருத்துக்களும் அறிக்கையில் காணப்படும் அதேசமயம், தாக்குதல் நடைபெற்றிருந்தால், பொலிஸ் தரப்பில் பெரும் சேதங்கள் விளைவிக்கப்பட்டிருக்க முடியும் என்றும் கூறுகின்றது. குறித்த அறிக்கை கிடைத்த மூன்று நாள்கள் முடிவடைய முன்னரே, பொலிஸ்மா அதிபர் ஜயசுந்தர உடனடி அறிக்கை ஒன்றை அனுப்புமாறு வடபகுதிக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் சரத்குமாரவுக்கு அவசரக் கடிதம் ஒன்றை எழுதினார்.

01.தேசியபாதுகாப்பு 02. மக்கள் பாதுகாப்புடன் இருக்கிறார்கள் என்பதற்கான சூழல் நிலவுகின்றது. 03.சமூக விரோதச் சக்திகள் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி புலிகள் மீண்டெழுந்து விட்டார்கள் என்று காட்டிக் கொள்ளும் நிலைமை இருக்கிறதா? என ஆராய்ந்து அறிக்கை வழங்குமாறு அவர் கேட்டிருந்தார்.

கிளிநொச்சிப் பிரதேசத்தில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட எடுக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் திருப்தி அளிக்கும் அளவில் இல்லை என்பதைச் சுட்டிக் காட்டியுள்ள பொலிஸ்மா அதிபர் ஜயசுந்தர, புலிகள் இயக்கம் மீண்டும் தலைதூக்க முனைந்துள்ளதான நிலைமைகளை விரிவாக ஆராய்ந்து அறிக்கை வழங்கும்படி சிறப்புப் புலனாய்வுப் பிரிவினரையும், கிளிநொச்சிப் பகுதியில் கடமையில் உள்ள பொலிஸ் அதிகாரிகளையும் கேட்டிருந்தார். இதில் சம்பந்தப்பட்டிருக்கக் கூடியவர்கள், தீவிரக் கருத்துக்களை வெளியிடுபவர்கள் ஈறாக அடையாளம் கண்டுவைத்துக் கொள்ளும்படியும் அவர்களைப் பொலிஸ்மா அதிபர் கேட்டிருந்தார்.

### ஆதாரமே கிடையாது

இவ்வாறான தகவல்கள் பரவிய உடனேயே, அந்தப் பிரதேச மக்கள் மத்தியில் பயப்பீதி குடிகொள்ளத் தொடங்கியது மாத்திரமன்றி, பொலிஸார் மத்தியிலும் பரபரப்புத் தோன்றி இருந்தது. கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள், பிரிவுப்புலனாய்வுப் பிரிவினர் மற்றும் சிறப்பு புலனாய்வுப் பிரிவினர் ஆகிய தரப்புகளால் பொலிஸ்மா அதிபருக்கு அறிக்கைகள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. இவை அனைத்துமே விடுதலைப் புலிகள் இயக்கம் மீண்டும் ஒன்றிணைவதற்கான ஆதாரங்கள் எதுவுமே கிடையாது என்றே அறிவித்துள்ளன. இந்த நிலைமையில், புலிகள் மீண்டும் ஒன்றிணைகிறார்கள் என்ற வகையில் பயங்கரவாத தடுப்புப் பிரிவினர் எவ்வாறு முடிவுக்கு வந்திருக்க முடியும்? இதற்கான விளக்கம் ஏமாற்றம் அளிப்பதாகவே காணப்படுகின்றது.

புலனாய்வு விடயங்களில் தினம் தோறும் கிடைத்துவரும் புதிய தகவல்களுடன் தொடர்புடைய உயர்மட்டத் தரப்பொன்று, தன்னை வெளிப்படுத்திக் கொள்ளாமல் வழங்கிய தகவல் ஒன்றில், புலிகள் இயக்கமானது கட்டமைப்பு முறையில் மீண்டும் ஒருங்கிணையத் தொடங்கியிருக்கிறது என்பதில் எந்தவித உண்மையும் கிடையாது. தரைமட்டத்தில் அவ்வாறான எந்தவித நடவடிக்கைகளையும் நாங்கள் காணவில்லை. அதற்காக எங்களுக்கு அக்கறை இல்லை என்று அர்த்தமாகாது. விடுதலை செய்யப்பட்டுள்ள, புனர்வாழ்வு பெற்ற 12 ஆயிரம் புலிகள் இயக்க உறுப்பினர்களை எடுத்துக்கொள்ளுங்கள். பல்வேறு விதமான ஆயுதங்களையும் இராணுவ சாதனங்களையும் இயக்குவதற்கு புலிகளால் பயிற்சியளிக்கப்பட்டவர்கள் இவர்கள். இவர்களால் ஏற்படக் கூடிய சிக்கல்கள் குறித்து நாங்கள் கவனமாகவே இருக்கின்றோம். இவர்களில் கணிசமான எண்ணிக்கையினரை சிவில் பாதுகாப்புப் படையில் இணைக்கும் திட்டம் இருக்கின்றது. போரிடுவது அல்லாத இராணுவப் பிரிவுகளிலும் ஒரு பகுதியினர் இணைத்துக் கொள்ளப்படுவார்கள். ஏற்கனவே ஒரு பகுதியினர் இராணுவப் பண்ணைகளில் தொழிலில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். தோற்கடிக்கப்பட்ட புலிகளுக்குத் தற்போது தலைவர்கள் இல்லை. சர்வதேச மட்டத்தில் இப்போது பயங்கவாதம் சகித்துக்கொள்ளப்படுவதில்லை. ஆயுதங்களைக் கையாளும் நிலைமை கடுமையாகக் கட்டுப்பாட்டுக்குள் இருக்கிறது என்று அவர்கள் தெரிவித்துள்ளனர். அவர்கள் மேலும் தெரிவிக்கையில், உள்ளூர் அரசியல்வாதிகளின் செயற்பாடுகள் எங்களுக்குக் கவலையை ஏற்படுத்தி இருப்பது உண்மையே, அந்தக் காலத்தில் புலித் தலைவர்களுடன் தொடர்பு வைத்திருந்த ஒருவர் இருக்கிறார். புலம்பெயர்ந்த புலிகள் தரப்பிடம் இருந்து இவர் பணம் பெற்று மாவீரர் குடும்பங்களுக்கு வழங்கி வருகின்றார் என்பதை நாம் அறிவோம். அந்தக் குடும்பங்களின் வாழ்வாதாரத்துக்கு என்பதால் இதில் கவலைகொள்ள ஒன்றும் இல்லை. இந்த நிலைமையை நாங்கள் கவனமாகக் கண்காணித்து வருகின்றோம் என்கின்றனர்.


கடந்தவாரம் அமைச்சரவைக் கூட்டத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அமைச்சர்கள் அரச தரப்பு விருந்து நிகழ்வுகளில் கலந்துகொள்ளாமல் விடுவது குறித்துக் கவலை வெளியிட்டார். பெப்.4 ஆம் திகதி வழமையாக நடைபெறும் விருந்தில் அமைச்சர்கள் பலர் கலந்துகொள்ளாமையை அவர் சுட்டிக்காட்டினார். வரமுடியாத நிலைமை இருக்குமானால்அதனைத்தெரிவிக்கவேண்டும். அவ்வாறு தெரிவித்தால் மேசைகள் காலியாக இல்லாமல் வேறு ஆள்களை இருத்த முடியும். குறிப்பாகத் தாம் நடத்தும் விருந்துபசாரங்களில் இந்த விதம் நடந்துகொள்வது வரவேற்க முடியாதது என்று குறிப்பிட்டார். பிரதமர் ரணில் விக்கிரமசிங்க குறிப்பிடுகையில், அமைச்சர்கள் மட்டுமன்றி உறுப்பினர்களும் கூட நாடாளுமன்றக் கூட்டங்களுக்கு சரியாக வருகிறார்கள் இல்லை. கூட்டங்களில் போதுமான எண்ணிக்கையினர் கலந்துகொள்ளும் வகையில் தாம் ஒரு நேரசூசியைத் தயாரித்துவருவதாகவும், அதன்படி சபையில் கணிசமான அளவு உறுப்பினர்கள் பிரசன்னமாகி இருப்பது உறுதி செய்யப்படும் என்றும் கூறினார்.

### சயிட்டத்தை ஆதரித்து 600 மில்லியன் வழங்கியவர் ராஜபக்ச

மாலபே தென்னாசிய தொழில்நுட்ப மற்றும் மருத்துவக் கல்லூரி (சயிட்டம்) பற்றிக் குறிப்பிட்ட ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, இது குறித்து முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் நடத்தையைக் கண்டித்தார். கடந்த வாரம் மேல்முறையீட்டு நீதிமன்றம் அளித்திருந்த தீர்ப்பொன்றில், இலங்கை மருத்துவக் கவுன்சில் அந்தக் கல்லூரிப் பட்டதாரிகளுக்கு இடைக்காலப் பதிவுகளை அனுமதிக்க வேண்டும் என்று தீர்ப்பளித்திருந்தது. அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் மன்றம் மற்றும் அரச மருத்துவர்களின் சங்கம் போன்றவை சயிட்டம் கல்லூரிக்கு எதிராகப் போராட்டங்களை பல மாத காலம் நடத்தி வந்திருந்த நிலையில், இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டிருந்தது. முன்னாள் ஜனாதிபதி பதவியில் இருந்தபோது, அவர் சயிட்டம் செயற்படுவதற்காக 600 மில்லியன் ரூபா நிதியை வழங்கியிருந்தார் என்று கூறிய ஜனாதிபதி சிறிசேன, இப்போது அவர் சயிட்டத்தை எதிர்த்து குரல் எழுப்புகின்றார் என்று குற்றம் சாட்டினார் .

மாகாண சபைகளுக்கு அதிகாரங்களைப் பகிர்வது தொடர்பாக சிறிசேன, அரச நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் கடந்தவாரம் குறிப்பிட்டபோது, அதிகாரப் பகிர்வு வழங்குவதாக நாம் ஒப்புக்கொண்டிருக்கின்றோம். எவ்வளவு தூரம் நாம் இதில் போக முடியும்? என்றார்.

முதலமைச்சர்கள் தொடர்பாக பிரச்சினைகள் மேலெழுவது பற்றிக் குறிப்பிட்ட அவர், இவர்களுக்கு அதிக அதிகாரங்கள் கிடைத்தால் என்ன நடக்கும் என்பது பற்றி யோசிக்க வேண்டியிருக்கிறது.மத்திய அரசுக்கும் மாகாண அரசுக்குமான ஏககாலப் பணிகளில் 13ஆம் திருத்தத்தின் படியான பட்டியல் நீக்கப்படுமானால் என்ன நடக்கும் என்றும் அவர் கேட்டார். இந்தப் பட்டியலில் திட்டமிடல், நிதிகள், உயர் கல்வி, தேசிய வீடமைப்பு கட்டுமானங்கள், விவசாயம், சுகாதாரம், நீர்ப்பாசனம்,மீன்பிடித்தொழில், மிருகவளர்ப்பு, உல்லாசப் பயணம், வர்த்தகம், வர்த்தக சுற்றாடல் பாதுகாப்பு முதலிய விடயங்கள் அடங்குகின்றன.



## வாசகர் திருமுகம்

### இனிப்புச் செய்தி

அண்மைக் காலமாக சீனி பற்றி
இனிப்பான செய்திகள் வந்து
கொண்டிருக்கின்றன. வவுனியாவில்
சீனி விற்பனையை
நிறுத்தப்போவதாக வர்த்தகர்கள்
செய்தி வெளியிட்டனர்.
அடுத்தநாள், யாழ்ப்பாண
வர்த்தகர்கள் சீனி மற்றும் பயறு
ஆகியனவற்றை யாழ்ப்பாணம்
கொண்டு வந்து விற்பனை
செய்வதை நிறுத்தப்போவதாகக்
கூறியிருந்தனர். அதற்கான
காரணங்களையும் நியாயபூர்வமாக
வெளிப்படுத்தி இருந்தனர்.
வீட்டில் இன்று தேநீர் அருந்தும்போது
இந்தச் செய்திகள் மீதான தாக்கம்
புரியத் தொடங்கியது
சீனி போடவில்லையா? என்று
கேட்டேன்.
போட்டது தான், கொஞ்சம் குறைச்சுப்
போட்டனான்; கடைகளில்
தட்டுப்பாடாம்.சீனி இல்லை ,
கிடந்ததை போட்டனான்; இதைக்
குடுக்க பொடியன் ஏசப்போகிறான்;
முறைப்பாடு தொடர்ந்தது.
சீனி விலையைக் கூட்டுறதுக்காக
பதுக்கிப் போட்டாங்கள் என்ற
முறைப்பாடே அது.
வீட்டுக்காரிக்குத் தெரிந்த அரசியல்
அவ்வளவே.
எது எவ்வாறாயினும்,
சீனித்தட்டுப்பாடு, வரி அதிகரிப்பு,
கட்டுப்பாட்டு விலைக்குத்தான் விற்க
வேண்டும் போன்ற கட்டுப்பாடுகள்
நன்மைக்கே. சீனியை வெள்ளை
நஞ்சு என்று ஆயிரம் தரம் எடுத்துச்
சொன்னாலும், நாவுக்கு அடிமை
யாகி சீனியே சீவியமாகிவிட்டது.
அந்த நாளில் தேநீர், கோப்பி, சிகரட்
பழக்கங்களை ஏற்படுத்துவதற்கு
அவற்றை இலவசமாக வழங்கி
நுகர்வோரை ஊக்குவித்த வரலாறும்
உண்டு. அதேபோல பனங்கட்டிப்
பயன்பாட்டை ஊக்குவிக்க வடக்கு
விவசாய அமைச்சு, பனை
அபிவிருத்திச்சபை மற்றும் சகலரும்
இணைந்து ஆக்க பூர்வமான
நடவடிக்கை எடுக்கவேண்டும்.
பனங்கட்டி, பனங்கற்காரம்,
பனஞ்சீனி உற்பத்தியை மேம்படுத்த
நடவடிக்கை எடுப்பதுடன், அதற்கு
நுகர்வோர் ஆட்படும்வரை, மானிய
அடிப்படையில் குறைந்த விலைக்கு
விற்பதற்கேற்ற நடவடிக்கை எடுக்க
வேண்டும்.
இதேபோன்று பொலித்தீன்
பிளாஸ்ரிக் பாவனை தடை
செய்யப்படும்போது, பாவனைப்
பொருள்களை எளிதாகவும் மலி
வாகவும் மக்களுக்குக் கிடைக்கக்
கூடியதாக கைத்தொழில்
அமைச்சுடன் இணைந்து பனை
அபிவிருத்திச்சபை ஆக்கபூர்வமான
செயல்களில் இறங்க வேண்டிய
தருணம் இதுவே.

செ.செல்வராசா

















# கலைச் செயற்பாட்டின் முக்கியத்துவத்தை எடுத்தியம்பிய முழுநிலா நாள் கலைவிழா

சு.வரதகுமார்

வவுனியா நகரசபையின் கலாசார மண்டபத்தில் கடந்த 10ஆம் திகதி வடமாகாண கல்வித் திணைக்களத் தின் ஒழுங்கு படுத்தலில் வவுனியா தெற்கு கல்வித் திணைக்களத்திற்குட்பட்ட பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் வழிகாட்டலில் நடத்தப்பட்ட முழு நிலாக் கலை விழா கலை செயற்பாட்டின் முக்கியத்துவத்தை எடுத்தியம்பியது.

இந்த முதல் நிகழ்வாக பௌர்ணமிநாள் கொடியேற்றல் இடம்பெற்றது. இதனை யடுத்து அரங்கின் முன் மூங்கில் மரத்தின் கிளையில் சிட்டி விளக்குகள் அதிதிகளால் ஏற்றப்பட்ட காட்சி அழகியல் பூர்வ மாக இருந்தது. திரை விலகியதும் வர்ண ஒளியூட்டல்கள் மேடையின் புறம் மிளிரத் தொடங்கியது. அங்கு மேடையில் மூன்று இனங்களையும், மூன்று மதங்களையும் சித்திரித்துக் காட்டக் கூடிய வகையில் மாணவர்கள் மேடையின் பின்புறம் கலாசார உடையில் காணப்பட்டனர். மேடையில் மேளம் நாதஸ்வரங்கள் முழங்கியதும், மூன்று மதங்களுக்கும் உரிய கடவுள் வணக்க பாடல்கள் பாடப்பட்டது. அதற்கு ஏற்ப இசை எல்லோரையும் அமைதிப்படுத்தியது.

### வரவேற்பு நடனம்

வந்தாரை வரவேற்கும் வரவேற்புரையையடுத்து, தமிழ் மாணவர்களின் வரவேற்பு நடனம் இடம்பெற்றது. தொடர்ந்து சிங்கள மாணவர்களின் வரவேற்பு நடனம் இடம்பெற்றது. தொடர்ந்து இடம்பெற்ற நடன ஆற்றுகையானது எல்லோரையும் கவரக்கூடிய ஆடை அலங்காரங்களுடன் சகல வகையான அபிநயங்களையும், வெவ்வேறு உணர்வுகள் ஆடல் அசைவுக்கூடாக நடன மாணவிகள் வெளிப்படுத்தினர். மனதுக்கு நல்ல மகிழ்வை அந்த ஆடல் அசைவுகள் வெளிப்படுத்தியது மட்டுமல்லாது, அதிகளவு மாணவர்கள் நடன ஆற்றுகைக்காக பயன்படுத்தப்பட்டதன் மூலம் மேடையின் பக்கமே எல்லோருடைய கவனமும் திசைதிருப்பப்பட்டது. இவ்வாறு அதிகளவு மாணவர்கள் நடனத்தில் பயன்படுத்தப்பட்டமை, மாணவர்களின் கலைத்திறனை மேம்படுத்தியது மட்டுமல்லாது, நடனத்தை பார்த்துக்கொண்டிருந்த மாணவர்களையும் நடனம் ஆட வேண்டும் என்ற உணர்வை தூண்டி விட்டமை நடனத்தின் சிறப்பான வெளிப்பாடாகும்.

தொடர்ந்து விழாவின் தலைமையுரையை வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் முத்து இராதாகிருஷ்ணன் உரையாற்றுகையில்; கலை சார்ந்த விடயங்களில் உத்வேகத்தை காட்டுவதன் ஊடாகவே கல்வி செயற்பாட்டை அதிகரிக்க முடியும். அடுத்து வவுனியா வடக்கு வலயக் கல்விப் பணிப்பாளர் ஸ்ரீஸ்கந்தராஜாவின் உரை இடம்பெற்றது. ஆரம்பகாலத்தில் கோயில்களில்தான் கலைகள் வளர்ச்சி பெற்றது. இன்றைய நிலையில் அரங்கில்தான் கலைகள் நிகழ்த்தப்படுவது வழமையாகும். எனினும் இவ்வாறு அரங்கில் இடம்பெறும் நிகழ்வுகளும் அரிதாகிவிட்டது. இந்த முழு நிலாக் கலை விழா அரிதாகி வரும் கலை வெளிப்பாடுகளை அரங்கேற்ற உதவுகிறது. அழிந்து போகின்ற கிராமிய கலைகள் இதன் மூலம் புத்துயிர்பெறுகின்றது.

பிரதேச செயலகங்களில் இடம்பெறும் பண்பாட்டு விழாக்களும் கலை வளர்க்கப்படுகின்றது. இதன் மூலமாகவே எமது இருப்பையும் நாம் தக்கவைக்கமுடியும். வடமாகாணத்தில் மூன்று இனங்களைக் கொண்ட மாணவர் சமூதாயம் வவுனியா தெற்கு கல்வி வலயத்தில்தான் உள்ளது. எனவே மூன்று வகையான பண்பாட்டை கலையின் ஊடாக வளர்க்கவேண்டிய பொறுப்பு இவ்வலயத்துக்குண்டு. இவ்வாறான விழாக்கள் ஊடாக அவை வளர்க்கப்படுகின்றது -என்றார். தொடர்ந்து 'கல்வித்தாரை' நூல் வெளியீடு இடம்பெற்றது. நூலுக்கான நயப்புரையை கலைஞர் கி.உதயகுமார் நிகழ்த்தினார். இதன் பின்னர் தலைமை விருந்தினரான வடமாகாண கல்விச் செயலாளர் இ.ரவீந்திரன் உரையாற்றினார். அவர் உரையாற்றுகையில்;

அருகி வரும் கலை, பண்பாட்டை மேம்படுத்துவதற்காக பிரதேசாதியாக இருக்கின்ற கலை, பண்பாடுகளை எங்களுடைய மாணவர்களுக்கு தெரியப்படுத்துவதற்காகவும், ஆசியர்களிடம் காணப்படும் திறமைகளை வெளிக்கொணர்வதற்காகவும், கலை ஆற்றல் உள்ள மாணவர்களுக்கு உரிய சந்தர்ப்பத்தை வழங்கவும், அவர்களை மேடையேற்றவும் இவ் நிகழ்வு ஒழுங்குபடுத்தப்பட்டது.

### மாணவர்களின் கலை ஆற்றல்

மாணவர்களின் கலை ஆற்றல் மேம்படும்போது கல்விச் செயற்பாடும் மேம்படும். மாணவர்கள் ஒழுக்க விழுமியங்களை பேணவேண்டுமாயின் கலைச் செயற்பாட்டில் ஈடுபட வேண்டும். கலையோடு மட்டுமல்லாது வரலாற்றுப் பண்பாடுகளை யும் மாணவர்கள் கற்கவேண்டும். வன்னியை ஆண்ட மன்னன் பண்டாரவன்னியன் சிலையை வன்னியில் நிறுவ வடக்கு மாகாண சபையினர் முயற்சித்து வருகின்றனர். பிள்ளைகளைத் தென்னிந்திய திரைப்படங்களை பார்ப்பதற்கு நாம் அனுமதிக்காது நல்ல கலைச்செயற்பாட்டில் ஈடுபடுத்தினால் வாள்வெட்டு கலா சாரத்தை இல்லாதொழிக்க முடியும். அத்துடன் அவர்களின் கற்றல் செயற்பாட்டை மேம்படுத்த முடியும் -என்றார்.

தொடர்ந்து வேழம்படுத்த வீராங்கனை நாட்டுக்கூத்து இடம்பெற்றது. இக் கூத்தின் கதை சுவாரசியமாக இருந்தது. மதம் கொண்ட யானையை பிடிப்பது சம்பந்தமாக வன்னியனார் அவையில் இடம்பெற்ற வாக்குவாதத்தில் தலைமை பணிக்கனான வேலப்பணிக்கனால் மதம்கொண்ட யானையைப் பிடிக்கமுடியாது என்றும், அவரது மனைவி அரியாத்தை அந்த யானையைப் பிடிப்பாள் என்றும் அவர்களது உறவினனான நீலப்பணிக்கன் ஏளனமாகச் சவால் விடுகிறான். வேலப்பணிக்கன் மனைவி அரியாத்தை இந்தச் சவாலை ஏற்றுக்கொண்டு தனது கற்பின் மகிமையாலும், கடவுள் பக்தியாலும் மனத்துணிவினாலும் மதம்கொண்ட யானையை அடக்கிப் பிடித்து வருகின்றாள். வன்னியனார் பரிசில் கொடுத்து மகிழ்கிறார். இதனால் வெட்கப்பட்ட நீலப்பணிக்கன் அவனது மனைவி நீலகேசாயின் மூலம் அரியாத்தையின் பொன்னாடையில் நஞ்சு பூசியதினால் அவள் உயிரிழக்கிறாள்.

இதனை அறிந்த வேலப்பணிக்கன் அவள் மீது ஒப்பாரி பாடி அவளது பெருமையைக் கூறி உயிரிழக்கின்றார்.

### சிறப்பான பிற்பாட்டு

இக்கூத்தின் பிற்பாட்டு சிறப்பாக இருந்தது மாணவிகளுக்கு ஏற்ப கூத்து ஆடல் எழிமையாக வடிவமைக்கப்பட்டிருந்தது, மாணவிகள் நன்றாக பாடினார்கள். குறுகிய நேரத்தில் கூத்து வடிவமைக்கப்பட்டமை எவருக்கு சலிப்பை எற்படுத்தவில்லை நன்றாக பார்வையாளர் ரசித்தார்கள்.

மாலை நிகழ்வு பாண்ட்வாத்தியங்களுடன் அதிதிகள் வரவேற்கப்பட்டு நிகழ்வு ஆரம்பமானது. மாலை நிகழ்வில் கௌரவ அதிதியாக வவுனியா தேசியக் கல்லூரி பீடாதிபதி சிதம்பரநாதன் உரையாற்றினார். அவர் தனது உரையில் உயர்தர பிரிவில் 40 வீதமான மாணவர்கள் விஞ்ஞான பாடம் கற்க வேண்டும் என்பது கல்வியமைச்சின் எதிர்பார்ப்பாகும். நாங்கள் அதற்கு இடம்கொடுக்கவில்லை. இதற்கு போதியளவு ஆசிரிய வளம் இல்லை. பின்தங்கிய பிரதேசங்களில் போதிய ஆசிரியவளம் இல்லை. ஆனாலும் இந்த நிலையில் மாணவர்கள் கலைத்துறையில் சாதனை நிலை நாட்டுகின்றனர் அதற்கு இந்த நிகழ்வுகள் அவசியம்- என்றார்.

# கிராமியக் கலைக்கு என்றும் ஓர் இடம் இருக்கவே செய்யும்

## அண்ணாவி மாரியன் பேட்டி



■ எஸ்.மல்லிகா

ஏட்டுக் கல்வி பெரும்பாலும் இல்லாத நாட்டு மக்களிடையேதான் கூத்துக் கலைகள் தொன்று தொட்டு வழக்கிலிருந்து வருகின்றன. இதில் நாட்டம் கொண்ட என்னைப் போன்ற பலர் அவை அழியாமல் வாழ்வதற்குப் பங்களிப்புச் செய்து வருகின்றனர். என்னதான் சினிமா மோகம் ஏற்பட்டு நாகரிகம் வளர்ச்சியடைந்தாலும், இத்தகு கிராமியக் கலைகளுக்கும் சமூகத்தில் ஒரு இடம் இருக்கும் என்பது எனது நம்பிக்கை என்று கூறுகிறார் அராலியூர் அண்ணாவியாரான கலாமணி மாரியன் கந்தசாமி.

உதயன் பத்திரிகைக்கு வழங்கிய நேர்காணலின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தச்சுத் தொழிலாளியான மாரியன் கந்தசாமி, அராலி வள்ளியம்மை ஞாபகார்த்த வித்தியாசாலையில் கல்வி பயின்றவர். பாடசாலைக் காலத்திலேயே புராண- இதிகாசக் கதைகளைக் கரைத்துக் குடித்தவர். அந்த நூல்கள் நவின்ற வழியே வாழ்ந்தும் வருபவர். நடிகர், அண்ணாவியார், பாடகர் என்று பல் திறமையுடன் வலம் வரும் இவர், கலைத்துவப் பொருள்கள் செய்வதிலும் கைதேர்ந்தவர். ஒரு நபரைப் பார்த்தால், அவரை, அப்படியே மரத்தில் செதுக்கிக் கொடுக்கக்கூடிய ஆற்றல் உடையவர். தெய்வச் சிலைகள் செதுக்குவதிலும் வல்லவர்.

இவரது கலைப் பணியைப் பாராட்டி வலிகாமம் மேற்கு- சங்கானை பிரதேச செயலக கலாசாரப் பிரிவு நடத்திய கலை இலக்கிய விழாவில் 2010ஆம் ஆண்டு கலைவாரிதி பட்டமும், 2001ஆம் ஆண்டு குறித்த பிரதேச செயலக கலாசாரப் பேரவை நடத்திய கலைஞர் கௌரவிப்பில் நாட்டுக்கூத்து வித்தகன் பட்டமும் வழங்கப்பட்டன. அத்துடன், அராலி சரஸ்வதி மகா வித்தியாலயத்தில் இடம்பெற்ற கலை இலக்கியப் போட்டியில் இவர் நெறியாள்கை செய்து வழங்கிய சிந்துநடைக் கூத்தான காத்தவராயன் முதலிடம் பெற்றமைக்காகக் கல்விச் சமூகத்தினரால் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டு, கலாமணி என்ற பட்டமும் வழங்கப்பட்டது. தற்போது இவருக்கு 71 வயதாகிவிட்ட போதிலும், உள்ளத்தால், இளைஞனாக இருப்பதாகக்கூறும் இவர், அந்த உற்சாகத்துடன் கலைப்பணியாற்ற முடியும் என்றும் கூறுகிறார். இனி அவரது நேர்காணலிலிருந்து...

**கேள்வி**- கலைத்துறை மீதான ஈடுபாடு எவ்விதம் ஏற்பட்டது?

**பதில்**- எனது தந்தையார் ஒரு சிறந்த நடிகராக இருந்தவர். சிந்துநடைக் கூத்தான காத்தவராயனில் அம்மனாகவும், வெடியரசன் கூத்தில் வீகாமனாகவும் மிகச் சிறப்பாக நடித்தவர். அத்துடன், குருஷேத்திர நாடகத்தில், கிருஷ்ணர் பாத்திரம் ஏற்று மிகச் சிறப்பாக நடித்தவர். அவரது நடிப்புத் திறனைப் பார்த்துக்கொண்டேயிருக்கலாம் போல் தோன்றும். அவற்றையெல்லாம் பார்க்கும்போது, இன்னும் சிறப்பாக நான் நடிக்க வேண்டும் என்ற ஒரு வெறி என்னுள் ஏற்படும். அந்த வெறியே இன்று எந்தன் கலைப்பணிக்கு வித்திட்டது. அத்துடன், பாடசாலைக் காலத்திலேயே, ஆசிரியர்கள் எனது கலைத் திறமையை இனங்கண்டு, அவ்வப்போது ஊக்குவித்தும் வந்தனர். எனது ஆசிரியரான கணபதிப்பிள்ளை, நேரம் கிடைக்கும் போதெல்லாம் என்னை அழைப்பித்துப் பழைய பாடல்களைப் பாடச் சொல்லிக் கேட்பார். 'சிந்தனை செய் மனமே' என்ற தியாகராஜபாகவதரின் பாடல்தான் எனக்கு மிகவும் பிடித்தமானது. அப்பாடலைத்தான் நான் அடிக்கடி பாடுவேன். அத்துடன், சீர்காழி கோவிந்த ராஜன் மற்றும் ரி.எம்.சௌந்தரராஜன் ஆகியோரின் பாடல்களையும் சுருதியோடு பாடுவேன். இவ்வாறு எனக்குக் கலைத்துறை மீது நாட்டம் ஏற்பட்டு இன்று பலரும் மெச்சக்கூடிய நிலையில் இருக்கின்றேன்.



**கேள்வி**-பதின்மவயதில் ஆரம்பித்து, பிற்பாடு வளர்ச்சி பெற்ற கலைப்பணிபற்றிக் கூறுங்கள்...

**பதில்**- 1966 என்று நினைக்கிறேன். அதாவது, எனது இருபதாவது வயதில் நான் கூத்துக் கலைகளை நெறி யாள்கை செய்து, அவற்றைப் பல்வேறு மேடைகளில் ஆற்றுகை செய்து வந்தேன். அத்துடன், நானும் நடிகனாகப் பங்கேற்று நடித்து வந்தேன். காத்தவராயனில் அம்மனாக, அரிச்சந்திராவில் அரிச்சந்திரனாக, பவளக் கொடியில் அர்ச்சுனனாக, ஸ்ரீபாரதத்தில் துரியோதனனாக எனப் பல பாத்திரங்களை ஏற்று நடித்தேன்- இன்றும் நடித்து வருகிறேன். அத்துடன், அடுத்த தலைமுறைக்கு எனது கலைப் பாரம்பரியத்தைக் கையளிக்கும் முயற்சியிலும் ஈடுபட்டுள்ளேன்.

**கேள்வி**-உங்களுக்கென்று சொந்தமாக நாடக மன்றங்களை வைத்துள்ளீர்களா?

**பதில்**- இல்லை. அந்தளவுக்கு என்னிடம் பொருளாதார வசதியில்லை. எனினும், என்னைச் சார்ந்த கலை வட்டத்தினர் அதாவது, நடிகர்கள் பலர் இருக்கிறார்கள். அவர்களைக் கொண்டு இந்தக் கூத்துக்களை நான் பயிற்றுவித்து, மேடையேற்றி வருகிறேன். அநேகமாகக் கோயில் திருவிழாக்கள் மற்றும் பாடசாலைக் கலைவிழாக்களில் எமது நிகழ்ச்சிகளை மேடையேற்றுவோம். அங்கு எமக்கென ஒருதொகைப் பணம் தருவார்கள். அதனை எல்லோரும் பகிர்ந்தெடுப்போம். அத்துடன், கச்சேரி நிகழ்ச்சிகளையும் நடத்தி வருகிறேன். இதில் தியாகராஜபாகவதர்இ சீர்காழி கோவிந்தராஜன் முதலானோருடைய பாடல்களைப் பாடி வருகிறேன்.

**கேள்வி**- தங்கள் கலைப் பயணத்தில் நிறைவேறாத ஆசை ஏதாவது உள்ளதா?

**பதில்**- ஆம்! எனது பெற்றோருக்கு நான் ஒரே பிள்ளையாக இருந்தாலும், மேற்படிப்புப் படிப்பதற்குக் குடும்ப வறுமை இடம்தரவில்லை. ஆதலால், இடைநிலைக் கல்வியுடன் படிப்பை நிறுத்த வேண்டிய தாயிற்று. பின்னர் எமது பரம்பரைத் தொழிலான தச்சுத் தொழிலைச் செய்து வந்ததுடன், கூத்துக்கலை மீது இருந்த தணியாத தாகத்தினால் நடிகராகவும் அண்ணாவியாராகவும் இருந்து வருகிறேன். எண்ணற்ற மேடைகளில் நடித்தும் எனது கூத்துக் கலையை ஆற்றுகை செய்தும் வந்துள்ள- வருகின்ற என்னுள் என்னையும் அறியாமலே ஒரு சோகம்- நிறைவேறாத ஆசை இழையோடிக் கொண்டிருக்கும். அதாவது, நன்றாகப் படித்துப் புலம்பெயர் தேசங்களிலும் எனது கலைப் பணியை ஆற்றும் சந்தர்ப்பத்தை இழந்துவிட்டேனோ என்ற ஆதங்க உணர்ச்சி தான் அது.

**கேள்வி**- ஒரு கலைஞன் என்ற ரீதியில், உங்கள் கிராமத்தில் எப்படியான வரவேற்பு உங்களுக்கு இருக்கிறது?

**பதில்**- மிகச்சிறந்த வரவேற்பு இருக்கிறது. கிராமத்து இளைஞர்கள் என்னிடம் நாடகம் பயில வருவார்கள். ஆனால், அவர்களிடம் பாடல்களைப் பாடக்கூடிய சாீர வளம் இல்லை. பொதுவாகஇ சிந்துநடைக் கூத்தான காத்தவராயன் கூத்தையே எல்லோரும் பழகி நடிக்கின்றனர். இது இலகுவான மெட்டு என்பதனால், பலராலும் நடிக்க முடியும். ஆனால், பவளக்கொடி மற்றும் அல்லி அர்ச்சுனா போன்ற கூத்துக்களின் பாடல்களைப் பாடுவது கடினம். முயற்சி எடுத்தால், அவர்களும் முன்னுக்கு வரலாம்.

**கேள்வி**- தற்போதைய சமூகம் சினிமாவுக்கு அடிமையாகிவிட்டது என்ற கருத்துநிலை பொதுவாக உண்டு. இந்நிலையில், கிராமியக் கலையின் எதிர்காலம் எப்படியிருக்கும் என்று நினைக்கிறீர்கள்?

**பதில்**- ஏட்டுக் கல்வி பெரும்பாலும் இல்லாத நாட்டு மக்களிடையேதான் கூத்துக் கலைகள் தொட்டுதொட்டு வழக்கிலிருந்து வருகின்றன. இதில் நாட்டம் கொண்ட என்னைப் போன்ற

(22ஆம் பக்கம் பார்க்க)

விவேகன்

# ஈழத்து நாடக உலகின் சாதனையாளர்

# மகாகவி

நாடக அரங்கு காலத்தின் பதிவினைக் கச்சிதமாக வெளிப்படுத்துகின்ற ஊடகமாகும். சமூகத்தின் கதையியலினை காட்சிப் புரிதல்களுடன் வெளிப்படுத்துகின்ற வகையில் முதன்மையான கலை வடிவமாக விளங்குகின்றது. இதனால்தான் காலத்தினை விஞ்சி நிற்கின்ற வடிவமாக விளங்குகின்றது.

ஈழத்தமிழங்கினை பொறுத்தவரையில் காத்திரமான நாடகஆசிரியர்கள் காலம் தோறும் முகிழ்ந்தமையினை வரலாற்றோட்டத்தில் காணக்கூடியதாக உள்ளது. இவர்களில் குறிப்பிடத்தக்க நாடகஆசிரியராக மகாகவி எனும் பெயருக்குச் சொந்தக்காரராக உருத்திரமூர்த்தி விளங்குகின்றார்.

இவர் பா நாடகங்களினை யாத்ததுடன் குறும்பா எனும் கவிதை வடிவத்தின் ஊடாக ஈழத்து இலக்கியப் பரப்பில் கவனத்திற்கு உட்பட்ட படைப்பாளியாக விளங்குகின்றார். பா நாடகங்கள் எனும் வகுதியாக கவிதை நடையிலான நாடகங்களினை குறிப்பிடுவர் இப்பகைப்புலத்தில் இவரால் படைக்கப்பட்ட பா நாடகங்களாக கோடை, புதிய தொரு வீடு, முற்றிற்று எனும் நாடகங்கள் விளங்குகின்றன.

**புதியதொரு வீடு நாடகம்**

இவற்றில் 'புதியதொரு வீடு' எனும் நாடகமானது அ.தாஸிஸிசினது தூண்டுதலினால் 1969ஆம் ஆண்டு எழுதப்பட்டு 1971ஆம் ஆண்டுமுதலில் அ.தாஸிஸியஸினாலே நெறியாழ்கை செய்யப்பட்டது. பின்னர் பல்வேறு காலகட்டங்களிலும் பல நெறியாளர்களினால் நெறிப்படுத் தப்பட்டது.

கொழும்பு திருமறைக்கலாமன்றத்தினால் 1999ஆம் ஆண்டு பிரான்சிஸ் ஜெயனத்தினால் நெறியாழ்கை செய்யப்பட்டு மேடையிடப்பட்டது.

பின்னர்யாழ்ப்பாணதிருமறைக்கலாமன்றத்தினால் மீண்டும் தயாரிக்கப்பட்டு கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் கொழும்பில் நடத்திய இரண்டு நாள் நாடக விழாவில் மேடையிடப்பட்டதுடன், யாழ்ப்பாணத்தில் ஒக்ரோபர் மாதம் நிகழ்த்தப்பட்டதுடன், தற்போது கடந்த வாரம் மீளவும் கலைத்தூது மண்டபத்தில் அரங்கு நிறைந்த பார்வையாளர் மத்தியில் நிகழ்த்தப்பட்டது.



இந்தநாடகமானது மீனவ சமூகத்தை பின்னணியாககொண்டுபடைக்கப்பட்டுள்ளது. புயல் ஒன்றினூடாக சிதைவுறும் குடும்பமொன்றில் ஏற்படும் நெருக்கீடுகளும் அந் நெருக்கீடுகளுக்கு தீர்வு காண முற்படும் போது எதிர்பாராது எழும் சவால்களை மானிடர்களாக நின்று அதனை எவ்வாறு எதிர்கொண்டு வாழ்வது என்ற முடிவினையும் கொண்டு காணப்படுகின்றது.



இந்த நாடகத்தில் மாயன் -பொ.தை.ஜஸ்ரின் ஜெலூட், மயிலி-வி.றீற்றா பிரிதர்சினி. மன்னவன் -யோ-அபிசேக், மாசிலன்- பொ.தை.ஜஸ்ரின் மிநோசன், மையுண்ட நெடுங்கண்ணாத்தை -வைதேகி செல்மர் எமில், மறைக்காடர் பி.யூல்ஸ் கொலின், பாடகர்கள்- ஜெயகாந்தன், அ.அன்றுயூலியஸ், ச.கௌரி, அ.றொக்சன், மனோஸ், ,மீனவர்கள்- யூ.அஜீத்,சி.துசிகரன், அ.றஜீவ், கே.ஜீவிதன், அ.ஜெனிஸ்குமார், கா.சுரேன், இசை-இசைத்தென்றல் ம.யேசுதாசன், உதவி ஜெயகாந்தன், பொ.தை.ஜஸ்ரின் ஜெலூட்,செ.ஜெறிஸ்ரலின், இசைக்கருவிகள்- ஓர்கன்- ம.யேசுதாசன், தபேலா- பி.எக்ஸ். கலிஸ், தபேலா-வருன்,கொங் கொஸ்- மு.தனபாலசிங்கம், வேடஉடை, ஒப்பனை அ.அன்றுயுலியஸ், ஒப்பனை அ.அன்றுயுலியஸ், பொ.தை. ஜஸ்ரின் ஜெலூட் காட்சி விதானிப்பு , ஒளிவிதானிப்பு -அ.யோசவ், -ஊடகம்- கி.செல்மர் எமில்பொது நிர்வாகம்- சி.எம்.நெல்சன், சிகிறிஸ் தோபர், சூ.சதீஸ்குமார், நிர்வாக உதவி- பே.எமில் சர்வானந்தன், நெறியாழ்கை உதவி-தை.பொ.ஜஸ்ரின் ஜெலூட், கே.ஜீவிதன்,உதவி நெறியாழ்கை, அரங்கமுகாமை- வைதேகி செல்மர் எமில்,நெறியாழ்கை யோ.யோன்சன் ராஜ்குமார் ஆகியோர் இவ்வாற்றுகையில் பங்குபற்றியுள்ளனர்.

**யதார்த்தமான நாடகம்**

கவிதை பாங்கான நாடகத்தினை எளிய வடிவில் அதாவது யதார்த்தத்தைப் புலப்படுத்துகின்ற வகையில் நாடகமாக அ.தாஸிஸியஸினால் ஆரம்பத்தில் நெறியாழ்கை செய்யப்பட்டிருந்தது. இப்பின்னணியில் சிறந்த முறையில் இந்த நாடகம் படைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. ஒவ்வொரு பாத்திரங்களும் தமக்குரிய வகிபங்கினை கனதியாக புரிந்துகொண்டவகையில் பாத்திரங்களுக்கு உயிர் கொடுத்து நடித்திருந்தனர் இதனால் பார்ப்போருடன் எளிதாக ஒன்றிக்கக் கூடியதாக இருந்தது.

**முழுநேர நாடகம்**

ஒன்றரை மணி நேர முழு நீள நாடகம் என்கின்ற நினைப்பற்ற வகையில்; ரசனைக்குரிய வகையில் காட்சிப்புரிதல்களுடன், நவீனத்துவ வடிவங்களினையும் உள்வாங்கி வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

புயலுக்குப் பின்னர் தனது வீடு தேடி வருகின்ற மாயன் தனது வீடு எங்கே என அரியகுட்டி பெற்றெடுத்த புதல்வன் மாயனது வீடு எங்கே என தனது புதல்வனிடமே கேட்டுக்கொள்வது தனது புதல்வன் என்றே தெரியாமல் அவனுக்கு மீன் பிடிக்க கற்றுக்கொடுப்பது. தனது ஊர் பல மாறுதல்களுடன் இருப்பதனை பிரமிப்புடன் காண்பது எல்லாம் துயரத்தின்சுமைகளாகும் இவை ஆர்ப்பாட்டமில்லாத வகையில் எளிமையாக தனது தேர்ந்த நடிப்பின் மூலம் வெளிப்படுத்தி பார்ப்போர் மனதில் இடம்கொள்கின்றார் மாயனாக பாகமாடிய பொ.தை.ஜஸ்ரின்ஜெலூட், அதேபோன்று மையுண்ட நெடுங்கண்ணாத்தை பாத்திரமேற்றவர் ஊரில் உள்ளவர்களது பாவனையினை வெளிப்படுத்திபார்வையாளர்களது ரசிப்புக்கு உள்ளாகின்றார். மயிலி என அனைத்து பாத்திரங்களும் தமக்குரிய பாணியில் உச்சவெளிப்பாட்டினை வெளிப்படுத்தியிருந்தன.

**உயிர்ப்பான இசை**

நாடகப்படைப்பொன்றில் இசை உயிர்ப்பான விடயமாக குறிப்பிடுவர். நாடகத்தின் மனநிலையினை , காட்சிக்கள் இருக்கின்ற வலியினை, பார்ப்போருடன் ஊடாடுவதற்கான களவெளியினை இசை கச்சிதமாக வெளிப்டுத்துகின்றபோது படைப்பு முழுமைப்படுத்தப்படுகின்றபோது வெற்றிகரமான படைப்பாகவும் மிளர்கின்றது. அப்பின்னணியில் பாடல்கள், பின்னணி இசை நாடகவோட்டத்திற்கு துணை செய்யும் வகையில் பார்ப்போர் நாடகத்துக்குள் இனைகின்றவகையிலும் வெளிப்படுத்தப்பட்டுள்ளமை சிறப்பிற்குரியதாகும்.

இந்த நாடகத்தின் நெறியாளர் யோன்சன்ராஜ்குமார் ஈழத்தமிழர்களைப் பொறுத்தவரையில் முதன்மையான நெறியாளராக விளங்குகின்றார். இவர் நெறியாழ்கை செய்த அற்றைதிங்கள் கொல்லெனும் கொற்றம் போன்ற நாடகங்கள் குறிப்பிடத்தக்கன. இவை அரங்க புலத் தில் புதிய படைப்பாக்க அணுகுமுறையுடன் படைக்கப்பட்ட வடிவமாக விளங்குகின்றது. இப்பின்னணியில் இந்த நாடகம் அழகியல் பூர்வமான முறையில் படைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

க.பொ.த சாதாரணதரத்தில் நாடகமும் அரங்கியலும் பாடத்துறையில் தோற்றுகின்ற மாணவர்களது பயில் நிலை அநுபவத்தினை பெற்றுக்கொள்வதற்கான நாடகபாடமாக அவ் நாடகபாடம் கல்வித்திட்டத்தில் இணைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.









# சமூகப் பார்வையுடன் இலக்கியம் படைத்த எழுத்தாளர்

## அமரர் திக்கம் சிவயோகமலர் ஜெயக்குமார்

கலாபூசணம், ஏ.என்.எஸ்.திருச்செல்வம்



இவரது முதல் சிறுகதை ‘மகன் தேடிய வீடு’ 1984 ஆம் ஆண்டு சிந்தாமணியில் பிரசுரமானது. 1997 ஆம் ஆண்டு பாரிசில் உள்ள தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கப் பிரெஞ்சுக் கிளையினர் நடத்திய பாவலர் தெ.து.துரையப்பாப் பிள்ளை ஞாபகார்த்த அகில உலகச் சிறுகதைப் போட் டியில் இவரது ‘பிறந்த மண்’ சிறுகதை முதற்பரிசைப் பெற்றுக் கொண்டது.

பிரபல எழுத்தாளரும், ஈழத்தின் முதல் பெண் சரித்திர நாவலாசிரியையுமான திக்கம் சிவயோகமலர் ஜெயக்குமார் அமரத்துவம் அடைந்து கடந்த மாதம் 16 ஆம் திகதியுடன் மூன்று ஆண்டுகளாகி விட்டன. ஈழத்தின் பிரபல எழுத்தாளர்களில் தனியான முத்திரை பதித்துள்ள திக்கம் சிவயோகமலர் வடமராட்சிப் பகுதியிலுள்ள அல்வாய் மேற்கு திக்கம் என்னும் கிராமத்தில் பிறந்து வளர்ந்தவர்.

### வடமராட்சியின் பண்பாடு

வடமராட்சி மண்ணின் பண்பாட்டு விழுமியங்களை மையமாகக் கொண்டு, தனது பல படைப்புக்களை இந்த எழுத்தாளர் எழுதியுள்ளார். இவரது சிறுகதைகள் நாவல்களில் இந்த வடமராட்சிப் பாரம்பரியமும், சமூகவிழுமியங்களும் பரந்து காணப்படுகின்றன.
வடமராட்சியில் வழங்கும் மொழிநிலை, பேச்சு வழக்குகள் இவரது படைப்புக்களில் பிரதிபலிப்பது சிறப்பம்சமாகும்.
வடமராட்சியின் இலக்கியப் பாரம்பரியத்தில் திக்கம் சிவயோகமலர் ஜெயக்குமார் பெண் எழுத்தாளர் என்ற வகையிலும், ஈழத்தின் முதலாவது பெண் வரலாற்று நாவலாசிரியை என்ற வகையிலும் ஒரு மையப்புள்ளியாகக் கொண்டு பார்க்கத் தொடங்கலாம்.
ஈழத்தின் தரமான பெண் எழுத்தாளர்களில் ஒருவரான இவரது சிறுகதைகள் ஈழத்துச்சிறுகதை வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க முக்கியத்துவத்தைப் பெற்றுள்ளன. மறைந்த மூத்த எழுத்தாளர் கலாநிதி க.குணராசா (செங்கையாழியான்) எழுதிய ஈழத்துச் சிறுகதை வரலாறு என்னும் நூலில் அவை பதிவு செய்யப்பட்டுள்ளன.
சமகாலப் பிரச்சினைகள், சமூகப் பிரச்சினைகள், பெண்களின் வாழ்வியல் குடும்பக் கலாசாரங்கள் ஆகியன இவரது சிறுகதைகளில் பிரதிபலிக்கும். இவர் மண்வாசனைக்கு முதன்மையும், முக்கியத்துவமும் கொடுத்துள்ளார். சரளமான தமிழ் நடையும், இலக்கிய நயமும் கொண்டதாகவும் இவரது சிறுகதைகள் அமைந்துள்ளன.
சிறுகதைகள், குறுநாவல்கள், தொடர் கதைகளை எழுதிவந்தபோது வரலாற்று நாவல் ஒன்றை எழுதவேண்டுமென்ற ஆர்வம் அவரது மனதில் நீண்ட காலமாக இருந்தது. அத்துடன் இலங்கையில் பெண் எழுத்தாளர்கள் எவரும் வர லாற்று நாவல்களை எழுதியிருக்கவில்லை.

### வரலாற்றுடன் தொடர்புடைய நாவல்

இவர் வரலாற்றை ஒரு பாடமாகக் கொண்டிருந்தமையால் வரலாற்றுடன் தொடர்பான ஒரு நாவலை எழுதுவதற்கான கருவையும், வரலாற்று ஆதாரங்களையும் தேடி நான்கு ஆண்டுகால முயற்சியின் பயனாக “அடிமையின் காதலி” என்ற சரித்திர நாவலை எழுத முடிந்தது. இந்தவரலாற்று நாவல் “தினகரன்” வாரமஞ்சரியில் 1999 ஆம் ஆண்டு 21 அத்தியாயங்களாகத் தொடர்ந்து வெளிவந்தது.
இந்த வரலாற்று நாவல் என்றும் இல்லாத அளவுக்கு இவருக்குப் பாராட்டுக்களைப் பெற்றுத்தந்ததுடன், இலங்கையில் வாழும் மலாய் வம்சத்தினர் தமது வரலாறுபற்றிய உண்மையை இந்தநாவல் மூலம் அறிய வைத்தமைக்குத் தமது நன்றிகளையும் தெரிவித்துக் கொண்டனர்.
இந்த வரலாற்று நாவலே இவருக்கு முதலாவது பெண் வரலாற்று நாவலாசிரியை என்ற பெருமையையும் பெற்றுக்கொடுத்தது. 1950 ஆம் ஆண்டு பிறந்த இவர் தனது ஆரம்பக் கல்வியைத் தனது கிராமத்திலுள்ள திக்கம் மெதடிஸ்த மிசன் பாடசாலையில் மேற்கொண்டார். இந்தப் பாடசாலையில் 5 ஆம் வகுப்பு வரையுமே கொண்டிருந்ததால், ஆறாம் வகுப்பை பருத்தித்துறை மெதடிஸ்த மகளிர் உயர்தரக் கல்லூரியில் தொடர்ந்தார். இந்தக் கல்லூரியிலேயே ஜி.சீ.ஈ. உயர்தரம் முதலாம் வருடம் வரை கல்வி பயின்றார். பின்னர் மருதனார்மடம் இராமநாதன் மகளிர் கல்லூரியில் உயர்கல்வியை மேற்கொண்டார்.

### ஆசிரியத் தொழிலில் பிரவேசம்

பின்பு பல்கலைக்கழகத்தில் இணைந்து கலைப்பட்டதாரியானார். ஆசிரியத் தொழிலில் பிரவேசித்த இவர், தேர்தல் திணைக்களம், யாழ். தேசிய வீடமைப்புத் திணைக்களம் ஆகியவற்றில் கடமையாற்றி, அரச அதிகாரி பதவியில் இருந்து ஓய்வு பெற்றார். இவரது கணவர் அரச சேவையில் கணக்காளராகவும், கணக்காய்வாளராகவும் கடமையாற்றிய நாடறிந்த மூத்த ஊடகவியலாளர் எஸ்.ஜே. ஜெய க்குமார் என்பது குறிப்பிடத்தக்கது. இலக்கியத் தம்பதிகள் வரிசையில் இவரும் இடம் பெற்றுள்ளார்.
இவரது முதல் சிறுகதை “மகன் தேடிய வீடு” 1984 ஆம் ஆண்டு சிந்தாமணியில் பிரசுரமானது. 1997 ஆம் ஆண்டு பாரிசில் உள்ள தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கப் பிரெஞ்சுக் கிளையினர் நடத்திய பாவலர் தெ.து.துரையப்பாப்பிள்ளை ஞாபகார்த்த அகில உலகச் சிறுகதைப் போட்டியில் இவரது “பிறந்த மண்” சிறுகதை முதற்பரிசைப் பெற்றுக் கொண்டது.
மோல்டே தமிழ் கலை, கலாசார மன்றம் பத்தாவது வருட நிறைவையொட்டி உலகளாவிய ரீதியில் நடத்திய நாடக எழுத்துப் போட்டியில் இவரது “புலம் பெயரும் பாசங்கள்” நாடகப் பிரதி முதற்பரிசைப் பெற்றுக் கொண்டது. தேசிய கத்தோலிக்க எழுத்தாளர் சங்கம், கத்தோலிக்க சாகித்திய தினத்தை முன்னிட்டு ஞானார்த்த பிரதிபயவின் அனுசரணையுடன் நடத்திய அகில இலங்கைச் சிறுகதைப் போட்டியில் “பாவத்தின் சுவடுகள்” என் னும் இவரது சிறுகதை முதற்பரிசைப் பெற்றுக் கொண்டது.
1998 ஆம் ஆண்டு “பாவத்தின் சுவடுகள்” என்னும் இந்தச் சிறுகதை வீரகேசரியில் பிரசுரமானது. இந்தச் சிறுகதை கலாசார சமய அலுவல்கள் அமைச்சால் அவ்வாண்டின் சிறந்த சிறுகதையாகத் தெரிவு செய்யப்பட்டு, அப்போதைய கலாசார சமய அலுவல்கள் பிரதி அமைச்சர் ஏ.பி.சுரவீரவினால் விருதும் பணப் பரிசும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.
தினகரன் பத்திரிகையும் துரைவி நிறுவனமும் இணைந்து நடத்திய அகில இலங்கைச் சிறுகதைப் போட்டியில் இவரது “சாமேளம்” சிறுகதை பரிசைப் பெற்றுக் கொண்டது. இந்தச் சிறுகதைப் போட்டியில் பரிசு பெற்ற ஒரே பெண் எழுத்தாளர் என்ற பெருமையையும் பெற்றார். சிரித்திரன் சஞ்சிகை 1990 ஆம் ஆண்டு நடத்திய சித்திரச் சிறுகதைப் போட்டியில் இவரின் “வானம் பொய்க்கவில்லை” சிறுகதை முதற்பரிசைப் பெற்றுக் கொண்டது.
யாழ்.இலக்கிய வட்டமும் ஈழநாடு பத்திரிகையும் இணைந்து நடத்திய நாவல் போட்டியில் “கல்லுக்குள் ஈரம்” என்னும் இவரது நாவல் பரிசு பெற்றது. யாழ். இலக்கிய வட்டமும் முரசொலி பத்திரிகையும் இணைந்து நடத்திய குழந்தைப் பாடல் தொகுப்புப் போட்டியில் இவரது “தேட்டம்” குழந்தைக் கவிதைகள் தொகுப்புப் பரிசு பெற்றது.
சப்ரகமுவப் பல்கலைக்கழக மொழித்துறை சமூக விஞ்ஞான மொழிகள் பீடத்தால் இவரின் சிறுகதைகள், நாவல்கள், தொடர்கதைகள், சரித்திர நாவல், இலக்கியப்படைப்புக்கள் ஆய்வு செய்யப்பட்டுத் திக்கம் சிவயோக மலரின் இலக்கிய முயற்சிகள் பற்றிய ஆய்வு என்னும் நூல் வெளியிடப்பட்டுள்ளது.
மல்லிகை 43 ஆவது ஆண்டு மலர் (ஜனவரி 2008) இல் ஈழநாடு பத்திரிகையின் புனைகதைப் பங்களிப்பு என்னும் தலைப்பிலான ஆய்வுக் கட்டுரையில் திக்கம் சிவயோகமலர் ஜெயக்குமார் ஏழாந்தலைமுறைப் படைப்பாளியாகக் குறிப்பிடப்பட்டு இவரின் நல்ல சிறுகதைகளாக, “அவள் அகதி இல்லை”, “மயங்குகிறாள் ஒரு மாது” “மலர் தாவும் வண்டுகள்” ஆகியன வெளி வந்துள்ளன என விதந்துரைக் கப்பட்டுள்ளது.

### சிறுகதைகளும், குறுநாவல்களும்

வீரகேசரி, தினகரன், தினக்குரல், சுடர் ஒளி, ஈழநாடு, முரசொலி, சிந்தாமணி, ஈழமுரசு, தினமுரசு ஆகிய பத்திரிகைகளிலும் லண்டன் தமிழ் உலகம் சிரித்திரன், கற்பகம், அருள்ஊற்று, நமது தூது இதழ்களிலும் நூல் தொகுப்புக்களிலும் 75 இற்கு மேற்பட்ட சிறுகதைகளையும் குறுநாவல்களையும் எழுதியுள்ளார்.
றுக் மாங்கதன் என்னும் பெயர் கொண்ட ஏக புதல்வனின் தாயான இவர் தனது 64 ஆம் வயதில் மறைந்தது இலக்கிய உலகுக்குத் துரதிர்ஷ்டமே எனலாம். யாழ்ப்பாணத்து மக்களின் சமகாலப் பிரச்சினைகளை அவ்வப்போது வாசகர்களுக்கு வழங்கி வந்தவர் பெண் எழுத்தாளர் திக்கம் சிவயோகமலர் ஜெயக்குமார் என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வாறாக எழுத்தாளர் சிவயோகமலர் இலக்கிய உலகில் பல சாதனைகளைப் புரிந்து ஈழத்து இலக்கியத்துறையில் தனக்கென ஒரு அழியாப் புகழ் பெறும் இடத்தைப் பிடித்திருக்கிறார். இவரது சிறுகதைகள் நாவல்கள் ஆகிய படைப்புக்கள் இன்றைய நவீன இலக்கிய வளர்ச் சிக்குப் படிக்கல்லாகவும் அமைந்து காணப்படுகின்றன.
அவர் மறைந்தாலும் இவை காலத்தால் அழியாத சுவடுகளாக இலக்கிய வளர்ச்சியில் என்றும் தடம்பதிக்கும்.

## எமது கலைப் பாரம்பரியங்களை....

(19 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பலர், இவை அழியாமல் வாழ்வதற்குப் பங்களிப்புச் செய்து வருகின்றனர். என்னதான் சினிமா மோகம் ஏற்பட்டு நாகரிகம் வளர்ச்சி யடைந்தாலும், இத்தகு கிராமியக் கலைகளுக்கும் சமூகத்தில் ஒரு இடம் இருக் கும் என்பது எனது நம்பிக்கை.

கேள்வி- ஆலய உற்சவங்களில் தற்போது இசை நிகழ்ச்சிகளுக்கு முன்னுரிமை வழங்கு கின்றனர். இதிலும், சினிமாப் பாடல்களுக்கே அதிக முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. இது குறித்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?
பதில்- தற்போதைய கலாசாரச் சீரழிவுகளுக்கு இத்தகைய இசை நிகழ்ச்சிகளே முக்கிய காரணம். ஏனென்றால், இசை நிகழ்ச்சி என்ற போர்வையில் ஆபாசப் பாடல்களே பெரிதும் பாடப்படுகின்றன. ஆலயங்களில் உண்மையில்- கூத்துக்கள், கதாப் பிரசங்கங்கள், வில்லுப்பாட்டு, கச்சேரி போன்ற நிகழ்ச்சிகளையே நடத்தவேண்டும். ஆனால், அந்தப் பாரம்பரியம் இன்று அருகிவிட்டது. இசை நிகழ்ச்சி என்ற போர்வையில் சினிமாப் பாடல்கள் பாடும்போது சபையில் ஆட்டம், பாட்டம், கும்மாளம் அடிப்பார்கள் இளவட்டத்தினர். இதனைத் தடுத்து நிறுத்த ஆலய நிர்வா கம் முற்படுகையில், அங்கே கைகலப்பு ஏற்படுகிறது. அத்துடன், இவை யாவும் சிற்றின் பத்துக்கே வழி வகுக்கின்றன. இதனைத் தவிர்க்க வேண்டும் என்பது எனது தனிப்பட்ட ஆசை.

கேள்வி- உங்களுடைய கைவினைக் கலை பற்றிக் கூறுங்கள்...?
பதில்- பகுதி நேரமாகக் கைவினைப் பொருட் களையும் செய்து வருகிறேன். அராலி மத்தி- ஊரத்தி பேச்சியம்மன் ஆலயத்துக்குச் சிலை ஒன்றும் செய்து கொடுத்துள்ளேன். அத்து டன், எமது பிரதேச செயலக கலாசாரப் பிரிவுக்கு எனது முக அமைப்பு ஒன்றும் செய்து கொடுத் துள்ளேன். இப்பொருள்கள் செய்து தரும்படி யாராவது கேட்டால், செய்து கொடுப்பேன்.

கேள்வி- உங்களுடைய வாழ்வில் மறக்க முடியாத சம்பவம் என்று ஏதாவது உள்ளதா?
பதில்- ஆம். எனக்குக் கலை வித்துவத்தை யூட்டிய யாழ்ப்பாணம்- தொல்புரத்தைச் சேர்ந்த எனது குருவான மார்க்கண்டு அவர்களை என்னால் மறக்கவே முடியாது. எனக்குச் சங்கீதம் கற்றுத் தந்ததும் அவர்தான். மேடை களில் நான் காப்புப் பாடும் போதெல்லாம் அவரது நாமத்தையும் அதில் இணைத்துப் பாடி வருகிறேன். இது எனது குருவுக்கு நான் செய்யும் கைம்மாறு.

கேள்வி- உங்களுக்கு ஏனைய கலை ஆர் வங்களும் உண்டா?
பதில்- ஆம். மிருதங்கம், உடுக்கு, ஆர்மோனி யம் போன்ற இசைக் கருவிகளை நன்றாக வாசிப்பேன். கர்நாடக சங்கீதத்தில் நல்ல பாண்டித்தியம் உண்டு. பாடல்கள் இயற்றிப் பாடுவேன்.

கேள்வி- தற்போது அருகிச் செல்லும் கூத்துக் கலையைக் கட்டியெழுப்ப என்ன செய்யலாம் என்று நினைக்கிறீர்கள்?
பதில்- எழுத்துப் பிரதிகள் என் போன்ற கலைஞர் களிடம் உண்டு. நடிப்பதற்கும் கலை ஞர்கள் தயாராகவே உள்ளனர். ஆனால், பொருளாதார வசதி கள்தான் குறைவு. பொது வாக கலைஞர்கள் என்றாலே கஷ்டத்தில் உழல்பவர்கள் என்றுதான் கூறவேண்டும். இவர்களைக் கைதூக்கி விடுவதற்கு வசதி வாய்ப்புக்கள் படைத்தோர் முன்வர வேண்டும்.

கேள்வி-நீங்கள் ஒரு கலைஞர் என்ற ரீதியில், இன்றைய சந்ததியினருக்கு என்ன கூற விரும்பு கிறீர்கள்?
பதில்-வாழ்க்கை ஒரு கலை. வாழ்க்கையில் மிக முக்கியமாகக் கற்றுக்கொள்ள வேண்டிய விடயம், எப்படி வாழ்வது என்பதே. அந்த வழிவகைகளைக் கலைகள் கற்றுக் கொடுக் கின்றன. இதில் கிராமியக் கலையான நாட் டுக்கூத்துக்கு முக்கிய பங்குண்டு. இந்தக் கலைத்திறனைப் பெற்றுக்கொள் வதற்கு முதலில் பிள்ளைகள் ஒழுக்கசீலர்க ளாக இருக்க வேண்டும். அடுத்து, நன்றாகக் கற்க வேண்டும். கற்றவனுக்குச் சென்ற இட மெல்லாம் சிறப்பு. அந்தவகையில், நன்றா கக் கற்று நான்கு பேர் போற்றவும் நாடு வாழ்த்தவும் வாழ்வதுடன்இ எங்களது கலைப் பாரம்பரியங்களை அழிவுறாது காக்கவும் முன்வர வேண்டும். அதேநேரம், வாழ்க்கை யில் தன்னம்பிக்கை, என்னால் முடியும் என்ற சிந்தனையை வளர்க்க வேண்டும். இவை யெல்லாம் கிடைக்க இறைவனை அனுதின மும் பிரார்த்திக்க வேண்டும்.

## சி.வை. தாமோதரம்பிள்ளை நினைவரங்கம்









யாழ்ப்பாணத்தமிழ்ச்சங்கம்நடத்தியசி.வை. தாமோதரம்பிள்ளை நினைவரங்கம் கடந்த மாதம் (27 ஆம் திகதி) மாலை நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது. தமிழ்ச் சங்கத் தலைவர் பேராசிரியர் மனோன் மணி சண்முக தாஸ் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், வரவேற்புரையை தனித் தமிழ் ஆர்வலர் மின்பொறியியலாளர் நா.வை. குமரி வேந்தனும், வாழ்த்துரையை சிறுப்பிட்டி தாமோதரம் பிள்ளை நினைவு ஒன்றியப் பொருளாளரும், இலங்கை வங்கி மேற்றரக்கிளையின் ஓய்வுநிலை முகாமையாளருமான தி.செந்தில்நாதனும், தொடக்கவுரையை வட மாகாண தமிழ்ப் பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் கௌரி முகுந்தனும் ஆற்றினர்.
நிகழ்வில் சி.வை.தா. பற்றிய பதிவுகள் ஒரு மீள் நோக்கு என்ற பொருளில் யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறை முதுநிலை விரிவுரையாளர் செல்வஅம்பிகை நந்தகுமரன் சிறப்புரை ஆற்றினார். தேர்ந்தெடுக்கப்பட்ட பாடசாலைகளுக்கு கரிகணன் நிறுவனத்தினின் அன்பளிப்பாக நாவலர் திருவுருவச் சிலைகள் வழங்கப் பட்டன. சிலைகளை தமிழ்ச்சங்க பெருந் தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸ் உட்பட தமிழ்ச் சங்கத்தின் நிர்வாகிகள் வழங்கி வைத்தனர்.

## பஞ்சவன்னத்தூது

பா.பாலாஜினி

இணுவைச் சின்னத்தம்பிப் புலவரால் பாடப்பட்ட நூலே இந்த பஞ்சவன்னத்தூது என்ற இலக்கிய நூலாகும். இந்த நூலினுடைய பாட்டுடைத் தலைவனாக விளங்கும் கயிலாயநாதன் மீது சந்திரமோகினி எனும் ஓர் பெண் காதல் கொள்கின்றாள். அதன் காரணமாக அவள் கயிலாய நாதனிடம் வெண்ணிலா தென்றல் கிளி அன்னம் தோழி ஆகிய ஐவகை விடயங்களைத் தூது விடுகின்றாள். தலைவனும் அதற்குச் சம்மதித்து அவளைத் திருமணஞ் செய்வதாக அவளது தோழியிடம் செய்தி அனுப்புகின்றான். இதுவே இந்த நூலினுடைய கதைப்பொருளாக உள்ளது. வெண்ணிலா தென்றல் கிளி அன்னம் தோழி ஆகிய ஐவகை பொருள்களினைத் தூது அனுப்பிய தன் காரணமாகவே இது பஞ்சவன்னத் தூது எனும் பெயரையும் பெற்றது.
தமிழிலே தோன்றிய ஏனைய தூது இலக்கியங்களை விடவும் இந்தத் தூது இலக்கியமானது வேறுபட்ட முறையில் அமைந்து காணப்படுகின்றது.

1. தூது இலக்கியங்களில் வழமையாகப் பயன்படுத்தப்படும் கலிவெண்பாவுக்குப் பதிலாக இந்த நூலில் அகவல் விருத்தம் கலிப்பா முதலானவையும் பல்வேறு சந்தங்களும் விரவி வந்துள்ளன.
2. வழமையான ஒரு நூலில் ஒரு பொருளையே தூதாக அனுப்புவது வழமை. ஆனால் பஞ்சவன்னத்தூதில் ஐந்து பொருள்கள் தூதாக அனுப்பப்படுகின்றன.
3. தூதாக அனுப்பப்படுபவை பொதுவாக அஃறிணைப் பொருள்களாக இருப்பது மரபு. ஆனால் இத்தூது இலக்கியத்தில் உயர்திணையைச் சேர்ந்த தோழி அனுப்பப்படுவதோடு மற்றைய நான்கு அஃறிணைப் பொருள்களும் கூட அனுப்பப்படுகின்றன.
4. தூது இலக்கியங்களில் பெயர் சூட்டா மரபே காணப்படுகின்றது. அதாவது தலைவனுடையதோ தலைவியினுடையதோ பெயர் குறிப்பிடப்பட மாட்டாது. ஆனாலும் இந்த நூலில் இவர்கள் இருவரினதும் பெயர்கள் சுட்டப் படுகின்றன.
5. தூது நூல்களில் தலைவி தனது காதலை தலைவனுக்கு எடுத்துரைத்து அவனது மாலையைப் பெற்று வருமாறும் தூது அனுப்புவது வழக்கமாகும். ஆனால் இந்த நூலில் தூது செல்லும் தோழி தலைவியின் காதலை தலைவனிடம் எடுத்துரைத்துப் பின்னர், அவன் அவளைத் திருமணம் செய்து கொள்ளச் சம்மதித்தமையைத் தலைவியிடம் சென்று உரைத்து அவளைத் தேற்றும் பாங்கில் அமைந்து காணப்படுகின்றது.

இவ்வாறு தூது இலக்கியங்களினுடைய வழமையான மரபை நெகிழ்த்திப் புதியதோர் மரபை ஏற்படுத்தியவராக இதன் நூலாசிரியர் இணுவை சின்னத்தம்பிப் புலவர் விளங்குகின்றார். இப்படியாகப் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் காலப்பகுதிகளில் நடைபெற்று வந்த இலக்கிய வளர்ச்சிக்கு மேலும் ஒருபடிப்பங்களிப்பை இவர் நல்கியுள்ளார். இந்தப் பஞ்சவன்னத்தூது இலக்கியத்தைவிட இந்தக்காலப்பகுதியில் வேறு புலவர்களாலும் பல தூது இலக்கியங்கள் பாடப்பட்டுள்ளன. இதற்கு உதாரணமாக காங்கேசன்துறையிலுள்ள கண்ணியவளை எனும் தலத்தில் கோயில் கொண்டிருக்கும் குருநாதசுவாமியின் பேரில் பாடப்பட்டதாகும். தொடர்ச்சியாக தமிழ் நாட்டிலே தோன்றிய இலக்கிய நூல்களை மட்டும் கற்று அறிந்து வைத்திருக்கின்ற நாம், எமது நாட்டில் தோன்றிய இவ்வாறான இலக்கிய நூல்களையும் அறிந்திருப்பது எமது கடமையாகும்.

# புராணபடன வித்தகர் சுதுமலை செ. கந்தையா உபாத்தியாயர்

இ. பேரின்பநாயகம்

இலங்கைத் தமிழ்ச் சமூகத்தின் வரலாற்றில் காலத்துக்குக் காலம் பல பண்பாட்டு நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்து வந்துள்ளது. அதிலும் குறிப்பாக ஈழம் வாழ் சைவர்கள் அந்நியப்படைகளின் ஆக்கிரமிப்புக்குள் அகப்பட்டு, அவற்றின் பிடியிலிருந்து மீண்டு புத்தூக்கத்தோடு தமது வாழ்வை செப்பனிட்டுள்ளனர். அந்த வகையில் பதினைந்தாம் நூற்றாண்டுகளுக்குப்பிற்பாடுஈழத்துச்சைவ மக்கள் எதிர்கொண்ட பண்பாட்டு நெருக்கடி போத் துக்கேயர், ஒல்லாந்தர் மற்றும் ஆங்கிலேய ஆக்கிரமிப்பாளர்களால் விளைந்த ஒன்று. பொருளாதார ஆக்கிர மிப்பாகத் தொடங்கிப் பண்பாட்டுச் சீரழிவு டன் தொடர்ந்த அர சியல் அட்டூழியமாக இந்த அந்நியர்களின் நுழைவு அமைந்தது.

இத்தகைய தலையீடு ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் பெருந்தாக்கத்தை ஏற்படுத்தியிருந்த நிலையில், தமிழ் மொழியையும் சைவத்தையும் காக்கப் புறப்பட்டவர் ஆறுமுக நாவலர். அவர் கைக்கொண்ட வழி முறைகளான கதாப்பிரசங்கம், புராணபடனம், திருமுறை ஓதுதல், கோயில் வழிபாடு, கோயில் பராமரிப்பு, சமயக்கல்விப் போதனை போன்ற பரந்துபட்ட மக்கள் செயற்பாடுகளை கிராம மட்டத்தில் பல பெரி யோர்களும் முன்னின்று நடத்தினார்கள். நாவலர் காலத்துக்கு பிற்பாடு இந்தச் சமயம் சார்ந்த கல்வி நடவடிக்கைகளை ஊர்கள் தோறும் பல சமயத் தொண்டர்கள் தொடர்ந்தனர். அந்த வகையில் சுதுமலைக் கிராமத்தில் தமிழ் ஆசிரியர் செல்லையா கந்தையாவின் புராண படனத்தை முன்னிறுத்தி அதன் வளர்ச்சியிலும் – செயற்பாட்டிலும் பெரும் பங்கு ஆற்றியிருந்தார்.

யாழ்ப்பாணம் சுதுமலை புவனேஸ்வரி அம்மன் ஆலயச் சூழலில் அன்றைய ஆலயப் பிரதம குரு சிவஸ்ரீ தி.பொன்னுச்சாமி குருக்களின் வழிகாட்டலில் புராண படனம் தலைமுறை தலை முறையாக நடைபெற்று வருகிறது. குருக்களின் ஆதரவோடு தமிழ் இலக்கிய இலக்கணங்களில் சைவசமய அனுட் டானங்கள், விரதங்கள் கோயில் வழிபாடு, சைவசமயப் போசனம் என்பவற்றை கைக்கொண்டு வாழ்ந்த செல்லையா கந்தையா ஆசிரியர் புராண படனங்களுக்கு பயன் சொல்லும் வித்தையை நன்கு பயின்று அந்தப் பணியில் தம்மை ஈடுபடுத்திக்கொண்டார்.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கம் முதல் பயில்நிலையில் இருந்த புராண படனம் சிவஸ்ரீபொன்னுச்சாமி குருக்களின் புத்திரர் சிவஸ்ரீ தியாகராசா ஐயர் மற்றும் மருமகன் பிரம்மஸ்ரீ மகேஸ்வரக்குருக்கள் காலத்திலும் தொடர்கிறது. புராணபடன வித்தகர் செ.கந்தையா கந்த புராணம், பெரியபுராணம், திருவிளையாடல்புராணம், திருவாதவூரடிகள் புராணம், பிள்ளையார் கதை, திருமுறைகள், தேவார திருவாசகம் எனப் பலவாறான சைவசமய இலக்கியங்களோடு ஈடுபாடு கொண்டு, சுதுமலை அம்மன் ஆலயம், சிவன் ஆலயம், மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயம், தாவடிப் பிள்ளையார் கோயிலில், இணுவில் பரராசசேகரப் பிள்ளையார் கோயில், இணுவில் கந்த சுவாமி கோயில்களில் புராணங்களுக்குப் பயன் சொல்லும் பணியை ஆற்றலானார்.

யாழ்ப்பாணக் கலாசாரம் கந்தபுராண கலாசாரம் எனப் பெருமையோடு பண்டிதமணி கணபதிப்பிள்ளையைக்கூறுவதற்குக்காரணமாக இருந்தவர்கள் யாழ்ப்பாணத்து கிராமங்களில் காணப்படும் ஆலயச் சூழல்களில் புராண படனத்தை முன்னின்று நடத்திய பெருமக்களே ஆவர். அந்த வகையில் சுதுமலைக்கிராமத்தில் மூன்று பெரியோர்கள் 20ஆம் நூற்றாண்டின் பின் அரை இறுதிக் காலங்களில் புராணபடனத்தோடு தம்மை ஐக்கியமாக்கிக் கொண்டார்கள். பெரியதம்பி ஆசிரியர், துரை ஐயா மற்றும் செ.கந்தையா ஆசிரியர் ஆகியோர் குறிப்பிடத்தக்க பணிகளை இத்துறையில் ஆற்றித் தமது சமூக மக்களின் சமயத் தெளிவுக்கும், வழிபாட்டுக்கும் உறு துணையாக இருந்தார்கள்.

இளமையிலேயே தமிழ்க்கல்வி மீதும், சமயக்கல்வி மீதும் ஆர்வம் கொண்டு தீட்சை பெற்று, வெள்ளை வேட்டி சால்வையுடனும் திரிபுண்டரமாகத் தரித்த திருநீற்றுப்பூச்சுடனும் சந்தனம் குங்குமப்பொட்டுடனும் நாள் தோறும் சுதுமலை அம்மன் கோயில் வழிபாடும் தொண்டும் திருமுறை ஓதுதலும் புராணங்களுக்கு பயன் சொல்லுதலும் என்று பணிசெய்து வாழ்ந்த பெரியவர் அமரர் செ.கந்தையா உபாத்தியாயர்.

விசேட நாள்களில் சுதுமலை ஈஞ்சடி வைரவர் கோயிலில் பாடசாலைகளில் சமய வழிபாடுகள் பற்றி உரையாற்றுவதும் திருமுறைகள் ஓதப்பழக்குதலும் பஜனை நிகழ்வுகளை ஊக்குவிப்பதும், திருஊஞ்சல், திருவெம்பாவை, பிள்ளையார் கதைப்பாடல்கள் பாடி மக்களை ஊக்கம் கொள்ளச் செய்வதும் என வாழ்ந்து மறைந்தவர் கந்தையா ஆசிரியரே. பயிற்றப்பட்ட ஆசிரியராக, பிரவேச பண்டிதராக, ஆசிரிய ஆலோசகராக, அதிபராகத் தமது கல்விப்பணியை மேற் கொண்டவர். சுதுமலை சின்மய பாரதி வித்தியாசாலையில் ஆசிரியராகவும், சுதுமலை வடக்கு தமிழ்க் கலவன் பாட சாலையில் அதிபராகவும் கடமை ஆற்றி ஓய்வுபெற்றவர்.

சுதுமலை வடக்கு தமிழ்க்கலவன் பாடசாலை அதிபராக 1970களில் கடமை ஆற்றிப் பல்வேறு அபிவிருத்திப் பணிகளை மேற் கொண்டதோடு, சுதுமலை இந்து சமய விருத்திச்சங்கத்தின் உறுப் பினராகவும், சுதுமலை ஈஞ்சடி வைரவர் கோயில் திருப்பணிச்சபைத் தலைவராகவும் பரிபாலனசபை உறுப்பினராகவும் பல தொண்டுகளை புரிந்தார். தாம் சார்ந்த மொழியின் இலக்கியங்கள் வாயிலாக தம் சமூகத்தின் பண்பாட்டு எழுச்சிக்கு உரம் கொடுப்பவராக முன் வகித்து, தம் மக்களையும் தம் பண்பாட்டு வலயத்துக்குள் ஆட்கொண்டு, தனது முன் னோர் காட்டிய வழியில் - குறிப்பாக நல்லை நகர் ஆறுமுகநாவலர் வழியில் தம் கடமை செய்து வாழ்வாங்கு வாழ்ந்தவர் அமரர் செ. கந்தையா. அன்னாரின் அளப்பெரிய தொண்டு சைவத்துக்கும் தமிழ்க் கல்விக்கும் ஒரு வரப்பிரசாதம் என்றால் மிகையாகாது.



# இந்து மதம் வலியுறுத்தும் இருபாலார் ஒழுக்கம்



சக்தீதாசன்

ஒவ்வொரு மதமும், மனிதர்கள் வாழ வேண்டிய முறைமைகளைக் கற்றுக்கொடுக்கின்றன. வாழ்வியல் பண்புகளை எடுத்துரைக்கின்றன. இதனால்தான் மதம், மார்க்கம் என்றும் அழைக்கப்படுகிறது. மார்க்கம் என்றால், வழி என்று பொருள்படும். இங்கே, இந்து மதம் கற்பிக்கும் ஆண்- பெண் இருபாலார் ஒழுக்கம் பற்றி நோக்குவோம்.

ஒழுக்கம், உயிரிலும் மேலானது. அனைவருக்கும் பொதுவானது. அந்தவகையில், ஒழுக்கத்தின் அவசியத்தை வலியுறுத்துகிறது இந்து மதம். திருமணத்தில் பெண்ணுக்குக் கழுத்தில் மாங்கல்யம் கட்டுகின்றனர். அதே போன்று, ஆணுக்குக் காலிலே மெட்டி அணிவித்தனர் அன்று. இதற்குக் காரணம் உண்டு. நிமிர்ந்து நடந்துவரும் ஆடவனின் கண்ணுக்கு எதிரே நடந்துவரும் பெண்ணின் கழுத்தில் மாங்கல்யம் இருப்பது தெரியவேண்டும். அவள் அந்நியன் மனைவி என்று தெரிந்து அவன் ஒதுங்கிவிட வேண்டும். தலைகுனிந்து நடக்கும் பெண்ணின் கண்களுக்கு எதிரே வரும் ஆடவனின் கால் மெட்டி தெரியவேண்டும். அவன் திருமணமானவன் எனத் தெரிந்து அவள் ஒதுங்கிவிட வேண்டும். இன்று இந்த ஆபரணங்களுடன் வலம் வரும் ஆடவரையும் நங்கையரையும் காண்பது அரிது. அதிலும், மெட்டி அணிந்துவரும் ஆடவரைக் காண்பது மிக மிக அரிது. ஆண்கள் மெட்டி அணியும் கலாசாரம் மறைந்துவிட்டது என்றே கூறலாம்.

வீடோ, நாடோ சிறந்தோங்க- அதனை ஆட்சி செய்யும் பெண்கள் ஒழுக்கமாக இருக்க வேண்டும். நேர்மையாக நடக்க வேண்டும். அப்போதுதான் அங்கே நல்லாட்சி நிலவும். இதனை, மனைமாட்சி என்று அழகாகச் சொன்னார் வள்ளுவர். பொதுவாக, குடும்பத்தைக் கட்டிக் காக்கும் பொறுப்புடையவள் பெண் தான் என்பதால், மானத் தையும் கற்பையும் பெண்ணுக்கே அதிகம் வலியுறுத்தியது இந்து மதம். பெண்ணுக்குரிய கடமைகளையும், ஆணுக்குரிய கடமைகளையும் வகுத்தளித்து, அமைதி யுடன் குடும்பங் கள் திகழ்வதற்கு வித்திட்டது.



இவ்வாறு ஒரு பெண் உத்தமியாக இருக்க வேண்டும்- கற்புடன் இருக்கவேண்டும் என்பதை வலியுறுத்தும் இந்து மதத்தில், புராண- இதிகாசங்களில் வரும் எந்த நாய கியும் பத்தினியாகக் காட்சியளிப்பாள். சீதை, மண்டோதரி முதலானோரை இதற்குச் சான்றாகக் குறிப்பிடலாம். ஒரு பெண்ணும் காளையும் சந்தித்து ஒருவரையொருவர் காதலிக்கலாம், மணம் செய்து கொள்ளலாம். காதல் நிறைவேறவில்லை என்றால், பிரிவால் ஏங்கலாம்; துயரத்தால் விம்மலாம்; இறந்தும் போகலாம். ஆனால், திருமணமான ஒரு பெண்ணுக்கு பரபுருசன் மீது ஆசை என்பது கிஞ்சித்தும் வரக்கூடாது. தாலி என்பது பெண்ணுக்குப் போடப்படும் வேலி; அதை அவள் தாண்டமுடியாது என்று இடித்துரைக்கிறது இந்து மதம்.

திருமணத்தின்போது அக்கினி வளர்ப்பது, திருமணமாக முன் வேறு ஆடவன் அவள் உடலைப் பார்த்து ஆசை கொண்டிருந்தால், அக்கினியால் அவளைப் பரிசுத்தமாக்க என்கிறது இந்து மதம். அம்மி மிதிப்பது, என் கால் உன் மீது தான் இருக்கும்; உன்னைத் தாண்டிப்போகாது என்று சத்தியம் செய்வதற்கே எவரும் அருந்ததி பார்ப்பது, அருந்ததியைப்போல் நிரந்தரக் கற்பு நட்சத்திரமாக நின்று மின்னுவேன் என்று பெண் ஆணையிடுவதே. பால்-பழம் சாப்பிடுவது, பாலோடு சேர்ந்த பழம் போலச் சுவை பெறுவோம் என்று கூறுவதே. பூ மணம் இடுவது, பூமணம்போலப் புகழ் மணம் பரப்புவோம் என்றே. மாங்கல்யத்தில் மூன்று முடிச்சுப் போடுவது, ஒரு முடிச்சு கணவனுக்கு அடங்கியவளென்றும், மறு முடிச்சு தாய் தந்தையருக்குக் கட்டுப்பட்டவளென்றும், மூன்றாவது முடிச்சு தெய்வத்துக்குப் பயந்தவளென்றும் உறுதிகொள்ள வைப்பதே என்று அடுக்கடுக்காய் பெண் ஒழுக்கம் பற்றி இந்து மதம் கூறுகிறது.

மேலும், கற்புடைய பெண் நினைத்தால், கடவுள் களையே குழந்தைகள் ஆக்கலாம் என்று போதிக்கும் அனுசூயையின் கதை; கற்புடைய பெண் விரும்பினால் சூரியனையே உதிக்காமல் செய்யலாம் என்று கூறும் நளாயினியின் கதை, கற்புடைய பெண் மரணத்தையும் வெல்லுவாள் என்று கூறும் சாவித்திரியின் கதை; நியாயமற்ற முறையில் கணவன் கொல்லப்பட்டதற்கு மதுரையை எரித்த கண்ணகி கதை என ஆயிரம் கதைகளைக் கூறி, பெண்களின் ஒழுக்கத்தை வலியுறுத்துகிறது இந்து மதம். கற்பு என்றொரு வேலி போட்டு, குடும்பங்களைக் கோவில்களாக்கி- அதில் பெண்களைத் தெய்வங்களாக்கிக் கொண்டாடிய இந்து மதம். பெண்களுக்கு மட்டுமல்ல- ஆண்களுக்கும் ஒழுக்கம் வேண்டும், கற்பு இருக்க வேண்டும் என்றும் வலியுறுத்துகிறது. இதற்குச் சான்றாக, ஓர் ஆடவன் எப்படி இருக்கவேண்டும் என்று இராமனை உதாரணமாக்கியுள்ளது. நல்ல மகனாக, அன்புச் சகோதரனாக, சிறந்த மாணவனாக, பிரிய நண்பனாக, காதல் மணாளனாக, கடமை தவறாதவனாக, தேர்ந்த தந்தையாக என வாழ்ந்து காட்டினான் இராமன். ஒழுக்கத்திலும் தர்மத்திலும் மேம்பட்டு விளங்கினான்.

ஏனைய மதங்கள், மாந்தர்களை மனிதர்கள் ஆக்குகின்றன. இந்து மதமோ- மனிதர்களைத் தெய்வங்கள் ஆக்கும் சிறப்புப் பெற்றது. அன்பே கடவுள் என்றுரைத்து, அனைத்து மதத்தவரையும் அது அரவணைத்துச் செல்லும் பெற்றி வாய்ந்தது. ஆண்- பெண் ஒழுக்கத்தை வலியுறுத்தி, மனுக்குலம் சிறந்தோங்க வழியுரைத்தது. இந்துவாகப் பிறந்தோரை இந்து மதம், பெருமை கொள்ள வைக்கிறது.

ஆனால், இன்றைய இந்து மதத்தவர்களின் வாழ்க்கை முறை அடியோடு மாறிவிட்டது. அன்புக்கும் கருணைக்கும் அவர்கள் மத்தியில் பஞ்சம் ஏற்பட்டுவிட்டது. ஒழுக்கமுடையோரைக் காண்பது அரிதாகிவிட்டது. இவர்களுடைய மனமாற்றத்தின் விளைவுகளைத்தான் நாம் தற்போது அறுவடை செய்துகொண்டிருக்கிறோம்.



# தமிழ்தாசனின் நூல் வெளியீடு

கடந்த மாதம் 29 ஆம் திகதி ஞாயிறன்று மீசாலை மாவடிப் பிள்ளையார் ஆலயத்தில் மிருசுவில் தமிழ்தாசனின் 'காகிதக் கப்பல்கள்' சிறுகதைத் தொகுப்பு வெளியீட்டு விழா இடம்பெற்றது.

இதில் முதன்மை விருந்தினராக தென்மராட்சி உதவிப் பிரதேச செயலர் செல்வி ரஞ்சனா நவரத் தினம் கலந்து கொண்டார். அவர் நூலின் முதல் பிரதியை சமூகமாமணி அ.கிருபாகரனுக்கு வழங்கினார். நூலாசிரியர் நன்றியுரை வழங்கினார்.

# எளிமையின் வடிவமான மருத்துவர் குமாரசாமி மகேசன்




'நெரு நல் உளன் ஒருவன் இன்றில்லையென்னும் பெருமையுடைத்து இவ்வுலகு' என்பது வள்ளுவர் வாய்மொழி. 'வீற்றிருந்தாள் அன்னை வீதிதனில் இருந்தாள் நேற்று இருந்தாள். இன்று வெந்து நீறானாள்" எனத் துறவியாகிய பட்டினத்தாரே மனம் வருந்துகிறார்.

அமரர் மருத்துவர் புத்தூர் குமாரசாமி மகேசன் ஐயா பத்தாண்டுகளுக்கு மேற்பட்ட காலம் யாழ். போதனா வைத்திய சாலையில் மருத்துவ நிபுணராகப் பணியாற்றியவர். நோயாளிகளுடன் இன் முகத்தோடு இனிய வார்த்தைகள் பேசி நோய்க்குத் தகுந்த சிகிச்சை கொடுத்து, மன துக்கு ஆறுதல் அளித்த பெருந்தகை. ஓய்வின் பின்னரும் பல்வேறு தனியார் வைத்தியசாலைகளிலும் பணியாற்றிப் பலருக்கும் உதவியவர். தனது எழுபதா வது வயதில் காலமானது சமூகத்துக்குப் பேரிழப்பாகும்.

புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி, யாழ்.சென் ஜோன்ஸ் கல்லூரி, பேராதனைப்பல்கலைக்கழகம் ஆகியவற்றின் பழைய மாணவரான இவர், கலைகளிலும் ஈடுபாடு உள்ளவர். கல்லூரி வெள்ளிவிழாவில் நடனமாடித் தனது திறமையை வெளிப்படுத்தியவர்.

புத்தூர் கொண்ட வள்ளல் மழவராயர் பரம்பரையில் அரண்மனை போலமைந்த பெருமாளிகையில் பிறந்து வளர்ந்தாலும் அவருடைய எளி மையும் - இனிமையும் மக்கள் சேவையும் எல் லோர் மனங்களிலும் அவரை நிலை பெறச் செய்தது.

போர்க்காலச் சூழலில் அவரது வீடு அழிக்கப்பட்ட பின்னர், யாழ்.நாவலர் வீதியில் புதிய வீடமைத்து தனது இறுதி நாள்களை இறப்புவரை கழித்தார்.

'மக்கள் பணியே மகேசன்' பணியாக வாழ்ந்த அமரரின் ஆத்ம சாந்திக்காக ஆண்டவனைத் தொழுது இறைஞ்சுவோம்.

செ.விசுவலிங்கம்.

13-2-2017 டெய்லிமிரர் ஆங்கில நாளேட்டின் ஆசிரியர் தலையங்கம் இது.




# பல்கலை வளாகங்களை முடக்குவதை நிறுத்துங்கள்

தமிழில் : கஜிவசி

இலங்கையில் மருத்துவப் பட்டத்தை வழங்கக்கூடிய ஒரேயொருதனியார்பல்கலைக்கழகமான அறிவியல் மற்றும் மருத்துவத்துக்கான தெற்காசிய கல்வியகம் (சைட்டம்) மீண்டும் செய்திகளில் அடிபட ஆரம்பித்துள்ளது. மீண்டும் ஒரு தடவை, தவறான காரணங்களை முன்வைத்து இந்தத் தனியார் மருத்துவ வளாகத்தை மூடிவிடும்படி மாணவர் ஒன்றியங்களும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கமும் அரச பல்கலைக்கழக ஆசிரியர் மற்றும் கல்விசாரா ஊழியர் சங்கங்களும் அரசிடம் கோரிக்கை வைத்துள்ளன. அரச மருத்துவ அதிகாரிகள் சங்கமும் சில அரச சார்பற்ற நிறுவனங்களும், இந்த தனியார் பல்கலைக்கழகத்தின் மருத்துவப் பட்டக் கல்வியை இலவசக் கல்விக்கான அச்சுறுத்தலாகப் பார்க்கின்றன. அரசின் இலவச கல்வித் திட்டத்தின் ஊடாக இலவச மருத்துவக் கல்வியைப் பெறும் மாணவர்களும் அப்படியே.

### போதனா வைத்தியசாலை இல்லை

தனக்கெனத்தனியானபோதனா வைத்தியசாலை ஒன்று இல்லாமல் உலகில் இயங்கும் ஒரே யொரு மருத்து வப் பல்கலைக்கழகம் சைட்டம்தான் என்று தொழிற்சங்கவாதிகள் கூறுகின்றார்கள். அது பச்சைப் பொய்யானது. இந்தப் பல்கலைக்கழகம் மருத்துவப் பட்டத்தை வழங்குவதற்கான அனுமதியைக் கொடுத்துவிட்டு இப்போது சைட்டத்தை எதிர்ப்பவர்களுக்கு ஆதரவு வழங்குகின்றது கூட்டு எதிரணி. அரசின் இலவசக் கல்வித் திட்டத்திற்கு இந்தப் பல்கலைக்கழகம் ஓர் அச்சுறுத்தல் என்று அவர்களும்கூடக் குரல் எழுப்புகிறார்கள். தமது ஆட்சியில் இந்தப் பல்கலைக்கழகத்திற்கான அனுமதியை வழங்கிய கூட்டு எதிரணியினர் தற்போது அதே பல்கலைக்கழகம் மருத்துவப் பட்டத்தை வழங்குவதை எதிர்ப்பதன் பின்னால் உள்ள நோக்கம் குறித்துக் கேள்வியெழுப்ப வேண்டியுள்ளது. சைட்டம் பல்கலைக்கழகம் மருத்துவப் பட்டத்தை (எம்.பி.பி.எஸ்) வழங்குவதற்கான அனுமதியை ஓகஸ்ட் மாதம் 30ஆம் திகதி 2011ஆம் ஆண்டு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவழங்கியிருக்கிறது. அதுவும்கூட கூட்டு எதிரணியின் ஆட்சிக் காலத் திலேயேதான் நடந்திருக்கிறது.

### வீதியில் மாணவர்கள்

அப்படியிருந்தபோதும் ஆயிரக்கணக்கான மாணவர்கள் வீதியில் இறங்கிசைட்டத்தைஎதிர்த்து போராட்டத்தில் குதித்தது 2015 ஒக்டோபர் மாதத்திலேதான். அந்தப் பல்கலைக்கழகத்தை மூட வலியுறுத்தினார்கள் அவர்கள். ஆர்ப்பாட்டத்தைக்கலைக்கபொலிஸார் கண்ணீர்ப் புகைக் குண்டுகளையும் நீரைப் பீய்ச்சியடிக்கும் வாகனங்களையும் பயன்படுத்த வேண்டி வந்தது. அதன் பின்னர் 12 முதல் 15 மாணவர்கள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்கள்.

ஒரு கட்டத்தில், சைட்டம் மருத் துவக் கல்லூரியில் இருந்து வெளியேறும் மாணவர்களைத் தாம் பதிவு செய்யப்போவதில்லை என்று இலங்கை மருத்துவ சபை அறிவித்தது. அதற்காக அது தெரிவித்த காரணங்களில் ஒன்று, தடயவியல் மருத்துவத்தில் சைட்டம் மாணவர்களுக்குப் பரிச்சயம் ஏதும் இல்லை என்பதுடன் அவர்கள் தமது சிகிச்சை நிலையப் பயிற்சிகளை நிறைவு செய்யவில்லை என்பதுமாகும். இவை நியாயமான காரணங்களேதான். 2015 டிசெம்பர் மாதத்தில், சைட்டம் மாணவர் ஒருவரால் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில், சைட்டம் மாணவர்களுக்கு அவிசாவளை ஆதார வைத்தியசாலை மற்றும் கடுவெல சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைப் பிரிவு என்பவற்றில் சிகிச்சை நிலையப் பயிற்சிகளை வழங்கும் பணியை சுகாதார அமைச்சுப் பொறுப்பேற்றுக்கொண்டது. இதன் பின்னர் தமது பிரச்சினைக்குத் தீர்வு காணும் முகமாக சைட்டம் மாணவர் ஒருவர் மேன்முறையீட்டு நீதிமன்றில் மனு ஒன்றைத் தாக்கல் செய்தார். இலங்கை மருத்துவச் சபை தன்னைப் பதிவு செய்ய மறுத்ததற்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றில் ஒரு வழக்கைத் தாக்கல் செய்தார். அந்த வழக்கில் இரு தரப்பு நியாயங்களையும் கேட்டதன் பின்னர், சைட்டம் மருத்துவ மாணவர்களின் தொழில்முறைப் பதிவை அனுமதித்ததுடன், தனது தீர்ப்பில் சைட்டம் மருத்துவக் கல்லூரியின் மருத்துவப் பட்டத்தை நிறைவு செய்து வெளியேறும் மருத்துவ மாணவர்களின் தொழில்முறைப் பதிவைச் செய்யவேண்டும் என்றும் இலங்கை மருத்துவச் சபைக்கு அறிவுறுத்தியது.

இந்தத் தீர்ப்புக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்யப்போவதாகப் பல்கலைக்கழக மாணவர்கள் அச்சுறுத்தினார்கள். இந்தப் பிரச்சினைகள் அனைத்தையும் சமாளிக்கும் விதமாக 8 பல்கலைக்கழகங்களின் மருத்துவ வளாகத் தலைவர்கள் இணைந்து ஒரு முன்மொழிவைக் கொடுத்தார்கள். சுருக்கமாகச் சொன்னால் அதில், இலங்கையின் மருத்துவக் கல்விக்கான ஆகக்குறைந்த அடிப்படைத் தராதரங்களின் தேவை குறித்து வலியுறுத்தியிருந்தார்கள். அத்தோடு அந்த அடிப்படைத் தராதரத்தைஉறுதிப்படுத்திப் பேணும் வகையிலான செயல்திட்டம் ஒன்றையும் முன்மொழிந்தார்கள்.

இந்தத் தரவுகளைப் பாருங்கள், இலங்கை, மருத்துவர்கள் பற்றாக்குறையை தீவிரமாக எதிர்கொள்கிறது. பேராசிரியர் லலித மெண்டிஸின் ஆய்வின்படி ஒரு லட்சம் சனத்தொகைக்கு 55.2 மருத்துவர்களே இருக்கின்றனர். அதாவது 1811 பேருக்கு ஒரு மருத்துவர். அதுவே மருத்துவ வல்லுநர்கள் என்று வரும்போது இன்னும் மோசமாக உள்ளது. அந்த வீதம் 4.8 ஆக உள்ளது. அதாவது 25,000 பேருக்கு ஒரு மருத்துவநிபுணர். இலங்கைப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் புள்ளிவிவரப்படி 2016ஆம் ஆண்டில் பல்கலைக்கழகம் புகும் தகுதியைப் பெற்றவர்களில் 14.34 சதவீதம் பேரே பல்கலைக்கழகங்களுக்குள் புக முடிந்தது என்று சொல்கிறது. கல்வி அமைச்சின் செயலாளரான மருத்துவர் தாரா டிமெல், 3 பாடங்களிலும் ஏ சித்தி என்ற உயர் பெறுபேறு பெற்ற 164 பேர் மட்டுமே மருத்துவக் கல்விக்குள் புகமுடிந்திருக்கிறது. அதேநேரம் 2 ஏ, 1 பி எடுத்த 1464 பேரால் பல்கலைக்கழகத்திற்குள் நுழைய முடியவில்லை என்று 2009 ஆம் ஆண்டிலேயே சொல்லி யிருந்தார்.

### தேவைக்கேற்ப மருத்துவர்கள் இல்லாத நிலை

நாட்டின் தேவைக்கேற்ற மருத்துவர்களைத் தயாரித்தளிக்கும் வல்லமையை அரச பல்கலைக்கழகங்கள் கொண்டிருக்கவில்லை. மருத்துவம் படிக்கக்கூடிய தகுதி இருக்கும் மாணவர்கள் பலரால் அதற்குள் நுழைய முடியவில்லை. இதனைச் சரிப்படுத்த யாராவது உதவ வேண்டியிருக்கிறது.

அத்தோடு நாட்டின் இலவசக் கல்விக்கு வேட்டு வைக்கப்படப் போகிறது என்கிற கூச்சலையும் தாங்க முடியவில்லை. நாம் ஏற்கனவே தனியார் பாட சாலைகளையும் தனியார் பல்கலைக்கழகங்களையும் கொண் டிருக்கிறோம். என்றாலும் இலவசக் கல்வி தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது.

எனவே, நாம் வளர்ச்சியடைவது தொடர்பான உணர்வைப் பெறுவதற்கான நல்ல தருணம் இது. வளாகங்களை முடக்கும் முடித்து வைப்பதற்கான காலமும்கூட.



இந்தப் பல்கலைக்கழகம் மருத்துவப் பட்டத்தை வழங்குவதற்கான அனுமதியைக் கொடுத்து விட்டு இப்போது சைட்டத்தை எதிர் பவர்களுக்கு ஆதரவு வழங்குகின்றது கூட்டு எதிரணி. அரசின் இலவசக் கல்வித் திட்டத்திற்கு இந்தப் பல்கலைக்கழகம் ஓர் அச்சுறுத்தல் என்று அவர்களும்கூடக் குரல் எழுப்புகிறார்கள்.




மற்றவர்களை அறிந்து அவர்களுக்கேற்ப நடந்து கொண்டு காரியம் சாதிக்கும் திறமை உடைய விருச்சிக ராசியினரே! இந்த கால கட்டத்தில் ராசிநாதன் செவ் வாய் பஞ்சம பூர்வ புண்ணிய ஸ்தானத்தில் சஞ்சாரம் செய்கிறார். சாமர்த்தியமான பேச்சின் மூலம் காரியவெற்றி உண்டாகும். எந்த ஒரு வேலையிலும் எதிர் பார்த்த ஆதாயம் கிடைக்கும். ராசிக்கு 5இல் சுக்கிரன் சஞ்சாரம் இருப்பதால் உங்களுடன் பக்கபலமாக ஒருவர் இருந்து தேவையான உதவிகளைச் செய்வார். நண்பர்கள் மூலம் புதிய வசதிகள் கிடைக்கப் பெறுவீர்கள். தொழில் ஸ்தானாதிபதி சூரியன் தைரிய ஸ்தானத்தில் சஞ்சாரம் செய்கிறார். தொழில், வியாபாரத்தில் இருந்த மந்த நிலை மாறும்.

தேவையான பணவசதி கிடைக்கும். உத்தி யோகத்தில் இருப்பவர்கள் முன்னேற்றம் காண்பார்கள். புதிய பொறுப்புகளும் அதனால் வருமானமும் இருக்கும். எதிர்ப் புகள் அகலும். குடும்பாதிபதி குரு விரயஸ்தானத்தில் சஞ் சரிக்கிறார். குடும்பத்தில் சுப காரியம் நடக்கும். பூமி மூலம் லாபம் கிடைக்கும். சகோதரர்களால் நன்மை உண்டாகும். வாழ்க்கைத் துணைக்கு தேவையான வசதிகள் செய்து தருவீர்கள். வீட்டுக்குத் தேவையான பொருள்களை வாங் குவீர்கள். ராசியாதிபதி செவ்வாய் சஞ்சாரம் எல்லா வகையிலும் நன்மையையும் மகிழ்ச்சி யையும் தரும். பெண்களுக்கு திறமையான பேச்சின் மூலம் காரியவெற்றி உண்டாகும். எதிர் பார்த்த பணவரவு இருக்கும். பொறுப்புகள் அதி கரிக்கும்.

கலைத்துறையினர் கிடைத்த வாய்ப்பை தவறவிடாமல் சாதகமாக பயன்படுத் திக் கொள்ள வேண்டியது அவசியம ாகிறது. எதிலும் சாதகமான பலன் கிடைக்கும். பயணங்கள் செல்ல நேரிடலாம். மனத்திருப்தியுடன் செயலாற்றுவீர்கள். புத்திசாதுர்யம் மூலம் காரிய வெற்றி கிடைக்கும். கொடுத்த வாக்கை நிறைவேற்றுவதன் மூலம் மற்றவர்களிடம் மதிப்பு கூடும். அரசியல்துறையினருக்கு பாராட்டுக் கிடைக்கும். மனக்கவலை ஏற்படும். உடல் சோர்வு உண்டாகும். ஆன்மிக நாட்டமும், மன தைரியமும் உங்களுக்கு உற்சாகத்தைக் கொடுக்கும். கட்சியில் முன்னேற்றம் காண புதிய திட்டங்களை தீட்டுவீர்கள். மாணவர்களுக்கு கல்வியில் எதிர்பார்த்த வெற்றி கிடைக்கும். மனமகிழ்ச்சி உண்டாகும். சிறப்பாக செயற் படுவீர்கள்.

**பரிகாரம்:**
செவ்வாய்க் கிழமை விரதம் இருந்து நவக்கிரகத்தில் செவ்வாய் பகவானுக்கு தீபம் ஏற்றி வழிபட எல்லா நன்மையும் உண்டாகும். உடல் ஆரோக்கியம் கூடும்.

**அதிர்ஷ்ட கிழமைகள்:**
ஞாயிறு, புதன், வெள்ளி.

## மரண அறிவித்தல்கள்



### திருமதி தருமபூபதி (ஆச்சி அக்கா) சிவராசா

கட்டுவனை சொந்த இடமாகவும், உரும்பிராய் தெற்கை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி தருமபூபதி (ஆச்சி அக்கா) சிவராசா நேற்று (14.02.2017) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவராசாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சியாமளாவின் அன்புத் தாயாரும், காலஞ்சென்றவர்களான சிவபாதசுந்தரம் (மலேசியா), குலசிங்கம் ( கொக்குவில்), பாலசிங்கம் (கனடா), இராஜசிங்கம் (கொழும்பு), பொன்மலர் நல்லையா (கொழும்பு) மற்றும் தனலட்சுமி நாகலிங்கம் (கனடா), இரத்தினசிங்கம் (லண்டன்), அன்ன லட்சுமி சண்முகநாதன் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.02.2017) புதன்கிழமை காலை8 மணியளவில் ஞானவைரவர் கோயிலடி, கோப்பாய் வீதி, உரும்பிராய் தெற்கில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் இளங்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித் தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**ஞானவைரவர் கோயிலடி,**
**கோப்பாய் வீதி, உரும்பிராய் தெற்கு.**

தகவல்:
**நா.குணசீலன்**

(ஜே/8180)(11,17) **072 681 0685**

### திருமதி அன்னப்பிள்ளை விசுவலிங்கம்



பாடசாலையடி, குப்பிளான் வடக்கைப் பிறப்பிடமாகவும் வரிசயப்புலம், குப்பிளான் தெற்கை வதிவிடமாகவும் கொண்ட திருமதி அன்னப் பிள்ளை விசுவலிங்கம் நேற்று (14.02.2017) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வர்களான கயிரித்தம்பி-இராசம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ் சென்றவர்களான சின்னத்தம்பி-சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சி.விசுவலிங்கத்தின் அன்பு மனைவியும் சுலோசனாதேவி, சுகுமாரன் (நியூசிலாந்து), சுதந்திரன் (சுவிஸ்), காலஞ்சென்ற சுத்தானந்தன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் செல்வராசா, ஞானதேவி (நியூசிலாந்து), சறோஜினிதேவி (சுவிஸ்), ஜெயராணி (லண்டன்) ஆகியோரின் அருமை மாமியாரும் வனஜா, சியாமளன், சதன், கபிலன், கனிமொழி, பிரசாந், பிரதீப், திலக்ஷன், ஆதுஷா, கிரிதரன், தர்ஷி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான ஆனந்தி செல்லத்துரை சவுந்தரம் மற்றும் சின்னத்துரை, சிற்றம்பலம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (14.02.2017) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப 3 மணியளவில் குப்பிளான் காடாகடம்பை இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**வரிசயப்புலம்,**
**குப்பிளான் தெற்கு, குப்பிளான்.**

தகவல்:
**குடும்பத்தினர்**

**நாளை**
மாசி-04
வியாழக்கிழமை -16.02.2017
திதி: பஞ்சமி மு.ப. 08.49
நட்சத்திரம்: சித்திரை பி.ப.03.02
சுபநேரம்:08.03-09.33 வரை
ராகுகாலம்:02.03-03.33 வரை

**நல்லூரான் பஸ் புக்கிங் சென்ரர் & திருமணசேவை**
யாழ் - கொழும்பு ஆசனப்பதிவிற்கும், ரிக்கற் பெற்றுக்கொள்வதற்கும் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் மிகக் குறைந்த கட்டணத்தில் பெற்றுக்கொள்ளவும். வீட்டில் இருந்தவாறே அழையுங்கள் வீட்டிற்கு கொண்டு வந்து தருகின்றோம். எம்மிடம் உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்களை பெற்றுக்கொள்ளவும் உடன் அழையுங்கள்.
தொடர்பு - 077 553 4437

சீட்டிழுப்பு வாரம்: 100
அடுத்த வெள்ளிக்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 76,005,260/-
சீட்டிழுப்பு திகதி: 14.02.2017
W 02 05 21 26
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

சீட்டிழுப்பு வாரம்: 540
சீட்டிழுப்பு திகதி: 14.02.2017
வெற்றி இலக்கங்கள்
15 16 42 56 N
அடுத்த வெள்ளிக்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 22,323,127/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

இம்முறை தனயோகம் உங்களுடையதா?
14.02.2017 | 2096 | நீலம்
மிதுனம்
வெற்றி இலக்கங்கள்
07 24 31 45
வெள்ளிக்கிழமை வெற்றிப்பொதி
ரூ 9, 332, 573/=
2017.02.17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சிகப்பு நிற டிக்கட்டுக்களாகும்.
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.

**அழகாக தோன்ற வேண்டுமா ?**
இதோ! வெண்சந்தனம் கலந்த அற்புதமான கோர்வல் கிறீம் (ஆண், பெண் இருபாலாருக்குமானது)
*கறுப்பு *கரும்புள்ளி *உதடுகறுப்பு *பருக்கள்
*பருவந்த அடையாளம் (பள்ளங்கள்) * கண்கருவளையம்*கழுத்து , கை, கால் கறுப்பு அனைத்திற்குமானது.
* இதனைப் பாவித்து 10 நாள்களில் அற்புதமான பேரழகைக் காண்பீர்கள்.
*இங்கு பேசியல் செய்யப்படும். ஒரே தடவையில் மிக அற்புதமான வித்தியாசத்தை காண்பீர்கள்.
* மேலும் காய்கள், ரோமங்கள் (நிரந்தரமாக அகற்ற) கிறீம் பெற்றுக்கொள்ளலாம்.
பதிவு இல 16168
077 263 9037
221, நாவலர் றோட்,
(பிறவுண்றோட் அருள் கொமினிகேஷன் அருகில் யாழ்.)

**VACANCY**
One of the leading star class hotels in North requires young dynamic personnel to work as,
- Assistant Store-keepers
- Housekeeping
- Kitchen Helpers
- Front office Helpers

Candidates Should have minimum one year experience in a star class hotel. Good remuneration package and good carrier prospects.
**Please Call: 077 98 17 617**

**பகுதிநேர வேலை வாய்ப்பு**
வேலைவாய்ப்பை நாடி நிற்போருக்கு,காப்புறுதி ஆலோசகராக, யாழ்.மண்ணில் 50வருடங்களாகச் சேவையாற்றி வரும், இலங்கை காப்புறுதிக் கூட்டுத் தாபனத்தில் பணியாற்ற வாய்ப்பு.
* 2 வாரப் பயிற்சிக்காலத்தையுடையது.
* பயிற்சி முடிவில் தொழில் தகைமை தொடர்பான அரச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்.
* பணி நிலையங்கள்
யாழ்ப்பாணம் ,நெல்லியடி ,சங்கானை

**அடிப்படைத்தகைமைகள்**
* G.C.E (O/L) பரீட்சையில் கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தி.
* 18-55 வயதுக்குட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.

தொலைபேசி இலக்கம் உள்ளடங்கலாக சுயவிவரக் கோவையுடன் (BIODATA) விண்ணப்பங்களை 28.02.2017 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்க கூடியவாறு கீழ்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.
விளம்பர இல : 5523
C/O உதயன்.
361.கஸ்தூரியார் வீதி,யாழ்ப்பாணம்.

## காயத்திரி திருமாங்கல்ய சேவை

எம்மிடம் தற்போது உள்நாட்டு, வெளிநாட்டு, மண மக்கள் பற்றிய விவரங்கள் உள்ளது. உங்களது பிள்ளைகளின் திருமண வாழ்க்கையை நாங்கள் நிறை வேற்றித்தருகின்றோம்.

**எம்முடன் ஏற்கனவே தொடர்பு கொண்டவர்கள் மீண்டும் எம்முடன் தொடர்பு கொள்ளுமாறு தயவாகக் கேட்டுக் கொள்கிறோம்.**

எமது அலுவலகத்திற்கு பெண் உதவியாளர் தேவை. விருப்பமுடையோர் தொடர்பு கொள்ளவும்.

**கோப்பாய் வீதி, ஞானவைரவர் கோயிலடி,
உரும்பிராய் தெற்கு, உரும்பிராய்.
077 685 6072, 076 941 6427**

## ஏழாம் ஆண்டு நினைவு



**அமரர் தி.தவநாதன்**
(கவிஞர் மூளாயூர் தி.தவம்)

தோற்றம் 11.11.1939 — மறைவு 14.02.2010

அப்பா என்றழைக்க மனம்
கிடந்து துடிக்கிறதே
எப்போ நீர் வருவீர்
எம் துயரைத் தீர்ப்பதற்கு
செப்பியே செல்லவில்லை
சென்ற வழி தெரியவில்லை
இப்பாரில் உமதன்பை
ஈடு செய்ய யாருமில்லை

**குடும்பத்தினர்.**
யாழ்ப்பாணம்.

## போராட்டத்தை...

(தொடர்ச்சி)

செல்வோரை அலைபேசி ஊடாக இதுவரையில் பதிவு செய்த வான் படையினர், 'பைனாக்குலர்' ஊடாக நேற்று முதல் கண்காணிப்புச் செய்யத் தொடங் கினர்.

15 நாள்களாகப் பிலக்குடியிருப்பு மக்கள் தமது காணிகளை ஆக்கிரமித்து வைத் துள்ள வான் படை முகாம் முன்பாக அமர்ந்திருந்து போராட்டம் நடத்தி வருகின் றனர். பல்வேறு தரப்பினரும் அவர்களுக்கு ஆதரவுகள் வழங்குவதுடன் உதவிக ளையும் வழங்கி வருகின்றனர்.

பிலக்குடியிருப்பு மக்களின் போராட்டக் களத்துக்கு வந்து செல்வோரை, வான்படை



முகாமில் அமைந் துள்ள காவலரணில் அமர்ந்திருந்து பாது காப்புத் தரப்பினர் கண்காணித்து வருகின்றனர். இது வரையில் தமது அலைபேசி ஊடாக ஒளிப்படங்கள், காணொலிகளை எடுத்துப் பதிவு செய்த பாதுகாப்புத் தரப் பினர், 'பைனாக்குலர்' வைத்து பார்த்துப் பதிவு செய் யும் நடவ டிக்கையை நேற்று ஆரம்பித்துள்ளனர்.

(வ-5-7)

## THE HALO TRUST — ADVERTISEMENT FOR THE POSITION OF TRANSLATOR

The HALO Trust is a British Mine clearance NGO working in fourteen countries world wide. The HALO Trust have been working in Sri Lanka since 2002 clearing mines and other explosive remnants of war.

The applicant will work in the Kilinochchi & Jaffna district although the applicant is not required to live nearby.

**Duties include:**

- Responsible to the programme Manager and/ or Operations Manager
- Working as support staff with the flexibility to work overtime as required
- Office and field work

**Essential:**

- Spoken English Language
- Written English Language
- Computer typing in English and Tamil

**Disirable:**

- Computer MS Office
- Working experience with INGOs
- Spoken Sinhala Language

Intrested candidates should submit their bio - data and contact details and a brief summary of their experience to:
The HALO Trust, 450, Thirunagar west Road, Kilinochchi.

All applications must be submitted no later than Tuesday 21 st February 2017. Only successful candidates will be contacted. The interviews will take place in Kilinochchi.

## VACANCIES
### UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

Further to our advertisement dated 24.01.2017 appeared in the press on 25.01.2017 entertaining applications for the Academic Positions in the Faculty of Engineering, University of Jaffna. The closing Date for the applications should be read as 28.02.2017.

**Registrar,**
**University of Jaffna. Sri Lanka.** 14.02.2017

## கண்ணீர் அஞ்சலி



எமது சங்கத்தின் முன்னாள் தலைவரும் தற்போதைய உப தலைவருமான

**சண்முகம் முத்துலிங்கம்**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங் களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**TYMHA**
**திருநெல்வேலி இந்து வாலிபர் சங்கம்**

**HND in** PEARSON BTEC
-100 நாடுகளுக்கும் மேல் அங்கீகாரம் -

**Quantity Surveying**

பாடநெறியின் இறுதியில் *BSc (Hons) in Quantity Surveying ( Kingston University, UK )* பட்டப்படிப்பின் இறுதி ஆண்டில் இணைய முடியும்




காலம் : 18 - 24 மாதங்கள்

இணைந்துகொள்வதற்கான தகமைகள்
க.பொ.த உயர் தரத்தில் S சித்திகள் 3 உடன்
க.பொ.த சாதாரண தர ஆங்கிலப் பாடத்தில்
C சித்தியும் இருத்தல்

அனைத்துப் பதிவுகளுக்கும்
**இலவசம்**

பாடநெறிக்கட்டணத்தைத் தவணைமுறையிலும் செலுத்தலாம்

முன்னோக்கிய பயண வழி
HND in Quantity Surveying → BSc (Hons) in Quantity Surveying → MSc in Quantity Surveying


**ESOFT METRO CAMPUS**
NO.137, K.K.S Road, Jaffna, Sri Lanka
*Shaping Lives, Creating Futures.*
Tel : 021 222 4142 Hotline : 077 309 9 308

இலங்கையின் மிகப்பரிய தனியார் உயர்கல்வி வலையமைப்பு ☎ 021 7 572 572

## மரண அறிவித்தல்

# பொன்னம்பலம் நல்லையா

**( பேக்கரி நல்லையா**
**செல்வம் பேக்கரி, சோளங்கன் கரணவாய் மேற்கு)**



ஆவரங்காலைப் பிறப்பிடமாகவும், கரணவாய் மேற்கு, சோளங்கனை வதிவிட மாகவும் கொண்ட பொன்னம்பலம் நல்லையா (12.02.2017) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - செல்லம்மா தம்பதியரின் அன்புப்புதல்வரும் காலஞ்சென்றவர்களான பொன்னையா - ஆயிலியம் தம்பதியரின் அன்பு மருமகனும் பரமேஸ்வரியின் (இராச மணி) ஆருயிர்க்கணவரும் தவமணி, தில்லையம்பலம், கிருஸ்ணவேணி, சின்னம்மா (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்றவர்களான கண்மணி, மனோன்மணி, மார்க்கண்டு மற்றும் விஸ்வலிங்கம்(பிள்ளையார் மணியம்), மாசிலாமணி ஆகியோரின் மைத்துனரும் ஆனந்தமலர் (கனடா), நவரஞ்சிதமலர் (சாவகச்சேரி), தர்மரத்தின சிங்கம் (தருமன் - சுவிஸ்), செல்வமலர் (செல்வா - கனடா), ஜெயமலர், கிருஸ்ணதேவி (சமுர்த்தி உத்தியோகத்தர், கரவெட்டி பிரதேச செயலகம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் தவபாலச்சந்திரன் (இராசன் - கனடா), நந்தகுமார் (பிரத்தியேக ஆங்கில ஆசிரியர் - சாவகச்சேரி), றோசாறியோ (சறோ - சுவிஸ்), கணேசதாசன் (செல்வம் - கனடா), யோகேந்திரன் (கனடா) ஆகியோரின் அன்புமாமனாரும் சுபறஞ்சினி (வினோ), குகனேந்திரராசா (குவேந்திரன்), றேணுகா, திருமாறன் (லண்டன்), ஜெயந்தன் (பிரபு - கனடா), ஜெனார்த்தனன் (கனடா), துஸ்யந்தன் (கனடா), சஞ்சேயன் **(Technical Executive)**, கேகயன் **(Software Engineering,** களனி பல்கலைக்கழகம்), ஸ்ரிபன் **(Electrical Engineering -** சுவிஸ்), யெநாத்தன் **(Auto Mobile Engineering -** சுவிஸ்), டிலான் (வங்கி முகாமையாளர், சுவிஸ்), தமிழினி (கனடா), யாழினி (கனடா), தர்மினி (கனடா), கேனுசன், ஜெனுசன் ஆகியோரின் பேரனும் சுபீந்தன்,சுகீபன், கவிசா (லண்டன்) ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.02.2017) வியாழக்கிழமை மு.ப. 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பூவரசம்திட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சோளங்கன்,**
**கரணவாய் மேற்கு, கரவெட்டி**
**077 6737 009**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## சலுகை...

இவ்வாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன நேற்று அறிவித்தார். அரிசி ஆலை உரிமையாளர்கள் மற்றும் அரிசி இறக்குமதியாளர்களுடன் நேற்றுப் பிற்பகல் அரச தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற சந்திப்பின் போதே மைத்திரிபால மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரிசி இறக்குமதிக்கு வழங்கப்பட்டுள்ள வரிச்சலுகை அதிகளவில் மக்களுக்குப் பெற்றுக்கொடுக்கப்பட வேண்டும். சந்தையில் அரிசிக்குத் தட்டுப்பாடு ஏற்பட இடம் வைக்காது எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மக்கள் பாதிப்படையாத வகையில் சலுகை விலையில் அரிசியைப் பெற்றுக் கொடுப்பது அனைவரினதும் பொறுப்பாகும்.

தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பயன்படுத்தத்தக்க வகையில் ஒரு லட்சம் மெட்ரிக்தொன் அரிசியை அரச களஞ்சிய சாலைகளில் களஞ்சியப்படுத்தி வைக்க வேண்டும். இதற்குத் தேவையான நடவடிக்கைகளை கைத்தொழில், வாணிபத் துறை அமைச்சர் ரிசாத் பதியுதீன் முன்னெடுக்க வேண்டும் - என்றார். (வ-5)

## வடக்கு மாகாணத்தின்...

குறிப்பிட்டார். முதலீடு செய்யவிருப்பவர்களோடு ஆரம்பப் பேச்சுக்கள் ஏற்கனவே இடம்பெற்றுள்ளன. கட்டட வேலைகளை ஆரம்பிப்பதற்கான காணிகளைப் பெற்று பணிகளை மேற்கொள்வதற்கான சாதக பாதக நிலமைகளும் ஆராயப்பட்டுள்ளன பல்கலைக்கழகங்களில் படிக்கக்கூடிய கல்வித்தரம் பெற்ற அநேகர் இருக்கிறார்கள். ஆனால் கோட்டா முறைகாரணமாக அவர்கள் பல்கலைக்கழகங்களில் உட்புகமுடியாமல் இருக்கின்றது என்றார் அமைச்சர்.

ஏனைய பல்கலைக்கழகங்களிலும் மருத்துவக் கல்வியை நாங்கள் புறக்கணித்துவிடவில்லை. வயம்பவில் இரண்டு மருத்துவ பீடங்களையும் சப்பிர கமுவ பல்கலையில் இரண்டு மருத்துவ பீடங்களையும் நிறுவுவதற்கான திட்டங்களும் ஏற்கனவே முன்னெடுக்கப்பட்டுள்ளன - என்றார்.

தனியார் பல்கலைக்கழகங்களின் தராதரம் பற்றிய கேள்வி எழமாட்டாது ஏனென்றால் தராதரத்தை உறுதிப்படுத்தி சான்றிதழ் வழங் கும் பொறிமுறையொன்று விரைவில் செயற்பாட்டுக்கு வரப்போகிறது என்றும் அமைச்சர் உறுதியளித்தார். (பு)

## வாக்குறுதியை...

மக்களுக்கு அறிவித்தார். ஆனால் அதனை ஏற்றுப் போராட்டத்தைக் கைவிட மக்கள் மறுத்துவிட்டனர்.

முன்னதாக, பிலக்குடியிருப்பு காணி விடுவிப்புத் தொடர்பில் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, மறுவாழ்வு, மீள்குடியமர்வு மற்றும் இந்து விவகார அமைச்சு செய்திக் குறிப்பு ஒன்றை வெளியிட்டது. அதில், அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் அரச தலைவருவுடன் நேற்றுக் காலை நடத்திய பேச்சைத் தொடர்ந்து காணியை விடுவிப்பதற்கு இராணுவத் தளபதி இணக்கம் தெரிவித்தார் என்று கூறப்பட்டிருந்தது.

“முல்லைத்தீவு, கேப்பாப்புலவில் மக்களின் காணிகளை இராணுவத்தினர் ஆக்கிரமித்திருப்பது தொடர்பில் அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுடன் பேசினார். அரச தலைவர் இராணுவத் தளபதியுடன் பேசினார். அப்போது குறிப்பிட்ட நிலத்தை விரைவில் விடுவிப்பதாக இராணுவத்தினர் உறுதியளித்தனர்” என்று அந்தக் குறிப்புத் தெரிவித்தது.

பிலக்குடியிருப்புக் காணி வான் படையினர் வசமே இருக்கிறது. இதனை விடுவிப்பதாக இராணுவத் தளபதி வழங்கும் வாக்குறுதியை எப்படி நம்ப முடியும் என்று அமைச்சு அதிகாரி ஒருவரிடம் கேள்வி எழுப்பியபோது, இராணுவத் தளபதி ஏனையோருடன் கலந்துரையாடியே அந்த வாக்குறுதியை அரச தலைவருக்கு வழங்கினார் என்று அந்த அதிகாரி தெரிவித்தார்.

அமைச்சருக்கும் அரச தலைவருக்கும் இடையிலான சந்திப்பு வாராந்த அமைச்சரவை மாநாட்டின் பின்னர் இடம்பெற்றது என்றும் அவர் கூறினார். (உ-7)

## ஆஸி...

விக்கிரமசிங்க இன்று காலை ஆஸ்திரேலிய அரச தலைவர் மல்கம் ரேன்புல்லைச் சந்தித்துப் பேசவுள்ளார்.

ஆஸ்திரேலியாவின் தலைநகரான கான்பராவில் அமைந்துள்ள நாடாளுமன்றத்தில் இந்தச் சந் திப்பு இடம்பெறவுள்ளது.

இலங்கை-ஆஸ்திரேலிய உறவுகளை மேம்படுத்தல் உட்படப் பல விடயங்கள் குறித்து இந்தப் பேச்சின்போது ஆராயப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (தி)

## காணாமல்...

இருப்பினும் இது பன்னாட்டுச் சட்டத்தில் குற்றமாக இருந்து வருகின்றது. 2015ஆம் ஆண்டு ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில், பன்னாட்டுச் சட்டத்தில் குற்ற மாகப் பிரகடனப்படுத்தப்பட்டவற்றை இலங்கை அரசமைப்பிலும் குற்றமாக உள்ளடக்க வேண்டும் என்ற பரிந்துரை காணப்பட்டது. அதற்கு அமைவாகவே, இலங்கை அரசு பலவந்தமாக காணாமல் ஆக்கப்படுதலை குற்றச் செயலாக அறிவிக் கும் சட்டவரைவை வர்த்தமானியில் வெளி யிட்டுள்ளது.

‘கொழும்பு அரசின் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரையில் வர்த்தமானியில் இது வெளியிடப்பட்டுள்ளது. இதனை வெளியிடுவதற்கு கடந்த 7ஆம் திகதி அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது. எவ்வாறாயினும் குறித்த சட்டவரைவு சட்டமாக ஆக்கப்படுவதற்கு நாடாளுமன்றத்தின் பெரும்பான்மையைப் பெறவேண்டும்’ என்று அயலுறவுத்துறை அமைச்சர் மங்கள தெரிவித்தார்.

கடத்தலுக்கும், பலவந்தமாக காணாமல் ஆக்கப்படுதலுக்கும் இடையில் சட்டரீதியான வேறுபாடுகள் இருக்கின்றன என்பதைச் சுட்டிக்காட்டிய நாடாளுமன்ற உறுப்பினரும் சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன், சரணடைந்து காணாமற்போனவர்கள், தடுப்பில் வைத்து காணாமற்போனவர்கள் இந்தப் பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்டோருக்குள் உள்ளடங்குவார்கள் என்று கூறினார். (வ-5)

## இலங்கை...

விவகாரங்களுக்குத் தீர்வு காண்பதற்கு இலங்கைக்குக் கால அவகாசத்தை வழங்கும் வகையில், தீர்மானம் கொண்டுவரப்படவுள்ளது. இந்தத் தீர்மானம் சபையில் முன்வைப்பதற்கு முன்னர், எதிர்வரும் 28ஆம் திகதி அயலுறவுத்துறை அமைச்சர் மங்கள சமரவீர, ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கூட்டத்தொடரில் உரையாற்றவுள்ளார்.

இதற்கு முன்னர், இலங்கை தொடர்பான தீர்மானங்களை அமெரிக்காவே முன்வைத்து வந்தது. எனினும், அமெரிக்காவில் ஆட்சி மாற்றத்துக்குப் பின்னர் தெளிவான நிலைப்பாடுகள் எடுக்கப்படாத நிலையில், இந்த முறை தீர்மானத்தை பிரிட்டன் முன்வைக்கவுள்ளது. (வ-5)

## சுழற்சி...

பாதுகாப்புத் தரப்பினர் அத்துமீறிப் பிடித்து வைத்துள்ள தமது காணிகளை விடுவிக்குமாறு கோரி, புதுக்குடியிருப்பு மக்கள் கடந்த 3ஆம் திகதி போராட்டத்தை ஆரம்பித்திருந்தனர். காணிகளைப் பிடித்து வைத்துள்ள இராணுவ முகாம் முன்பாக - பிரதேச செயலக முன்பக்கத்தில் அமர்ந்திருந்து தொடர் போராட்டத்தை அவர்கள் நடத்தி வருகின்றனர்.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை வரையில் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த மக்கள், நேற்றுச் செவ்வாய்க்கிழமை தொடக்கம் தமது போராட்ட வடிவத்தை மாற்றிக் கொண்டனர். உணவு ஒறுப்புப் போராட்டத்தை சுழற்சி முறையில் அவர்கள் ஆரம்பித்தனர்.

நீராகாரம் எதுவுமின்றி உணவு ஒறுப்புப் போராட்டத்தில் நேற்றைய தினம், வ.இராசலட்சுமி, தெ.தவமலர், சி.கமலநாதன் ஆகியோர் ஈடுபட்டனர். தொடர்ச்சியாக சுழற்சி முறையில் ஏனையோர் போராட்டத்தில் ஈடுபடுவார்கள் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-5-7)

## புலிகள்...

புலிகள் பயன்படுத்திய ஆட்லறி எறிகணைகள் 4 மீட்கப்பட்டன என்று வான் படையினர் தெரிவித்தனர்.

காட்டுப்பகுதியில் நிலை கொண்டுள்ள வான் படையினர் நேற்றையதினம் துப்புரவுப் பணியில் ஈடுபட்ட போதே இந்த எறிகணைகள் மீட்கப்பட்டன. இவை ஒவ்வொன்றும் 16 கிலோ கிராம் எடை கொண்டவை. எறிகணைகளை செயலிழக்கச் செய்வதற்கு குண்டு செயலிழக்கும் பிரிவினருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என்று வான் படையினர் தெரிவித்தனர்.

முல்லைத்தீவு, அம்பகாமம் காட்டுப்பகுதியில் 2009 ஆண்டுக்கு முன்னர் விடுதலைப் புலிகளின் வான் படைத்தளம் இருந்தது. (வ-21 35)

## சின்னம்மா...

தரப்பினரின் வற்புறுத்தலினால்தான் அடிப்படையிலேயே பதவி விலகினேன் என்று முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் கடந்த 7ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இரவு தெரிவித்தார். புதிய ஆட்சியை அமைக்கும் முனைப்பில் சசிகலாவும், தனது ஆட்சியைத் தக்கவைக்கும் முனைப்பில் பன்னீர் செல்வமும் இருந்தனர். சசிகலா சிறை செல்வதால் அவரது முதல்வர் கனவு கலைந்தது.

தீர்ப்பு வழங்கப்பட்டு சில நிமிடங்களில் கூவத்தூர் நட்சத்திர விடுதியில் சட்டமன்ற உறுப்பினர்களின் கூட்டத்தைக் கூட்டினார் சசிகலா. முதல்வராக எடப்பாடி பழனிச்சாமியைத் தெரிவுசெய்தார். இதனையடுத்து நேற்று மாலை ஆளுநர் வித்யாசாகர் ராவுக்கும் எடப்பாடிக்கும் இடையிலான சந்திப்பு இடம்பெற்றது. ஆட்சியமைக்க அழைப்பு விடுக்கவேண்டும் என்று பழனிச்சாமி வலியுறுத்தினார். எனினும் இது ஆட்சியமைக்க அழைக்கப்பட்ட சந்திப்பு அல்ல என்று ஆளுநர் அலுவலகம் தெரிவித்தது.

கூவத்தூர் பகுதியில் நேற்று மாலை பரபரப்பு ஏற்பட்டதை அடுத்து அந்தப் பகுதிக்கு 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. (வ-ம)

*(தொடர்புடைய செய்திகள் - பக்கம் 14, 15)*

## வடக்கு...

- பணிப் புறக்கணிப்பு நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பிலக்குடியிருப்பு மற்றும் புதுக்குடியிருப்பில் தமது பூர்வீக நிலங்களை, அபகரித்து வைத்துள்ள பாதுகாப்புத்தரப்பினரிடமிருந்து மீட்டுத் தருமாறு கோரி மக்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர். பிலக்குடியிருப்பு மக்களின் போராட்டம் நேற்றுடன் 15 நாளைத் தொட்டுள்ளது. புதுக்குடியிருப்பு மக்களின் போராட்டம் 12 நாள்களை எட்டியுள்ளது. இந்த மக்களுக்கு ஆதரவாக அடுத்த கட்டமாக என்ன செய்வது என்பது தொடர்பில் ஆராயும் கூட்டம் பிலக்குடியிருப்பு போராட்டக் களத்துக்கு அண்மையாக உள்ள இடத்தில் நடைபெற்றது.

இதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன், சி.சிவமோகன், திருமதி சாந்தி சிறிஸ்கந்தராசா மற்றும் மாகாணசபை உறுப்பினர்களான து.ரவிகரன், க.சிவநேசன், ஆ.புவனேஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்தப் போராட்டத்தை முல்லைத்தீவு மாவட்டத்துக்கு வெளியிலும் கொண்டு செல்ல வேண்டும். அது பரந்த அளவில், வடக்கின் 5 மாவட்டங்களிலும் ஒரே நேரத்தில் நடத்தப்பட வேண்டும் என்ற யோசனை முன்வைக்கப்பட்டது.

பிலக்குடியிருப்பு மக்களின் போராட்டம் காரணமாக அவர்களது பிள்ளைகள் பாடசாலைக்குச் செல்லவில்லை. அந்தப் பாடசாலை பிள்ளைகளுக்காக, வடக்கு மாகாணத்தில் உள்ள 5 மாவட்டங்களிலும் ஒரே நேரத்தில் பாடசாலை மாணவர்கள் அனைவரும் அரை மணி நேரம் கவனவீர்ப்பில் ஈடுபடுவது. அதன் பின்னர் வடக்கு மாகாணத்தில் ஒரே நாளில் கடையடைப்பு, தொடர்ந்து பேருந்துச் சேவை நிறுத்தப் போராட்டம், வடக்கின் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரே நாளில் ஒரே நேரத்தில் முக்கிய இடத்தில் கவனவீர்ப்பு என்று தொடர்ச்சியாக இந்தப் போராட்டத்தை முன்னெடுப்பது என்றும், முல்லைத்தீவு மாவட்டத்தில் எல்லாத் தரப்புக்களையும் ஒன்றிணைத்து ஆகக் குறைந்தது 10 ஆயிரம் மக்களை ஒன்று திரட்டி மாபெரும் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்துவது என்பது உள்ளிட்ட ஆலோசனைகள் தெரிவிக்கப்பட்டன.

இதற்கு முன்னதாக வடக்கு மாகாண சபையின் அமைச்சர்களுடன் பேசி அவர்களது ஒத்துழைப்புபையும் பெற்றுக்கொள்ள முடிவு செய்யப்பட்டது. ஒவ்வொரு அமைச்சர்களும் தங்களது துறையின் கீழ் உள்ளவர்களை இந்தப் போராட்டத்துக்கு பங்களிக்கச் செய்வதற்கு அறிவுறுத்தல் வழங்க வேண்டும். இதற்காக வடக்கு மாகாண அமைச்சர்களுடன் இன்று மாலை 3 மணிக்குச் சந்திப்பு நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில், மாவட்டச் செயலருடன், வடக்கு மாகாணத்தின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், முல்லைத்தீவு மாவட்ட மாகாணசபை உறுப்பினர்கள், வடக்கு மாகாண அமைச்சர்கள் இன்றைய தினம் சந்திப்பில் ஈடுபடவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

### *யாழ்ப்பாணத்திலும் ஆதரவுப் போராட்டம்*

பிலக்குடியிருப்பு மற்றும் வலி. வடக்கு மக்களுடைய மீள்குடியமர்வுக்கு ஆதரவு தெரிவித்தும், காணாமல் ஆக்கப்பட்டவர்கள், அரசியல் கைதிகளுடைய பிரச்சினைகளுக்கு நீதி கோரியும் தென்பகுதி மக்களையும் இணைத்து யாழ்ப்பாண நகரில் மாபெரும் கவனவீர்ப்புப் போராட்டம் எதிர்வரும் 22 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கம் நடத்தவுள்ள இந்தப் போராட்டத்துக்கு உரும்பிராய் கிராமிய உழைப்பாளர் சங்கம் ஆதரவு வழங்கியுள்ளது. (வ-5-7-21-106)

## யாழ்ப்பாணத்திலும்...

வடக்கு மாகாணத்தில் இதுவரை பன்றிக் காய்ச்சலுக்கு 5 பேர் இலக்காகியுள்ளனர் என்று சுகாதாரப் பிரிவினரால் தெரிவிக்கப்பட்டது.

இன்புளுவென்சா குடும்பத்தைச் சேர்ந்த எச்1என்1 எனப்படும் வைரஸ் காய்ச்சல் வன்னி மாவட்டத்தில் முதலில் இனங்காணப்பட்டது. 5 வயதுக்கு உட்பட்ட சிறுவர்கள் இந்தக் காய்ச்சலினால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று உறுதிப்படுத்தப்பட்டது. இதன் பின்னர் வன்னியில் மேலும் ஒருவர் பன்றிக் காய்ச்சலினால் பாதிக்கப்பட்டுள்ளார் என்று இனங்காணப்பட்டது. இதனை விட வன்னியில் இருந்து மூவரது குருதி மாதிரிகள் சந்தேகத்தின் அடிப்படையில் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இவ்வாறானதொரு நிலையில், யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த ஒருவரது குருதி மாதிரி கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. அது தொடர்பிலான மருத்துவ ஆராய்ச்சிக் கழகத்தின் அறிக்கை போதனா வைத்தியசாலைக்கு நேற்று அனுப்பி வைக்கப்பட்டது. அதில் மேற்படி நோயாளி எச்1என்1 நோய்த் தாக்கத்துக்கு உள்ளாகியுள்ளார் என்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

வேலணை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவைச் சேர்ந்த 26 வயதுடைய பெண்ணுக்கே இந்தத் தொற்று உள்ளமை இனங்காணப்பட்டது. அவர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வீடு திரும்பினார் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-5-4-101)

# சுடோக்கு
## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | 6 | | | | 4 | |
| | 3 | | | 9 | | | | 1 |
| | 5 | | | | 8 | | | |
| 6 | | | | | | 7 | | |
| 2 | | | 7 | | 5 | | | 9 |
| | | 8 | | | | | | 5 |
| | | | 9 | | | | 1 | |
| 4 | | | | 2 | | | 9 | |
| | 2 | | | | 6 | | | 4 |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 7 | 4 | 6 | 9 | 8 | 2 | 1 | 5 |
| 9 | 6 | 1 | 3 | 2 | 5 | 8 | 7 | 4 |
| 2 | 8 | 5 | 7 | 1 | 4 | 9 | 6 | 3 |
| 6 | 5 | 3 | 9 | 4 | 1 | 7 | 8 | 2 |
| 8 | 4 | 9 | 2 | 3 | 7 | 6 | 5 | 1 |
| 7 | 1 | 2 | 8 | 5 | 6 | 3 | 4 | 9 |
| 5 | 3 | 6 | 4 | 8 | 9 | 1 | 2 | 7 |
| 1 | 2 | 7 | 5 | 6 | 3 | 4 | 9 | 8 |
| 4 | 9 | 8 | 1 | 7 | 2 | 5 | 3 | 6 |


சுடோக்கு
ஒரு எண் விளை யாட்டு.
தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப் படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல் களையும் 9 நிரைகளையும் கொண் டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டி ருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).
இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண் கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக் குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப் பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப் பானிய நிறு வனமான நிகோலி இதனை அறி முகப் படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக் கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்ய மானது.




## 5 கிராமி விருதுகளை அள்ளி பிரிட்டன் பாடகி அடேல் அசத்தல்

இசையுலகின் மிகவும் உயரிய விருதாக கருதப்படும் கிராமி விருது வழங்கும் விழா அமெரிக்காவில் உள்ள லொஸ் ஏஞ்சலெஸ் நகரில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இந்த விருதுக்காகப் பரிந்துரைக்கப்பட்ட 5 பட்டியலின்கீழ், பிரிட்டன் நாட்டைச் சேர்ந்த பிரபல பாடகியான அடேல் அனைத்து விருதுகளையும் வென்றார்.
கடந்த ஆண்டின் சிறந்த இசை அல்பம், சிறந்த இசைதட்டு, சிறந்த பாடல், சிறந்த பொப் பாடகி, சிறந்த பொப் பாடல் அல்பம் ஆகிய ஐந்து விருதுகளையும் இவர் பெற்றார். இவரோடு போட்டியிட்ட பிரபல பாடகி பெயான்ஸ் விருதுக்கான வாய்ப்பை இழந்தபோதும், விழா மேடையில் தனது இசை மழையால் ரசிகர்களை மகிழ்வித்தார்.
இந்தியாவைச் சேர்ந்த தபேலா கலைஞர் சந்தீப் தாஸ் பங்களிப்புடன் தயாரிக்கப்பட்ட சிங் மி ஹோம் என்ற இசைத் தொகுப்பு சர்வதேச இசை என்ற பிரிவின்கீழ் கிராமி விருதை வென்றது. இந்த இசைத் தொகுப்பில் உலகின் மிகவும் பிரபலமான இசைக் கலைஞர்களின் கைவண்ணம் இடம்பெற்றமை குறிப்பிடத் தக்கது.
பிரபல சிதார் இசைக்கலைஞர் அனோஷ்காங்கர் என்பவரின் லேண்ட் ஆஃப் கோல்ட் என்ற சிதார் இசைத் தொகுப்பும் இதே பிரிவின்கீழ் தேர்வுக்குப் பரிந்துரைக்கப்பட்டிருந்தது. ஆனால் சிங் மி ஹோம் அந்த வாய்ப்பைத் தட்டிப் பறித்துச் சென்றது.

ஒபிஎஸ்: ஐயா அந்த ராஜினாமா கடிதத்தை அட்ரஸ்மாறி அனுப்பி தொலைச்சிட்டேன்



அதை திருப்பிக் கொடுத்தீங்கனா திரும்பிபாக்காமல் போய்விடுவேன்



தமிழகத்துக்கான காதலர் தினப் பரிசு



பெப்ரவரி வந்தா போதும் இந்த பொண்ணுங்க தொல்லை தாங்க முடியலை. காதல் கடிதமாக வந்து குவியுது!
நேற்றுத்தான் ஒரு கிலோ காதல் கடிதம் எடையில் போட்டேன்!
இன்றைக்கு ஒரு கிலோ இருக்கும் போல! அழகா பிறந்தாலே இதுதான் பிரச்சினை!



எதுக்கும் இப்பவே சொல்லி வைப்போம்
சின்ன சின்னம்மா வாழ்க!

நீதிபதி: ஒரு மாதம் சிறைத் தண்டனை அல்லது நூறு ரூபாய் அபராதம். இரண்டில் எது வேண்டும் உனக்கு..?
குற்றவாளி: நூறு ரூபாய் கொடுங்க சாமி அது போதும்..!



**மேடம்:** சாதுர்யமாக செயற்பட்டு முன்னேறுவீர்கள். அக்கம்பக்கத்தினர் அன்பு பாராட்டுவர். தொழில், வியாபார வளர்ச்சியால் வருமானம் அதிகரிக்கும். பெற்றோரின் தேவையறிந்து நிறைவேற்றுவீர்கள்.



**இடபம்:** அறிமுகம் இல்லாதவரிடம் நெருக்கம் வேண்டாம். தொழிலில் உருவாகிற சிரமங்களை சரி செய்வது அவசியம். வருமானம் சுமார். பணியாளர்கள் வேலையில் விழிப்புடன் இருப்பது நல்லது.



**மிதுனம்:** பொதுப்பணிகளில் ஆர்வமுடன் ஈடுபடுவீர்கள். உறவினர் செயலைக் குறை சொல்ல வேண்டாம். தொழிலில் லாபம் சுமாராக இருக்கும். பிள்ளைகளால் குடும்பச் செலவு அதிகரிக்கும். திடீர் வெளியூர் பயணம் செல்ல நேரிடலாம்.



**கடகம்:** தாமதமான பணி எளிதில் நிறை வேறும். தொழில், வியாபாரத்தில் இருந்தபோட்டி மறையும். லாபம் படிப்படியாக உயரும். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர். பெண்கள் குடும்ப நலனுக்காகப் பாடுபடுவர்.



**சிங்கம்:** பேச்சு செயலில் புத்துணர்ச்சி வெளிப்படும். நண்பரின் வழிகாட்டுதலால் நன்மை காண்பீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால் ஆதாயம் அதிகரிக்கும். ஆரோக்கியம் மேம்படும்.







**கன்னி:** நற்செயலில் ஈடுபட்டு நற்பெயர் பெறுவீர்கள். தொழிலில் அதிக உழைப்பினால் புதிய சாதனை படைப்பீர்கள். பணியாளர்கள் பணிவிடயமாக வெளியூர் செல்வர். உறவினர் வருகையால் மகிழ்ச்சி நிறைந்திருக்கும்.



**துலாம்:** உறவினரின் அன்பைக் கண்டு மனம் நெகிழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த வருமானம் கிடைக்கும். பணியாளர்கள் பணிச்சுமையில் இருந்து விடுபடுவர். பெண்கள் ஆடம்பரமாகச் செயற்படுவர்.



**விருச்சிகம்:** வாழ்க்கைத் தரம் வியத்தகு அளவில் இருக்கும். தொழில், வியாபார வளர்ச்சியால் ஆதாயம் அதிகரிக்கும். நண்பர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். குடும்பத்தில் சுபவிடயப் பேச்சு நடக்கும்.



**தனுசு:** பணிகளைத் திட்டமிட்டு நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில் லாபம் மிதமாக இருக்கும். பணியாளர்கள் நிலுவைப் பணிகளை விரைந்து நிறைவேற்றுவர். பெண்கள் குடும்பத்தில் ஒற்றுமையை நிலைநாட்டுவர்.



**மகரம்:** நண்பரின் ஆலோசனையை ஏற்று நடப்பீர்கள். தொழில், வியாபாரத்தில் லாபம் சீராக இருக்கும். பணியாளர்களுக்கு சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும். பெண்கள் குடும்ப வளர்ச்சி கண்டு பெருமை கொள்வர்.



**கும்பம்:** யாரிடமும் வாக்குவாதத்தில் ஈடுபட வேண்டாம். தொழில், வியாபாரத்தில் மறைமுகப் போட்டி அதிகரிக்கும். வருமானம் சுமாராக இருக்கும். உடல் நலத்திற்கு மருத்துவ சிகிச்சை தேவைப்படலாம்.



**மீனம்:** முன்னேறுவதற்கான வாய்ப்பு கிடைக்கப் பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி உண்டாகும். லாபம் பன்மடங்கு உயரும். உறவினர் வருகை மகிழ்ச்சியளிக்கும்.

## இன்றைய மோதல்

யாழ்ப்பாணம், பெப். 15
வவுனியா வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் 22ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு சாந்தன், யூட், கயன் ஞாபகார்த்த கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இன்று மாலை 6.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் நியூபைட் அணியை எதிர்த்து கோல்டன் ஸ்ரார் அணி மோதவுள்ளது. (ம-23)

## கூடைப்பந்தாட்ட அணித் தெரிவு

யாழ்ப்பாணம், பெப். 15
வடமாகாண ஆண்கள் கூடைப்பந்தாட்ட அணித் தெரிவு யாழ். மத்திய கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் எதிர்வரும் சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் இடம் பெறவுள்ளது. காலை 7.30 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை அணித்தெரிவு நடைபெறும். (ம-23)

## ஆப்கானிஸ்தான்- சிம்பாப்வே ஒருநாள் தொடர்

ஆப்கானிஸ்தான் - சிம்பாப்வே அணிகளுக்கு இடையிலான ஒரு நாள் தொடர் சிம்பாப்வேயில் நாளை ஆரம்பமாகிறது. இரண்டாவது ஆட்டம் எதிர்வரும் 19ஆம் திகதியும், மூன்றாவது ஆட்டம் எதிர்வரும் 21ஆம் திகதியும், நான்காவது ஆட்டம் எதிர்வரும் 24ஆம் திகதியும், ஐந்தாவது ஆட்டம் எதிர்வரும் 26ஆம் திகதியும் இடம்பெறவுள்ளன. (ம)



# கரவெட்டி எல்லேயில் சாதித்தது ஞானம்ஸ்

யாழ்ப்பாணம், பெப். 15
கரவெட்டி பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான எல்லேயில் ஆண்கள் பிரிவில் கரவெட்டி ஞானம்ஸ் அணி சம்பியனானது.
அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இறுதியாட்டத்தில் கரவெட்டி ஞானம்ஸ் அணியை எதிர்த்து இமையாணன் இளைஞர் அணி மோதியது. ஓர் அணிக்கு இருமுறை துடுப்பெடுத்தாடும் வாய்ப்பு வழங்கப்பட்டது. முதலில் துடுப்பெடுத்தாடிய இமையாணன் இளைஞர் அணி நிர்ணயிக்கப்பட்ட 40 பந்துகளில் 10 இலக்குகளை இழந்து 8 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக சதானந் 3 ஓட்டங்களையும், தீபன் 2 ஓட்டங்களையும், பிரவிந்தன், கவிதரன், கஜேந்திரன் மூவரும் தலா ஓர் ஓட்டத்தையும் பெற்றனர்.
பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கரவெட்டி ஞானம்ஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட 40 பந்துகளில் சகல இலக்குகளையும் இழந்து 4 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது.
4 ஓட்டங்கள் முன்னிலையுடன் இரண்டாவது இன்னிங்ஸில் களமிறங்கிய இமையாணன் இளைஞர் அணி 2 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது.
7 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென்ற இலக்குடன் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கரவெட்டி ஞானம்ஸ் அணி 22 பந்துகளில் இலக்கை அடைந்து சம்பியனானது. அதிகபட்சமாக பிரணவன் 3 ஓட்டங்களையும் சுகந்தன், சுபாஸ், ஜெயரூபன், தேவா நால்வரும் தலா ஓர் ஓட்டத்தையும் பெற்றனர். (ம-422)

## வடமாகாண குமித்தேயில் பெண்கள் பிரிவு முடிவுகள்


யாழ்ப்பாணம், பெப். 15
வட மாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட மாவட்ட அணிகளுக்கிடையிலான குமித்தே போட்டிகளில் பெண்கள் பிரிவு முடிவுகள்.
50 கிலோ எடை பிரிவு
50 கிலோ எடைப்பிரிவில் யாழ்ப்பாண மாவட்டத்தை பிரதிநிதித்துவம் செய்த எச்.நர்மதா தங்கப் பதக்கத்தையும், முல்லைத்தீவு மாவட்டத்தை பிரதிநிதித்துவம் செய்த வி.சுகிர்தா வெள்ளிப் பதக்கத்தையும், கிளிநொச்சி மாவட்டத்தை பிரதிநிதித்துவம் செய்த என்.சர்மிளா, முல்லைத்தீவு மாவட்டத்தை பிரதிநிதித்துவம் செய்த ஜே.ஏ.நியாளினி இருவரும் வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர்.

*55 கிலோ எடை பிரிவு*
55 கிலோ எடைப் பிரிவில் மன்னார் மாவட்டத்தை பிரதிநிதித்துவம் செய்த என்.ஜே.எஸ். பேரிஸ் தங்கப் பதக்கத்தையும், கிளிநொச்சி மாவட்டத்தை பிரதிநிதித்துவம் செய்த சுகந்தினி வெள்ளிப் பதக்கத்தையும் யாழ்ப்பாண மாவட்டத்தை பிரதிநிதித்துவம் செய்த கே.பௌசனா, மன்னார் மாவட்டத்தைப் பிரதிநிதித்துவம் செய்த ஏ.அமலாரொக்கி இருவரும் வெண்கலப் பதக்கத்தையும் வென்றனர்.

*61 கிலோ எடை பிரிவு*
61 கிலோ எடைபிரிவில் கிளிநொச்சி மாவட்டத்தை பிரதிநிதித்துவம் செய்த தமிழ்மகள் தங்கப் பதக்கத்தையும் வவுனியா மாவட்டத்தை பிரதிநிதித்துவம் செய்த ஆர்.கேமாசுஸ்மினி வெள்ளிப் பதக்கத்தையும், மன்னார் மாவட்டத்தைப் பிரதிநிதித்துவம் செய்த ரி.டிலக்சனா வெண்கலப் பதக்கத்தையும் வென்றனர். (ம-422)

## இல்ல மெய்வன்மை

யாழ்ப்பாணம், பெப். 15
*கோப்பாய் வடக்கு*
*றோ.க.த.க. பாடசாலை*
கோப்பாய் வடக்கு றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையின் இல்ல மெய்வன்மைப் போட்டிகள் வள்ளியம்மன் சனசமூக நிலைய மைதானத்தில் இன்று பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெறவுள்ளது. பாடசாலையின் அதிபர் பி.ஜெயரட்ணராஜாவின் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடமாகாணசபை உறுப்பினர் கஜதீபன் கலந்துகொள்ளவுள்ளார்.



*வட்டு. பிளவத்தை*
*அ.மி.த.க. பாடசாலை*
வட்டுக்கோட்டை வடக்கு பிளவத்தை அ.மி.த. கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள் இன்று பிற்பகல் 2 மணிக்கு இளையநட்சத்திர விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெறவுள்ளன. பாடசாலையின் அதிபர் திருமதி கு.லோகநாதன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக ஆரம்பக்கல்வி பிரதிக்கல்விப் பணிப்பாளர் ஏ.எஸ்.சற்குணராஜா கலந்துகொள்ளவுள்ளார். (ம)

## சென். பற்றிக்ஸை வீழ்த்தியது மத்தி.

யாழ்ப்பாணம், பெப். 15
இலங்கை பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கம் நடத்தும் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற டெஸ்ட் ஆட்டமொன்றில் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரியை தோற்கடித்தது யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி.
சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இந்த ஆட்டம் நடைபெற்றது. முதலில் துடுப்பெடுத்தாடிய சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி 151 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக அனோசன் 44 ஓட்டங்களையும், நிதுசன் 21 ஓட்டங்களையும், றொசாந்தன் 28 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் மதுசன் 4 இலக்குகளையும், துசியந்தன் 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.
பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ். மத்திய கல்லூரி அணி, 168 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக ஜெறோசன் 76 ஓட்டங்களையும், கார்த்தீபன் 57 ஓட்டங்களையும், மதுசன் 26 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் ரதீசன் 4 இலக்குகளை வீழ்த்தினார்.
17 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் இரண்டாவது இன்னிங்ஸில் களமிறங்கிய பற்றிக்ஸ், 105 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. பந்து வீச்சில் துசாந்தன், மதுசன் இருவரும் தலா 3 இலக்குகளை வீழ்த்தினர்.
89 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு களமிறங்கிய யாழ். மத்திய கல்லூரி அணி, ஓர் இலக்கை இழந்து இலக்கை அடைந்தது. அதிகபட்சமாக கௌதமன் 65 ஓட்டங்களைப் பெற்றார். (ம-23)

## வடமராட்சிப் பாடசாலைகளின் கால்பந்து ஹாட்லி – நெல்லியடி மத்தி. இறுதியில்

கரணவாய், பெப். 15
வடமராட்சிப் பாடசாலைகளுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில், பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அணியை எதிர்த்து நெல்லியடி மத்திய கல்லூரி அணி இன்று மோதவுள்ளது.
இமையாணன் மத்திய விளையாட்டுக் கழக மைதானத்தில் காலை 8.30 மணிக்கு இடம்பெறவுள்ள மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் வதிரி தேவரையாளி இந்துக் கல்லூரியை எதிர்த்து உடுப்பிட்டி அ.மி. கல்லூரி மோதவுள்ளது. தொடர்ந்து இடம் பெறும் இறுதியாட்டத்தில் பருத்தித்துறை ஹாட்லி கல்லூரியை எதிர்த்து நெல்லியடி மத்திய கல்லூரி மோதவுள்ளது.
ஹாட்லிக் கல்லூரி, உடுப்பிட்டி அ.மி. கல்லூரியை 3:1 என்ற கோல் கணக்கில் தோற்கடித்தும் நெல்லியடி மத்திய கல்லூரி, தேவரையாளி இந்துக் கல்லூரி அணியை 2:1 என்ற கோல் கணக்கில் தோற்கடித்தும் இறுதிக்குத் தகுதிபெற்றன. (ம-108)



## இலங்கை ஆஸ்திரேலியா ரி-20 தொடர் நாளைமறுதினம்

இலங்கை- ஆஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான ரி-20 தொடர் நாளைமறுதினம் ஆரம்பமாகவுள்ளது.

மூன்று ஆட்டங்கள் கொண்ட ரி-20 தொடரில் விளையாடுவதற்காக இலங்கை அணி ஆஸ்திரேலியாவுக்குச் சென்றுள்ளது. முதலாவது ஆட்டம், மெல்போர்ணில் நாளைமறுதினம் நடைபெறவுள்ளது. இரண்டாவது ஆட்டம் எதிர்வரும் 19ஆம் திகதியும், மூன்றாவது ஆட்டம் எதிர்வரும் 22ஆம் திகதியும் நடைபெறவுள்ளன.

இந்தத் தொடருக்கான இரு அணிகளும் ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளன. காயம் காரணமாக மத்தியூஸ் தொடரில் இருந்து விலகியதால், அணித் தலைவர் பொறுப்பு தரங்கவுக்குக் கொடுக்கப்பட்டுள்ளது.

அண்மையில் நடைபெற்று முடிந்த தென்னாபிரிக்காவுக்கு எதிரான ஒருநாள் தொடரிலும் தரங்கவே தலைவராகச் செயற்பட்டார். இலங்கை 0:5 என்று படு தோல்வியடைந்தது. இதனால் ஆஸ்திரேலியத் தொடரில் அவர் சாதிக்க வேண்டும் என்ற நெருக்கடி உள்ளது.

ஸ்ரீவ் சிமித் தலைமையில் முன்னணி வீரர்களைக் கொண்ட ஆஸ்திரேலிய அணி இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் விளையாட இந்தியாவுக்கு வந்துள்ளதால், இலங்கைக்கு எதிரான தொடரில் இளம் அஸ்திரேலிய அணியே களமிறங்கும். (ம)



# ஜோ ரூட் தலைவர்

இங்கிலாந்து டெஸ்ட் அணியின் தலைவராக நட்சத்திரத் துடுப்பாட்ட வீரரான ஜோ ரூட் நியமிக்கப்பட்டார். ஸ்ரோக்ஸ் உபதலைவராகக் குறிப்பிடப்பட்டார்.

இந்தியாவுக்கு எதிராக அண்மையில் முடிவடைந்த தொடரை 0:4 என்று இழந்தது இங்கிலாந்து. இதனால் அந்த அணியின் தலைவரான அலிஸ்டர் குக் மீது கடுமையாக விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. இதனையடுத்து தனது பதவியில் இருந்து குக் விலகினார். புதிய தலைவராக ரூட், ஸ்ரோக்ஸ், புரோட் மூவரையும் பரிசீலித்து வந்த இங்கிலாந்து கிரிக்கெட் சபை ரூட்டை தலைவராக நியமித்தது. உபதலைவராக இருந்த ரூட் தலைவராக நியமிக்கப்பட்டதை அடுத்து உபதலைவராக ஸ்ரோக்ஸ் நியமிக்கப்பட்டார்.

இங்கிலாந்து அணி ஜுலை மாதம் தென்னாபிரிக்காவுடன் டெஸ்ட் தொடரில் விளையாடவுள்ளது. இந்தத் தொடரே ரூட் தலைவராகக் களமிறங்கும் முதல் தொடராக அமையும். (ம)

# மாற்றங்கள் ஏதுமில்லாது இந்திய அணி அறிவிப்பு



ஆஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில், முதல் இரண்டு ஆட்டங்களுக்குமான இந்திய அணி நேற்று அறிவிக்கப்பட்டது. பங்களாதேஷுக்கு எதிரான தொடரில் இடம்பிடித்திருந்த அத்தனை வீரர்களும் அப்படியே அணியில் தொடர்கின்றனர். மாற்றங்கள் ஏதுமில்லாமல் இந்த அணி அறிவிப்பு வந்தமைந்தது.

இந்த இரு அணிகளுக்கும் இடையில் நான்கு ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடர் இந்தியாவில் நடைபெறவுள்ளது. ஆஸ்திரேலிய அணி ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் இந்திய அணி விவரம் நேற்று வெளியிடப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டது. இறுதியாக சில தினங்களுக்கு முன்னர் நடைபெற்று முடிவடைந்த பங்களதேஷுக்கு எதிரான தொடரில் இருந்த இந்திய அணியே ஆஸ்திரேலியாவை எதிர்கொள்ளவுள்ளது.

இந்திய அணி விவரம் - கோக்லி (தலைவர்), அஸ்வின், ஜடேயா, ரகானே, முரளி விஜய், புவனேஸ்வர் குமார், முகுந்த், கருண் நாயர், பாண்டியா, புஜாரா, ராகுல், சகா, இசாந் சர்மா, ஜெயந் யாதவ், உமேஸ் யாதவ், குல்தீப் யாதவ்.

காயத்தால் கடந்த சில வாரங்களாக ஓய்விலிருந்த முன்னணி துடுப்பாட்ட வீரரான ரோகித் சர்மா, காயத்தில் இருந்து மீண்டுள்ள போதிலும் அவர் அணியில் இணைத்துக் கொள்ளப்படவில்லை. (ம)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை
### பல்கலைக்கழக அனுமதி - 2016/2017
### உளச்சார்புப் பரீட்சை (Aptitude Test)
### மொழிபெயர்ப்புக் கற்கைநெறி
### (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

மேற்படி நான்கு வருட பட்டப்படிப்புக் கற்கைநெறிக்கு அனுமதி பெறவிரும்பும் தகுதியான விண்ணப்பதாரிகளிடமிருந்து **28.02.2017** ஆம் திகதி வரை விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

**அனுமதிக்கான பொது நிபந்தனைகளும் தகைமைகளும்**

மொழிபெயர்ப்புக் கற்கைநெறியைத் தெரிவு செய்வதற்கு விரும்பும் விண்ணப்பதாரிகள் 2016 ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த (உ/த) பரீட்சையில் சித்தியடைந்திருப்பதும் பல்கலைக்கழகமானியங்கள் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட 2016/2017 கைநூல் பக்கம் 86,பகுதி 2.2.8.28 இற்கு அமைய தகுதி பெற்றிருத்தல் வேண்டும்.

**உளச்சார்புப் பரீட்சை**

மேற்குறித்த கற்கைநெறி அனுமதிக்கான விண்ணப்பதாரிகள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தால் நடத்தப்படும் தமிழ் மற்றும் ஆங்கிலமொழித் திறமை அடிப்படையிலான உளச்சார்புப் பரீட்சைக்கு தோற்றுதல் வேண்டும்.

**விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல்**

விண்ணப்பதாரிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ள மாதிரிவிண்ணப்பப் படிவத்தை A-4 தாளில் தயாரித்தோ அல்லது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அனுமதிகள் கிளையில் பெற்றோ அல்லது **www.jfn.ac.lk** என்ற யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இணையத் தளத்திலிருந்து தரவிறக்கம் செய்தோ தகுதிகாண் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேற்படி தகுதிகாண் பரீட்சைக்கான விண்ணப்பத்துடன் ரூபா 300 ஐ ஏதாவதொரு மக்கள் வங்கிக் கிளையில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மக்கள் வங்கிக் கிளை, கணக்கு இலக்கம் 162100160000880 இல் செலுத்திப் பெற்றபற்றுச்சீட்டுடன் **பாடசாலை அதிபர் அல்லது சமாதான நீதவானால் உறுதிப்படுத்தப்பட்ட க.பொ.த (உ/த) 2016 பெறுபேற்றுப் பத்திரத்தினது போட்டோப் பிரதியும் அனுப்பப்படல் வேண்டும்.** பரீட்சைப் பெறுபேற்றில் அல்லது பெயரில் மாற்றங்கள் ஏதும் இருப்பின் அதற்குரிய சத்தியக் கடதாசி சமர்ப்பிக்கப்பட்டு உறுதி செய்யப்படல் வேண்டும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் யாவும் **28.02.2017** ஆம் திகதிக்கு முன்னதாக உதவிப் பதிவாளர், அனுமதிகள் கிளை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு கடிதஉறையின் இடது பக்கமேல் மூலையில் விண்ணப்பிக்கும் கற்கை நெறியைக் குறிப்பிட்டு பதிவுத் தபால் மூலம் அல்லது நேரில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

அனுமதிக்குரிய ஆகக் குறைந்த தகைமையை கொண்டிராததும், பணம் செலுத்திய பற்றுச் சீட்டுசமர்ப்பிக்கப்படாததும், பெறுபேற்றுப் பத்திரத்தின் உறுதி செய்யப்பட்ட போட்டோப்பிரதிகள் இணைக்கப்படாததும், விண்ணப்பமுடிவு திகதிக்குள் கிடைக்கப் பெறாததுமான விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.

பிரவேச அனுமதித் தகையைமைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகளுக்கு அனுமதிஅட்டை அனுப்பி வைக்கப்படும்

மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண் 021 222 6714.

பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
15.02.2017

### University of Jaffna,Srilanka
Faculty of Arts
University Admission -2016/2017
**Tamil and English**

**Bachelor of Arts (Special) in Translation Studies**

Application for Aptitude Test

1. Name with initials Tamil ______
   English ______
2. The Name denoted by initial ______
3. National Identy Card No ______
4. Permanent address (In English) ______
5. District ______
6. Telephone No ______ email address ______
7. District from which G.C.E (A/L) Examination 2016 was taken ______
8. Results of G.C.E(A/L) Examination 2016
   Index No ______ Z score ______ Generaal Test marks ______

| No | Subject | Grade | Medium |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |

9. Name of parents/Guardian ______
   Address (In English) ______
10. Documents to be submitted
    1. Receipt of paid amount ☐
    2. Certified photo copy of the G.C.E(A/L) sheet (including Z score and District) ☐
    3. Affidavit in support of any change in names appearing in different documents if any ☐

I certify that the above particulars submitted by me are true and accurate.

.................... Date ........................ Signature of applicant

## தென்னிந்திய திருத்தல யாத்திரை

தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடகா, கேரளா, பாண்டிச்சேரி ஊடான யாத்திரை

நாள்கள் 16, ஆரம்பம் 07.04.2017 யாத்திரீகர் 10, தரிசிக்கும் ஆலயங்கள், திருச்சி, உச்சிப்பிள்ளையார், பிள்ளையார்பட்டி, 9 நவக்கிரக ஆலயங்கள், தஞ்சாவூர், குருவாயூர், கன்னியாகுமரி, மைசூர், சாமுண்டீஸ்வரி, திருப்பதி, மேல்மருவத்தூர், பஞ்சபூதத் தலங்கள், பல சிவாலயங்களும், பொற்கோயில், ஆஞ்சனேயர் ஆலயங்கள், இராமேஸ்வரம், பைரவர் ஆலயங்கள் உட்பட 70இற்கு குறையாத ஆலயங்களை பூசை நேரத்தில் தரிசிக்கலாம். தவறாது விவரங்களைக் கேட்டு அறிக.

**எமது சேவை**

இருவழி விமான ரிக்கட், கொழும்பிலிருந்து விமானநிலையம் செல்லவும் திரும்பவும், வாகனவசதி, யாத்திரை முழுவதும் A.C.வாகன வசதி . மூன்று வேளை உயர்தர சைவ உணவு, காப்பி, ரீ, குடிநீர், இரண்டுபேருக்கு கட்டில் மெத்தை, குளியலறை இணைந்த அறைகளில் தங்கவைக்கப்படுவீர்கள் அத்துடன் ஆலய தரிசனக் கட்டணங்களும் அடங்கலாக விவரம் கேட்டறிந்து பதிவு செய்யவும்.

விவரங்களுக்கு:
கலாநிதி T. ஸ்ரீரெங்கநாதன், மகன் ராஜன்
59, 3/6, செட்டியார்தெரு, கொழும்பு - 11
077 768 0102/ 077 736 2154
Facebook: Sridevi Sriranganathan Thuraiappa

# தெ.ஆபிரிக்கா, நியூசிலாந்து ரி–20 ஆட்டம் நாளைமறுதினம்

தென்னாபிரிக்கா - நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான ரி-20 ஆட்டம் நாளைமறுதினம் நடைபெறவுள்ளது.

ஒரு ரி-20 ஆட்டம், 5 ஆட்டங்கள் கொண்ட ஒருநாள் தொடர், மூன்று ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடர் ஆகியவற்றில் விளையாடுவதற்காக தென்னாபிரிக்க அணி நியூசிலாந்துக்குச் சென்றுள்ளது. தொடர் நியூசிலாந்தில் நடைபெறுவதால் நியூசிலாந்து அணியின் ஆதிக்கம் மேலோங்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்ற போதிலும், உலகக்கிண்ணத் தொடரின் அரையிறுதியில் அடைந்த தோல்விக்கு பதிலடி கொடுப்போம் என்று வில்லியர்ஸ் எச்சரித்ததால் இந்தத் தொடர் பெரிதும் எதிர்பார்க்கப்படுகிறது. (ம)





# தரப்படுத்தலில் முர்ரே முதலிடம்

## நடால், பெடரர் முன்னேற்றம்

பன்னாட்டு ரென்னிஸ் ஆண்கள் பிரிவு தரப்படுத்தல் நேற்றுப் புதுப்பிக்கப்பட்டது. பிரிட்டன் வீரர் முர்ரே முதலிடத்தில் தொடர்கிறார். ரபேல் நடால், றோயர் பெடரர் இருவரும் பெரும் முன்னேற்றம் கண்டனர்.

நடப்பு வருடத்தின் முதலாவது பன்னாட்டு அந்தஸ்துப் பெற்ற தொடராக ஆஸ்திரேலியத் தொடர் நடைபெற்று முடிந்தது. இறுதியாட்டத்துக்கு நடாலும் பெடரரும் தகுதி பெற்றிருந்தனர். பெடரர் சம்பியனானார். இதனையடுத்தே அவர்களுக்கு தரப்படுத்தலில் முன்னேற்றம் கிடைத்தது.

தொடர் ஆரம்பிப்பதற்கு முன்னதாக நடால் 10ஆவது இடத்தில் இருந்தார். ஆஸித் தொடரில் இரண்டாவது இடத்தை கைப்பற்றியதை அடுத்து அவர் 6 ஆவது இடத்துக்கு முன்னேறினார்.

கடந்த 6 மாதங்களாக காயம் காரணமாக விலகியிருந்த பெடரர், தரப்படுத்தலில் 20 ஆவது இடத்தில் இருந்தார். சம்பியனானதை அடுத்து அவர் 10 ஆவது இடத்துக்கு முன்னேறினார்.

11 ஆயிரத்து 540 புள்ளிகளுடன் முர்ரே முதலிடத்திலும் 9 ஆயிரத்து 825 புள்ளிகளுடன் ஜோகோவிக் இரண்டாவது இடத்திலும், 5 ஆயிரத்து 695 புள்ளிகளுடன் வாவ்ரிங்கா மூன்றாவது இடத்திலும், 4 ஆயிரத்து 930 புள்ளிகளுடன் ரயோனிக் நான்காவது இடத்திலும், 4 ஆயிரத்து 830 புள்ளிகளுடன் நிசிகோரி ஐந்தாவது இடத்திலும் உள்ளனர்.

ஆறு முதல் 10 வரையிலான இடங்களில் முறையே நடால், சிலிச், திம், மொன்பில்ஸ், பெடரர் ஆகியோர் உள்ளனர். (ம)

## இலங்கையில் முதல்தடவையாக

பெண்களுக்கு பொருத்தமான பாடநெறிகளைக் கொண்ட அழகுக்கலைப் பயிற்சிக் கல்லூரி

ஒளிஅழகன் ஸ்ரூடியோ
British College Of Beauty Studies
இணைந்து நடத்தும் பயிற்சி வகுப்புக்கள்



புதிய அழகுக்கலை
பயிற்சி வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.

18.02.2017 அன்று காலை 10.30 To 12.30
18.02.2017 அன்று மதியம் 01.00 To 02.30
இரண்டு புதிய பிரிவுகள் ஆரம்பமாகவுள்ளன.

- வெளிநாடு செல்பவர்களுக்காக வடிவமைக்கப்பட்ட குறுகியகால பயிற்சி வகுப்பையும் பெற்றுக்கொள்ள முடியும்.
- பெறுமதி வாய்ந்த சான்றிதழே வழங்கப்படும்.
- உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் சொந்த தொழில் பெற்றுக்கொள்ள முடியும்.
- இந்த வகுப்பில் இணையும் மாணவர்களுக்கு கட்டணக்கழிவு வழங்கப்படும்.
- மட்டுப்படுத்தப்பட்ட மாணவர்களே அனுமதிக்கப்படுவர்.
- இணைய விரும்புவோர் நேரில் வருகைதரவும்.

பலாலி றோட், திருநெல்வேலிச்சந்தி, யாழ்ப்பாணம்.
உதயன் பணிமனை அருகில், கஸ்தூரியார் றோட், யாழ்ப்பாணம்.

## மீண்டும் மூன்றாவது தடவையாக
ஓர் அரிய சந்தர்ப்பம் தவறவிடாதீர்கள்

## வெளிநாட்டு வேலைவாய்ப்பு - மலேசியா

மலேசியாவிலுள்ள பிரபல்யமான ஆடைத் தொழிற்சாலை ஒன்றுக்கு உற்பத்தி உதவியாளர்களுக்கான விண்ணப்பம் கோரப்படுகிறது.

| JOB CATEGORY | QTY | SALARY (RM) |
| --- | --- | --- |
| 01. உற்பத்தி உதவியாளர் (பெண்) | 20 | 1200+OT |
| 02. உற்பத்தி உதவியாளர் (ஆண்) | 80 | 1200+OT |

**நிபந்தனைகள்**

- இலவச தங்குமிட வசதி மற்றும் மருத்துவ வசதி 3 வருடங்கள்
- வேலை நேரம் 08 மணித்தியாலங்கள். மேலதிகமாக வேலை செய்யும் நேரத்துக்கு 1.6 வீதமும் சனிக்கிழமை நாட்களில் இரண்டு மடங்கு கொடுப்பனவும் வழங்கப்படும்.
- வாரத்தில் இரண்டு நாட்கள் ஓய்வு / விடுப்பு வழங்கப்படும்.
- முன்னனுபவம் தேவையில்லை
- வயது எல்லை 18 - 35
- அரசாங்க பயண அனுமதிக்கட்டணம் ரூபா 50, 000
- வங்கிக்கடன் வசதி செய்து தரப்படும்.
- பொருத்தமானவர்கள் தங்கள் சுயவிவரம், புகைப்படம், கடவுச்சீட்டு, அடையாளஅட்டை ஆகியவற்றுடன் நேர்முகத்தேர்வுக்கு சமுகமளிக்கவும்.

இடம் - சுபாஸ் விருந்தினர் இல்லம், விக்டோரியா வீதி, யாழ்ப்பாணம். (யாழ். ஆஸ்பத்திரி பின் வீதி)
காலம் - 18.02.2017 சனிக்கிழமை காலை 9 மணி
முன்பதிவுகளுக்கு : யாழ்ப்பாணம் - 077 972 9481, 076 718 3799
கொழும்பு - 011 5244446

Capital Recruitment International (Pvt) Ltd.
No. 130 3/1, 3rd Floor, Grand Pass, Colombo-14.
அரச அனுமதி இலக்கம் LL No : 2248

# இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் வார்த்தை மோதல்கள் நிச்சயம் இருக்கும்

## இவ்வாறு தெரிவித்தார் ஸ்ரீவ் சிமித்

இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில், வார்த்தை மோதல்கள் நிச்சயம் இருக்கும் என்று ஆஸ்திரேலிய அணித்தலைவர் சிமித் தெரிவித்தார்.

நான்கு ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடர் இந்த இரு அணிகளுக்கும் இடையில் நடைபெறவுள்ளது. முதலாவது ஆட்டம் புனேயில் எதிர்வரும் 23 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. இந்தத் தொடருக்கான ஆஸ்திரேலிய அணி இந்தியா வந்தடைந்துள்ளது. நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே சிமித் இவ்வாறு தெரிவித்தார்.

எங்கள் அணியின் ஒவ்வொரு வீரரும் அவர்கள் விரும்பும் வழியில் விளையாட நினைப்பவர்கள். எனவே இந்திய வீரர்களுடன் வார்த்தை பரிமாற்றங்களில் ஈடுபடுவது எங்கள் அணிவீரர்களின்திறமையை கூடுதலாக வெளிக் கொணரும் என்றால் வார்த்தை மோதலை நான் ஆதரிக்கவே செய்வேன்.

தனிவீரர்களாக சரியான மன நிலையில் இருப்பதையும் வெற்றிபெறுவதையும் அவர் கள் உறுதி செய்ய மேற்கொள்ளப்படுவதே வார்த்தைமோதல். வார்த்தை மோதலால் இந்திய வீரர்களுக்கு பதற்றத்தை ஏற்படுத்த முடியுமாயின் எமது வீரர்கள் தாராளமாக அதைச் செய்யலாம் என்று சிமித் மேலும் தெரிவித்தார்.

இந்தத் தொடரில் ஆஸ்திரேலிய வீரர்கள் வார்த்தைமோதலுக்குச் செல்லக்கூடாது. அவ்வாறு சென்றால் அது ஆஸ்திரேலியாவுக்கே பாதகமாக முடியும் என்று கிரிக் கெட் வர்ணனையாளர் இயன் சப்பல் முன்னதாகத் தெரிவித்திருந்தார். (ம)

## SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE

இம்முறை O/L எழுதியோர், இளைஞர், யுவதிகள், தொழில் தேடுவோர், வெளிநாடு செல்வோர் உயர்கல்வி மாணவர்கள் இணைய முடியும்.

ஆங்கிலத்தில் ஏஎமத்துத்தெரியாதவர்கள்கூட மூன்றே மாதங்களில் சரளமாக ஆங்கிலத்தில் பேசமுடியும்!

சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம்–18.02.2017

| | | | |
| --- | --- | --- | --- |
| 1. காலை | 08.00-10.00 | 3. பி.பகல் | 01.00-03.00 |
| 2. காலை | 10.00-12.00 | 4. மாலை | 03.00-05.00 |

1. வாரநாள் பிரிவுகள் : (திங்கள், புதன் ) காலை 8–10 காலை 10–12
2. வாரநாள் பிரிவுகள் : (செவ்வாய்,வியாழன்) காலை 8–10 காலை 10–12

SAAMSON
Experts in English Training
279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர்.
021 320 3313
077 1570 486

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 15.02.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.